# சனத்தொகைக் கல்வி

மேலதிக வாசிப்பு நூல்

## நமது நாட்டில் மக்கள் வாழ்க்கை – அன்றும் இன்றும்

7 ஆம் ஆண்டு

சனத்தொகைக் கல்விக் குழு
இலங்கை கல்வி அமைச்சின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனத்தொகைக் கல்வி

## நமது நாட்டில் மக்கள் வாழ்க்கை
## அன்றும் இன்றும்

7 ஆம் ஆண்டு

சனத்தொகைக் கல்விக் குழு
இலங்கை கல்வி அமைச்சின் வெளியீடு
1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர்: **ஸ்ரீமதி மல்லிகா ஆர். சமரநாயக்க**

**சனத்தொகைக் கல்விக் குழு**

**திரு. டபிள்யூ. எஸ். பெரேரா**
*சனத்தொகைக் கல்விச் செய்திட்டப் பணிப்பாளர்*

**ஸ்ரீமதி ஆர். ஸி. ஜயவர்தன**
*சனத்தொகைக் கல்விச் செய்திட்டப் பிரதிப் பணிப்பாளர்*

**திரு. ஆர். டபிள்யூ. பெரேரா**
*வேலைத் திட்ட அதிகாரி*

**ஸ்ரீமதி டி. டி. பி. ஜயக்கொடி**
*வேலைத் திட்ட அதிகாரி*

## ஆலோசனைக் குழு

1. **திரு. டி. ஏ. பெரேரா**
   *பிரதான ஆலோசகர், கல்வி அமைச்சு*
2. **பேராசிரியர் ஜே. ஈ. ஜயசூரிய**
   *முன்னைய ஆலோசகர், சனத்தொகைக் கல்வி, ஆசிய நாடுகளிற் கல்வி தொடர்பான யுனெஸ்கோ பிரதேச அலுவலகம், பாங்கொக்*
3. **பேராசிரியர் நந்ததாஸ கோதாகொடை**
   *சட்ட மருத்துவ அலகு, வைத்திய பீடம், கொழும்பு*
4. **திரு. டி. பி. விஜேகுணசேகர**
   *பணிப்பாளர், சனத்தொகை அலகு, திட்ட அமுலாக்கல் அமைச்சு*
5. **டாக்டர் திலக் முணசிங்ஹ**
   *உதவிப் பணிப்பாளர், சுகாதாரக் கல்வி அலுவலகம்*
6. **திரு. அல்பர்ட் ஜே. பர்ணந்து**
   *செய்திட்டப் பணிப்பாளர், சனத்தொகைத் தகவல் நிலையம்*

*சித்திரம்:*
**கே. விக்டர்சிரி**

*தமிழாக்கம்:*
**ஸ்ரீமதி பி. சிவகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூல் பற்றிச் சில வார்த்தைகள் . . . . . . .

மேலதிக வாசிப்புக்கான இந்நூல், யுனெஸ்கோ தாபனம், ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சனத்தொகை நடவடிக்கைகளுக் கான நிதியம் என்பவற்றின் அனுசரணையுடன், இலங்கைக் கல்வி அமைச்சின் சனத்தொகைக் கல்விக் குழுவினுற் தயாரிக்கப்பட்டு உங்கள் கையில் சமர்ப்பிக்கப்படும் நூல் வரிசையில் ஒன்ருகும்.

சனத்தொகைக் கல்வி நிகழ்ச்சித் திட்டம் பாடசாலை மட்டத்தில், 1973 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. இந்நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பான விடய அடக்கம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, சுகா தாரக் கல்வி, கணிதம் போன்ற பாடங்களினூடாக உங்களுக்கு ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


கனிஷ்ட இடைநிலை வகுப்புகளிற் கற்கும் மாணவர்களுக்காகத் தயாரிக்கப்படும் இம்மேலதிக வாசிப்பு நூல்களின் மூலம், சனத் தொகைக் கல்வியுடன் தொடர்பான அறிவைத் தெரிவு செய்யப் பட்ட தலைப்புகள் சிலவற்றின் கீழ், முன்னரைவிட விரிவான வகையில் உங்களுக்கு அளிப்பதே நமது பிரதான குறிக்கோளாகும்.

எதிர்காலத்தில் இலங்கையின் சனத்தொகை நிலைமை எப் படியாக அமையும் என்று திடமான முடிவு எதையும் செய்ய இயலாது. ஒரு வேளை அது, இப்போதுள்ளதைவிட மேலும் சிக் கார்ந்ததாகவும் மாற முடியும். அண்மை எதிர்காலத்தில், சனத் தொகை தொடர்பான பிரச்சினைகளை இன்றைய இளைய தலை முறையினரே எதிர்நோக்க வேண்டி நேரும். அவ்விளைய தலை முறையினர் நீங்களே. அப்பிரச்சினைகளுக்குச் சிற்சில தீர்வுகளைக் காண வேண்டியதும் நீங்களே. முடிந்த அளவில் உண்மைகளை ஆராய்ந்து பார்த்துப் பாரபட்சமற்ற தீர்மானங்கள் மேற்கொள் ளப்பட வேண்டும். நிலைமைக்குகந்ததும், பாரபட்சமற்றதுமான தீர்மானங்களைச் செய்வதற்கு உதவும் எனக் கருதப்படும் அறிவை யும் மனப்பாங்குகளையும் பற்றிய அடிப்படை விளக்கத்தை இந் நூல்கள் மூலமாக அளிப்பதற்கு முயற்சி செய்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நமது நாட்டில் மக்கள் வாழ்க்கை
# அன்றும் இன்றும்


| | | |
|---|---|---|
| 1. | நாம் வாழும் மக்கள் சமூகம் | 1 |
| 2. | இலங்கையின் சனத்தொகை | 8 |
| 3. | நமது மக்கள் சமூகத்தின் பொருளாதாரப் பாங்கு | 19 |
| 4. | மக்கள் தேவைகள்: உணவு | 27 |
| 5. | மக்கள் தேவைகள்: உடை | 35 |
| 6. | மக்கள் தேவைகள்: உறையுள் | 43 |
| 7. | மக்கள் தேவைகள்: சுகாதாரமும் உடனலம் பேணலும் | 49 |
| 8. | மக்கள் தேவைகள்: கல்வி | 55 |
| 9. | மக்கள் தேவைகள்: தொழில் | 63 |
| 10. | சனத்தொகைப் பாங்கு: போக்குவரத்துத் தொகுதி | 69 |
| 11. | செய்திப் பரிமாற்ற முறைகள் | 79 |
| 12. | விவசாயமும் நீர் வழங்கலும் | 83 |
| 13. | தேசிய ஒற்றுமையின் அவசியம் | 89 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 1. நாம் வாழும் மக்கள் சமூகம்

மக்கள் ஒன்றுகக் குழுமிக் கூடும் சந்தர்ப்பங்கள் பலவற்றை நாம் கண்டுள்ளோம். பொருள்களை வாங்குவதற்கு நாம் சந்தைக் குச் செல்கின்றோம். அங்கு நாம் சந்திக்கும் மக்கள் மீது சற்றுக் கவனஞ் செலுத்துவோம். இவர்கள் எல்லோரும் மனிதர்களே யெனினும், இவர்களிடேயே நாம் காணக்கூடிய வேறுபாடுகள் பல. ஆண்கள் காணப்படுகின்றனர்; பெண்கள் காணப்படுகின் றனர்; வயோதிபர் காணப்படுகின்றனர்; நடுத்தர வனதியர் காணப் படுகின்றனர்; இளைஞர் காணப்படுகின்றனர்; சிறுவர்கள் காணப் படுகின்றனர்; குழந்தைகளை ஏந்திய தாய்மார் காணப்படுகின் றனர். மக்கள் ஆண், பெண் அடிப்படையிலும் வயது அடிப்படை யிலும் வேறுபடுகின்றனர் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. எந்தவொரு நாட்டிலும் இத்தகைய பல்வேறு வயதுக் குழுக்கள் இருக்கக் காணலாம்.

தத்தமக்குத் தேவையான பல்வேறு பொருள்களையும் விலை கொடுத்து வாங்கும் அத்தனை பேரும் பணம் சம்பாதிப்போரல்ல. ஒரு குடும்பத்தினது அல்லது ஒரு நாட்டினது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பணத்தை அல்லது மூலதனத்தைச் சம்பாதிக்கும் பொறுப்பு இளைஞரையும் நடுத்தர வயதினரையுமே சாரும். மனைவி மக்களுக்கு உணவளிப்பது, வயோதிபப் பெற் றோருக்கும் உறவினருக்கும் உதவி செய்வது, அன்புக்குரியோரிட மும் அயலவரிடமும் கரிசனை காட்டுவது என்பன நமது சமூகத்தில் காணப்படும் உயர்ந்த பண்புகளாகும். அதே போன்று முக்கியம் வாய்ந்த கடமைகளும் உண்டு. எனினும் இக்கருமங்கள், 15 வயதுக்கும் 64 வயதுக்கும் இடைப்பட்டவர்களான வருமானம் சம்பாதிக்கும் வல்லமையுள்ள வயதினரின் பொறுப்பாகும். ஆனு லும், இவ்வயதெல்லையிலுள்ள அனைவருக்கும் தொழில் வாய்ப்பு கள் இல்லை. இது தொடர்பாக, 1981 ஆம் ஆண்டில் இலங்கையின் நிலைமையை முதலாம் படத்தைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

குடிநிலைப் புள்ளியியல் எண்ணக் கருவுக்கமையக் குறிப்பிட்ட ஒரு விதத்தில் சார்ந்திருப்போா விகிதத்தைக் கணக்கிடும் முறை ஒன்று பாவனையில் உள்ளது. இது தொடர்பான விடயங்களைக் கற்கும் சந்தர்ப்பத்தை நீங்கள் 9 ஆந் தரத்தில் பெறுவீர்கள். உழைப்போரின் மீது சார்ந்திருப்போரின் சுமை அமைந்துள்ள விதத்தையே இப்படம் காட்டுகிறது. 65 வயதிற்கு மேற்பட்டோர், 15 வயதிற்கும் 64 வயதிற்கும் இடைப்பட்டோராக இருந்த காலகட்டத்தில் அப்பொறுப்பைத் தாங்கிக் கொண்டமையையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 1

15 வயதிற்குக் கீழ்ப்பட்டோர் எதிர்காலத்தில் அப்பொறுப்பை வகிக்கும் நிலைக்கு வருவார்கள் என்பதையும் நாம் மறக்கலாகாது. சிலர் தாம் சேமித்த பணத்தை அல்லது இளைப்பாற்றுச் சம்பளத்தைத் தம் வாழ்க்கைச் செலவிற்குப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களையும் நாம் காண முடியும்.

நாம் அன்றாடம் சந்திக்கும் மக்களிடையே வெவ்வேறு மொழிகளைப் பேசுவோரைக் காண்கிறோம்; பல்வேறு சமயங்களைப் பின்பற்றுவோரைக் காண்கிறோம். நமது நாட்டுச் சமூகம் இவ்வாறு வேறுபடும் விதம்பற்றி அறிந்து கொள்வது பயனுடையதாக அமையும். நாம் எல்லோரும் இந்நாட்டைச் சேர்ந்தோராதலால் ஒருவரோடொருவர் சமாதானமாக வாழ வேண்டுமேயாயின் இவ் வேறுபாடுகளைச் சரியான முறையில் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம். பின்னால் வரவிருக்கும் ஒரு பாடத்தில் இது பற்றி விரிவாக ஆராய்ந்து பார்ப்போம்.

சந்தையில், தெருவில், விழாக்களில் நாம் சந்திக்கும் மக்களிடையே காணப்படும் மற்றும் ஒரு அம்சத்தையும் கவனிப்போம். அவர்களின் ஆடை அணிகளைப் பாருங்கள். இங்கும்கூட வேறுபாடுகளையே காண முடிகிறது. இவர்களுடைய ஆடை அணிகள் இவர்கள் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதைப் பொறுத்து வேறுபடுவதை நீங்கள் காணலாம். சிங்களவர், தமிழர், முஸ்லிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஆகியோரைப் பெரும்பாலும் உடையைக்கொண்டு இனங்கண்டு கொள்ள முடியும். பல்வேறு இனத்தவர்கள் பற்றியும் அவர்களுடைய கலாசாரங்கள் பற்றியும் கற்கும்போது, இவர்கள் தத்தமக்குரிய மரபுவழி வந்த ஆடை அணிகளை அணிகிறார்கள் என்பதும் தத்தமக்குச் சிறப்பான பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறார்கள் என்பதும் நமக்கு விளங்கும். இத்தகைய கலாசார வேறுபாடுகளை விளங்கிக்கொள்வதற்கும் அவற்றை ஏற்றுக்கொள்வதற்கும் அவற்றை மதித்து நடப்பதற்கும் நாம் பழகிக்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வேறுபாடுகள் நமது சிறிய நாட்டிற்குரிய உன்னத வளமாகும்.

சந்தையில் நாம் சந்திப்போர் பணம் கொடுத்து வாங்கும் பல்வேறு பொருள்கள் பற்றிச் சற்றுக் கவனிப்போம். இவர்கள் அனைவரும் ஒரு மனித சமூகத்தின் அங்கத்தவர்களாக இருந்த போதிலும், தம்மிடமுள்ள பணத்துக்கொப்பவே இவர்களால் பொருள்களை வாங்க முடியும். அதிக விலை கொடுத்து பால், வெண்ணெய், பாற்கட்டி, இறைச்சி, மீன் போன்ற போஷாக்கு மிக்க ஆகார வகைகளைக் கொள்வனவு செய்வோரைக் காணலாம். அதே போன்று அத்தியாவசிய உணவுப் பொருள்களாகிய அரிசி, மா, சீனி, பாண் போன்றவற்றை மட்டும் வாங்குவதுடன் திருப்தியடைவோரையும் காணலாம். இவர்களுடைய தேவைகள், பணம் படைத்தோரின் தேவைகளைவிடக் குறைவாக அமைந்திருப்பது இதற்குக் காரணமல்ல. அவர் அவர் சம்பாதிக்கும் பணத்திற்குப் பொருந்தும் வகையில் பொருள்களை வாங்க வேண்டியிருப்பதே இதற்குக் காரணமாகும். இப்படியாகப் பார்க்கும் பொழுது, நாம் வாழும் சமுதாயத்தில், அவரவரது வருமான நிலைக்கேற்ப நிலவுகின்ற வேறுபாடுகளை நாம் தெளிவாகக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதேபோன்று அவ்வேறுபாடுகளை, அவர்களுக்கு வருமானத்தைத் தரும் அவரவர்கள் ஈடுபட்டுள்ள தொழில்களும் எடுத்துக் காட்டுகின்றன என்று கொள்ள இடமுண்டு. இச் சந்தர்ப்பத்தில், நாம் வாழும் சமூகம் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டுமேயானால், வருமானம் தொடர்பான வேறுபாடுகள், தொழில் சம்பந்தமான வேறுபாடுகள் போன்றன பற்றிக் கற்க வேண்டியது அவசியம்.

இன்றைய மக்கள் சமூகத்தில் சனத்தொகை விரைவாக அதிகரித்து வருகின்றது என்பதை நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள். சமூகத்தின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்ய முயலும் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு அதிகரித்துவரும் சனத்தொகையும் ஒரு காரணமாகும். வருடா வருடம் அதிகரித்துச் செல்லும் இம்மக்களின் தேவைகள் பலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உணவும் பானங்களும்



2. ஆடை அணிகள்



3. வீடு வாசல்கள்



4. நில புலங்கள்



5. தொழில்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **கல்வி வசதிகள்**





7. **சுகாதார வசதிகள்**



8. **விளையாட்டும் பொழுதுபோக்கும்**

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்தும் சமூகத்துக்கு அவசியமான அளவில் வழங்கப்பட வேண்டும் என்பது எதிர்வரும் அத்தியாயங்களில் விளக்கப்படுகின்றது.

சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் நாம் அனைவரும் நாம் வாழும் சமூகம், அது அமைக்கப்பட்டுள்ள விதம், அதனுடன் தொடர்பான பிரச்சினைகள் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். சரியான முறையில் விடயங்களை விளங்கிக் கொண்ட அங்கத்தவர்கள் இருப்பது, மக்கள் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அச்சமூகம் நின்று நிலைப்பதற்கும் உதவியாக அமையும். அதே போன்று, சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரினதும் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்வுக்கும் அது காரணமாக அமையும்.

ஏழாம் ஆண்டில் கற்கும் நீங்கள் இச்சமூகப் பிரச்சினைகளை வருங்காலத்தில் எதிர்நோக்க நேரும். அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் நீங்கள் வழங்க வேண்டி நேரலாம். எனவே, நாம் வாழும் சமூகம், அதன் தன்மை, அது எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள் என்பன பற்றி அறிந்து கொள்வதற்கு முயலுவோம்.

**செயன்முறைகள்:**

1. கண்ணனின் குடும்பம் பற்றிக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் படியுங்கள்.

12 வயதான கண்ணன் உங்களைப் போன்று 7 ஆம் ஆண்டில் கற்று வருகிறான். அவனுக்கு மூத்த சகோதரர்கள் இருவர். 20 வயதான ரகு பல்கலைக் கழகத்தில் பொறியியற் பீடத்திற் கற்று வருகின்றான். 16 வயதான அநந்தன் 10 ஆம் ஆண்டில் கற்கின்றான். 10 வயதான இவனது தங்கை 5 ஆந் ஆண்டில் கற்கின்றாள்.

கண்ணனின் தந்தை ஓர் அரசாங்க ஊழியர். அவருக்கு வயது 48. கண்ணனின் தாயாருக்கு வயது 47. அவர், வீட்டு விவகாரங்களை நன்கு கவனித்து வருபவர். தொழில் செய்பவரல்ல. தந்தை சம்பாதித்துத் தருவதை மிகக் கவனமாகப் பயன்படுத்துவது அவரது பொறுப்பு. கண்ணன் அவனுடைய பாட்டனார் மீது மிகவும் வாத்சல்யம் கொண்டவன். 70 வயதான அவர், பழைய கதைகளைச் சுவைபட விரித்துக் கூறுவார். 65 வயதான கண்ணனின் பாட்டியாரும் அங்கு தான் வாழ்ந்து வருகிறார்.

2. மேலே தரப்பட்டுள்ள விபரங்களை உதவியாகக் கொண்டு கண்ணனின் குடும்பத்தவர்களை வயதடிப்படையில் அடுத்த பக்கத்திலுள்ள அட்டவணையிற் குறிப்பிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | கண்ணனின் குடும்பத்தவர் | வயது 0-14 | வயது 15-64 | வயது 65 இற்கு மேல் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |
| 8. | | | | |

3. கீழே உள்ள வினுக்களுக்கு விடை அளியுங்கள்.

(1) கண்ணனின் வீட்டில் வாழ்வோரின் தொகை என்ன?

(2) கண்ணனின் வீட்டில் வாழ்வோரில் எத்தனை பேர் உழைத்து வருமானம் பெறுகிருர்கள்?

(3) கண்ணனின் வீட்டில் இருப்போரில் சார்ந்து வாழ்வோர் எத்தனை பேர்?

(4) இக்குடும்பத்தில் வருவாய் சம்பாதிக்கக்கூடிய வல்லமை உள்ளோர் எத்தனை பேர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. இலங்கையின் சனத்தொகை

வேறு நாடுகளில் போன்று, இலங்கையிலும், ஆதிகாலத்தில், மக்கள் கற்குகைகளில் வாழ்ந்தனர். சூழலில் இருந்து சேகரித்துக் கொள்ளக்கூடிய பொருள்களையே அவர்களது உணவாகக் கொண்டனர். அக்காலத்தில் சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய கிழங்கு வகைகள், கீரை வகைகள், வேட்டையாடிய மிருகங்களின் இறைச்சி, பழ வகைகள் என்பனவே பெரும்பாலும் இவர்களின் ஆகாரமாக அமைந்தது. அக்காலத்தில் சனத்தொகையும் குறைவாகவே காணப்பட்டது.

கி.மு. ஏறத்தாழ 6 ஆம் நூற்றுண்டில் வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த ஆரியர்கள், உலர் வலயத்திற் குடியேறி விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டனர். விவசாயத்திற்குச் சாதகமான சூழ்நிலை இங்கு நிலவியதால், குடியேற்றங்களைப் போன்று சனத்தொகையும் படிப்படியாக அதிகரித்தது. காலஞ் செல்லச் செல்ல மழை நீரின் உதவியுடன் மட்டும் பயிர் செய்தல் போதியதாக அமையாமையினுல் குளங்களும் நீர்ப்பாசன முறைகளும் அமைக்கப்பட்டன. ஆகவே, குளங்களையும் நீர்ப்பாசனத் திட்டங்களையும் அமைத்தல் பற்றிய கருத்து இந்த ஆதிக் குடியேற்றங்களில் நிலவியது. இதன் மூலம் விவசாயம் வளர்ச்சியுற்றது மட்டுமன்றி, இது சனத்தொகை வளர்ச்சிக்கும் காரணமாகியது.

கி.மு. 3 ஆம் நூற்றுண்டில் மகிந்தன் இலங்கைக்கு வருகை தந்ததுடன், உன்னதமான சமய, கலாசார, பொருளாதார அபிவிருத்தி ஆரம்பமாகியது. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பௌத்த சமூக முறை ஒன்று இவ்வண்ணம் தோன்றியது. இந்தியா போன்றதொரு பெரிய நாட்டிற்கு அருகாமையில் அமைந்திருப்பதனுல் இந்தியாவின் பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் செல்வாக்கிற்கு இலங்கை இலக்காகியபோதிலும், நமது என்று கூறிக்கொள்ளக்கூடிய ஒரு வித்தியாசமான சமூகப் பாங்கு நம்நாட்டில் வளர்ச்சியுற்றமைக்கு பௌத்த சமயமே காரணமாகும்.

சென்ற காலத்தில் வியாபாரத்தின் பொருட்டு இங்கு வந்த கிரேக்க, அராபிய இனத்தவர் காரணமாகவும் இந்திய இராச்சியங்களிலிருந்து வந்த சேர (கேரள), சோழ, பாண்டிய இனத்தவர் காரணமாகவும் நமது சனத்தொகை மேலும் சிக்கார்ந்ததாகியது.

புராதன இலங்கையில் குறிப்பிடத்தக்களவு சனத்தொகை காணப்பட்டமைக்கு ஆதாரங்கள் உண்டு. எனினும், சனத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் எண்ணிக்கை தொடர்பாக நிச்சயமான முடிவுக்கு வருதல் கடினம்.

(i) மகாவம்சம், சூளவம்சம் போன்ற பண்டைய நூல்களிலுள்ள குறிப்புக்களின்படி பார்த்தால் அக்காலத்தில் மக்கள் பெருமளவில் வாழ்ந்தனர் என்பது புலனாகும். புராதன நகரங்கள், விகாரைகள் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பவற்றின் இடிபாடுகள் இக்கருத்தை வலியுறுத்துவதற்கு உதவுகின்றன.

அன்று கட்டப்பட்ட பெரிய குளங்களும் நீர்ப்பாசனத் திட்டங்களும் இன்று வரை பயன்படுத்தப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். இத்தகைய ஏறத்தாழப் பத்தாயிரம் குளங்கள் இருந்தன என்று கண்டறியப்பட்டுள்ளது.

(ii) புராதன உலகில் மிகப் பெரிய நிருமாணங்களில் இடம் பெறும் அபயகிரி, ருவன்வலிசாய போன்ற தாதுகோபங்களையும் மின்னேரியா, பராக்கிரம சமுத்திரம், கலா வாவி போன்ற குளங்களையும் அங்கிருந்து அநுராதபுரம் வரை வெட்டப்பட்ட யோத அல, புராதன மாதுறு ஓயா நீர்த் தேக்கக் குளக்கட்டுப் போன்றவற்றையும் நிருமாணிப்பதற்கு வல்லமை வாய்ந்ததும் அளவில் பெரியதுமான தொழிற்சேனை அவசியப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய நிருமாணிப்புகளின் பொருட்டு, அவசியப்பட்ட தொழிற்சேனையைச் சூழவுள்ள பிரதேசங்களிலிருந்து பெறக்கூடியதாக இருந்தமை முக்கிய காரணிகளுள் ஒன்றாகக் கொள்ளப்பட முடியும்.

(iii) இன்று, உலர் வலயம் என்று கருதப்படும் பிரதேசங்களில் ஆதிக் காடுகள் காணப்படாமை, அப்பிரதேசக் காடுகள் குடியேற்றங்களை அமைக்கும் பொருட்டுப் பண்டைய காலத்தில் அழிக்கப்பட்டன என்பதற்குச் சான்று பகருகின்றன.

(iv) புராதன மாளிகைகள், விகாரைகள், வைத்தியசாலைகள், தருமச் சத்திரங்கள், ஆலயங்கள் போன்றவற்றின் இடிபாடுகள் கடந்த காலத்தில் செறிவான சனத்தொகை இருந்தமைக்குச் சான்று பகருகின்றன.

எனினும், பிற்காலத்தில் ஏற்பட்ட, பகைவர்களின் ஆக்கிரமிப்புகளின் விளைவாக,

* நீர்ப்பாசனத் திட்டங்கள் அழிந்தன.
* விகாரைகள் இடிபாடுகளாக மாறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சமூக ஒழுங்கமைப்பு குலைந்தது.
* உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது.
* நோய் நொடிகள் பரவின.

இக்காரணங்களினால் சனத்தொகை பெருமளவில் குறைந்தது மட்டுமன்றிச் சனத்தொகை மிகுந்து காணப்பட்ட பிரதேசங்கள் சனத்தொகை குன்றிய பிரதேசங்களாக மாறின.

(i) பண்டைய காலத்தில் உலர் வலயத்தில் வாழ்ந்த மக்கள், தென் இந்திய ஆக்கிரமிப்புகள் காரணமாகப் பிற்காலத்தில், முக்கியமாகத் தென் மேற்குப் பிரதேசத்திற்குப் புலம் பெயர்ந்தனர்.


(ii) பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில், 1818 ஆம் ஆண்டிலும் 1848 ஆம் ஆண்டிலும் குடியேற்ற ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட கலகங்களை அடக்குவதற்காக ஆட்சியாளர்கள் பின்பற்றிய குரூரமான நடவடிக்கைகள் காரணமாக வெல்லஸ்ஸ போன்ற பிரதேசங்கள் மக்கள் அற்ற பிரதேசங்களாக மாறின.

(iii) 'ராஜகாரிய முறை' என்று வழங்கப்பட்ட சம்பிரதாயமான சமூக ஒழுங்கு முறை ஒழிக்கப்பட்டமையை முற்போக்கான நடவடிக்கை என்று கொள்ளலாம். எனினும், ராஜகாரிய முறையை அடிப்படையாகக் கொண்டு பேணப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள், ராஜகாரிய முறை நீக்கப்பட்டமையினாலும் அதன் இடத்தில் மற்றொரு செயல் முறை பின்பற்றப்படாமையினாலும், கைவிடப்பட்ட காரணத்தினால் சில மக்கட் குழுக்களுக்கு வாழ வகை அற்றுப் போயிற்று. சனத்தொகை சம்பந்தமான புள்ளி விபரங்களைச் சனத்தொகை பற்றிய அறிக்கைகளிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும் என்பது நீங்கள் அறிந்ததே. இலங்கையில் முறையான சனத்தொகைக் கணக்கெடுப்பு முதன் முதலாக 1871 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டது. முழு ஆசியாவிலும் சனத்தொகைக் கணிப்பை மேற்கொண்ட முன்னோடி நாடாக இலங்கை விளங்குகிறது. இதன் பின்னர் பெரும்பாலும் பத்து வருடங்களுக்கொரு முறை சனத்தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. கடந்த நூறு ஆண்டுகளில், அதாவது 1871 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் சனத்தொகை ஐந்து மடங்கு அதிகரித்துள்ளமை இப்புள்ளி விபரங்களின் மூலம் தெரியவருகின்றது. 1871 ஆம் ஆண்டில் 2.4 மில்லியனாக இருந்த சனத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 ஆம் ஆண்டில் 12.6 மில்லியனுகியது. 1981 ஆம் ஆண்டில் சனத்தொகை 14.8 மில்லியனுக அதிகரித்தது. (இரண்டாம் படத்தைப் பாருங்கள்). 1984 ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை ஏறத்தாழ 15.5 மில்லியனுக இருந்தது.




படம் 2

கடந்த நூற்றுண்டில் சனத்தொகை அதிகரித்தமைக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுட் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

(i) கடந்த சுமார் 50 ஆண்டுக் காலப் பகுதியில் சுகாதாரச் சேவைகள் அபிவிருத்தியடைந்தமை.

* மலேரியா போன்ற நோய்கள் ஒழிக்கப்பட்டன.

* தொற்று வியாதிகளைத் தடுப்பதற்காக ஊசி மருந்து ஏற்றப்பட்டது.

* நோய்ப் பரிகார நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தன.

* நல்ல சுகாதாரப் பழக்கங்கள் பின்பற்றப்பட்டன.

* மக்களின் ஆயுட் காலம் அதிகரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) இறப்பு விகிதம் வீழ்ச்சியடைந்தமையும் சனத்தொகையின் இயற்கை வளர்ச்சி அதிகரித்தமையும்.

(iii) நீர் வழங்கல் முறைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி காரணமாக விவசாய உற்பத்திகள் அதிகரித்தமை.

(iv) கல்வி நிலையும் வாழ்க்கை நிலையும் உயர்ந்தமை.

(v) போக்குவரத்து முறைகளும் ஏற்றி இறக்கும் பாங்குகளும் அபிவிருத்தியடைந்தமையால், அது மக்கள் பரம்பலுக்கு உதவியமை.

(vi) குடியேற்ற ஆட்சிக் காலத்தில் இந்தியத் தொழிலாளர்கள், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் பொருட்டுத் தருவிக்கப்பட்டமை.

கடந்த சில தசாப்தங்களில் இரண்டு தடவை சனத்தொகை இரட்டித்தமையையும் முதலாவது தடவை ஏற்பட்ட அதிகரிப்புக்குச் செலவழிந்த காலத்தை விடக் குறைந்தளவு காலமே இரண்டாவது அதிகரிப்புக்குச் செலவழிந்தமையையும் புள்ளி விபரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. வளர்ச்சி வேகத்துக்கமைய சனத்தொகை இரட்டிப்பதற்குச் சென்ற காலம் குறைந்திருக்கும் விதம் மூன்ருவது படத்திற் காட்டப்பட்டுள்ளது.

சனத்தொகை விரைவாக வளர்ச்சியடைதல் சமூகத்தின் பல்வேறு அம்சங்களிலும் தாக்க விளைவுகளை ஏற்படுத்தும்.


(i) இலங்கையின் மொத்த நிலப்பரப்பு 65610 சதுர கிலோ மீற்றர் ஆகும். (25332 சதுர மைல்) சனத்தொகை வருடா வருடம் அதிகரிக்கின்றது. இதனுல் ஏற்படுவது என்ன? நான்காம் படத்தைப் பாருங்கள். 1871 ஆம் ஆண்டில் ஒரு சதுர கிலோ மீற்றருக்குச் சனத்தொகை 37 பேராக இருக்க, 1981 ஆம் ஆண்டில் அது 227 பேராக அதிகரித்தது. 2000 ஆம் ஆண்டளவில் இத்தொகை ஏறத்தாழ 305 பேராக அமையும். தற்போது பயிர் செய்யக்கூடிய நிலப்பரப்பு எவ்வளவு என்பதே இங்கு மிக முக்கிய விடயமாகும். இலங்கையின் மொத்த நிலப்பரப்பாகிய 16.21 மில்லியன் ஏக்கர் பயன்படுத்தப்படும் முறையை ஐந்தாம் படத்தைப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

(ii) விரைவாக அதிகரிக்கும் சனத்தொகை நிலத்தைப் பொறுத்தளவில் மட்டுமன்றி உணவு, உடை, உறையுள், சுகாதாரம், கல்வி, போன்ற சகல அம்சங்களிலும் தாக்க விளைவை ஏற்படுத்தும். ஆகவே, ஒரு நாட்டின் சனத்தொகை, அந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சனத்தொகை
## இரட்டித்தல்




படம் 3


மூலம்: நீங்களும் உங்கள் நாடும் — அரசாங்கச் செய்தித் திணைக்களத்தின் வெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சதுர கிலோ மீற்றருக்கான சனத்தொகை

நிலம் அதிகரிப்பதில்லை! சனத்தொகை அதிகரிக்கும்!
அப்படியாயின் நிகழ்வது என்ன?




படம் 4

முக்கிய இடத்தைப் பெறுகிறது. இது பற்றிய மேலதிகத் தகவல்களை இனி வரும் பாடங்களிற் கற்போம்.

(*iii*) உற்பத்தி அதிகரிக்கும் போது தான் பொருளாதார ரீதியான அபிவிருத்தி ஏற்படும். அப்பொழுது தனி ஆள் ஒருவர் பெறும் வருமானம் பொதுவாக அதிகரிக்கும். விரைவாக அதிகரித்துச் செல்லும் சனத்தொகைக்குப் பொருந்தும் வகையில் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதும், தனி ஆள் ஒருவர் பெறும் வருமானத்தை அதிகரிப்பதும் சுலபமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் நிலப் பயன்பாடு

**முழு நிலப் பரப்பு: 16.21 மில்லியன் ஏக்கர்**

| | | |
|---|---|---|
|  | பயிர் செய்யக் கூடிய நிலம் | 6.48 மில்லியன் ஏக்கர் |
|  | கட்டிடங்களுக்கும் தெருக்களுக்கும் | 1.79 மில்லியன் ஏக்கர் |
|  | இழிவளவில் அவசியப்படும் பாதுகாக்கப்பட்ட காடுகள் | 4.0 மில்லியன் ஏக்கர் |
|  | பயிர் செய்ய முடியாத நிலம் | 3.94 மில்லியன் ஏக்கர் |

படம் 5

(*iv*) விரைவாக அதிகரிக்கும் சனத்தொகை, இவ்வண்ணம் பல்வேறு அம்சங்களிலும் தாக்க விளைவை ஏற்படுத்தும் என்பது உண்மை. ஆனல், ஒரு நாட்டின் இயற்கை வளத்தின் அளவை அதிகரிக்க இயலாது. எனினும், அவ்வளங்களிலிருந்து ஆகக்கூடிய பயனைப் பெறும் வகையில் அவற்றை உபயோகிக்க முடியும் என்பதை நாம் மறக்கலாகாது. ஆறும் ஆண்டில் நீங்கள் இது பற்றிய விபரங்களைக் கற்றிருக்கிறீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று காணப்பட்டது போலன்றி இன்று, தொழினுட்ப முன்னேற்றம் காரணமாகவும் விஞ்ஞான விருத்தி காரணமாகவும் மக்களின் தேவைகள் விரிவடைந்துள்ளன. எனவே, அத்தேவைகளும் சமூகப் பாங்கும் அன்றிருந்ததை விட இன்று மாறுபட்டிருப்பதை விளங்கிக் கொள்ளுதல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் உதவியாக அமையும். இப்பொழுது, முழு சனத்தொகையினதும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நமது கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. சனத்தொகை துரிதமாக அதிகரித்தல், இலங்கை மட்டும் எதிர்நோக்கும் பிரச்சினை அல்ல. உலக சனத்தொகையும் விரைவாக அதிகரித்து வருகின்றது. எனினும், அத்தகைய சனத்தொகையைத் தாங்கும் சக்தி வரையறைக்குட்பட்டது. இதனாலேயே நமது நாடு உட்பட உலக நாடுகள் பலவும் சனத்தொகை பற்றி ஆர்வம் காட்டி வருகின்றன.

சனத்தொகைக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதையே மேலே கூறப்பட்ட கருத்துக்கள் தெளிவாக்குகின்றன. எனவே, இலங்கையரின் வாழ்க்கையில் நாட்டின் வளங்களும் சனத்தொகையும் முன்னர் செல்வாக்குச் செலுத்தியுள்ள வகையையும் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய வகையையும் அறிந்து கொள்ளுதல் பயனுடையதாயிருக்கும்.

**செயன்முறைகள்:**

(1) இரண்டாம் படத்தின் உதவியுடன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

(ii எந்த ஆண்டில் ஆகக் குறைந்த சனத்தொகை காணப்படுகிறது?

(ii) எந்த ஆண்டில் ஆகக்கூடிய சனத்தொகை காணப்படுகிறது?

(iii) 1871–1981 காலப் பகுதியில், எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை சனத்தொகை விரைவாக அதிகரித்தது?

(2) மூன்றும் படத்தின் உதவியுடன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

(i) சனத்தொகை இரட்டிப்பதற்கு எடுத்த காலம்,

(அ) அதிகரித்துச் செல்வது தெரிகின்றது.

(ஆ) குறைந்து செல்வது தெரிகின்றது.

(இ) அதிகரிப்பு/ குறைவு ஏற்படவில்லை என்று தெரிகின்றது.

(ஈ) சமமாக உள்ளது என்று தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) நான்காம் படத்தின் உதவியுடன் சரியான விடையைக் கண்டு பிடியுங்கள்.

சனத்தொகை துரிதமாக அதிகரிப்பதனுல்,

(அ) நிலத்துக்கான கேள்வி சமமாக இருக்கின்றதென் பது இப்படத்திற் காட்டப்படுகிறது.

(ஆ) நிலத்திற்கான கேள்வியின் அளவைத் தீர்மானிக்க முடியாதுள்ளது என்பது இப்படத்திற் காட்டப் படுகிறது.

(இ) நிலத்திற்கான கேள்வி அதிகரிக்கின்றதென்பது இப்படத்திற் காட்டப்படுகிறது.

(4) ஐந்தாம் படத்தின் உதவியுடன் விடையளியுங்கள்.

கீழே தரப்பட்டுள்ளவற்றுள் பிழையான கூற்று எது?

(அ) இலங்கையில், பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தக்கூடிய நிலம், இலங்கையின் முழு நிலப்பரப்பில் அரைப்பங் கிற்கும் குறைவாகும்.

(ஆ) இலங்கையின் முழு நிலப்பரப்பில் சுமார் காற் பங்கு பாது காக்கப்பட்ட காடுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.


(இ) இலங்கையின் முழு நிலப்பரப்பில் சுமார் அரைப் பங்கு, தெருக்களையும் கட்டிடங்களையும் அமைப்பதற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கையின் முழு நிலப்பரப்பில் சுமார் காற் பங்கு, கரடு முரடான தரை அமைப்பைக் கொண்டிருப்பதா லும் வறண்ட கால நிலையைக் கொண்டிருப்பதாலும் பயிர்ச் செய்கைக்குட்படுத்த முடியாத நிலமாகக் காணப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. நமது மக்கள் சமூகத்தின் பொருளாதாரப் பாங்கு

முற்காலத்தில், பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படை அலகாகக் கிராகம் மிக முக்கிய இடத்தைப் பெற்றது. அது, தன்னிறைவுப் பொருளாதாரப் பாங்கின் மீது கட்டியெழுப்பப்பட்டிருந்தது.

கிராமம் என்று வழங்கப்பட்ட எளிய அலகு, மிகவும் அழகான வகையில் முற்றுப்பெற்றிருந்தது. குளம், தாதுகோபம் என்பன இவ்வமைப்பில் விசேட இடத்தைப் பெற்றன. கிராமத்தின் இதயம் என்று கருதக்கூடிய குளம் பிரதான இடத்தைப்பெற்றது. குளத்தின் தாழ்ந்த பகுதியிலிருந்து நீரைப் பெற்றுப் பயிர் செய்யப்பட்ட வயல் வெளிகளைக் கொண்டிருந்தது கிராமம். இவ்வயல் வெளிகள் வயல் நிலம் என்று வழங்கப்பட்டன. குளத்தின் மேற்பிரதேசத்தில் விவசாயிகளின் குடியிருப்புகள் அமைந்திருந்தன. இது தோட்ட நிலம் என்று வழங்கப்படலாயிற்று. தாதுகோபத்துடன் கூடிய விகாரை, அங்கு, தெற்றெனத் தெரியும் அம்சமாக இருந்தது.

கிராமத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த காட்டிலிருந்து கிராம மக்களுக்குத் தேவையான அரிமர வகைகளும் விறகும் பெறப்பட்டன.

கிராமங்கள் அரசனுக்கு உரியனவாகும். அரசனல் நன்கொடையாக வழங்கப்பட்ட கிராமங்கள் பிரதானிகளுக்கோ அல்லது விகாரைகளுக்கோ உரித்தாகும். இராச்சியத்தின் நிர்வாகத்தில் உதவிய பிரதேச நிர்வாகிகள், அமைச்சர்கள், யுத்த சேவையில் ஈடுபட்டோர் போன்றவர்களுக்குப் பெரிய கிராமங்கள் கொடையாக வழங்கப்பட்டன. இவை, 'நிந்தகம்' எனப்பட்டன. விகாரைகளுக்கும் தேவாலயங்களுக்கும் வழங்கப்பட்ட நிலம் 'தேவாலகம்' எனப்பட்டது. அறுவடையின் பின்னர் நிலத்தின் வகைக்கமைய விளைபொருளின் ஒரு பகுதியை அரசனுக்கு, விஹாரைக்கு, தேவாலயத்திற்கு அல்லது பிரதானிகள் தலைவனுக்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இது தவிர, வருடா வருடம் அரசனுக்கு, அல்லது விகாரைக்கு அல்லது தேவாலயத்திக்குச் செய்ய வேண்டும் என்று நியமிக்கப்பட்ட சில சேவைகளும் இருந்தன. இச்சேவை 'இராசகாரிய சேவை' எனப்பட்டது.

கிராம மக்களுட் பெரும்பாலானோர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதிலும் தத்தமது குலத்திற்கேற்ப விதிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு தொழில்களிலும் ஈடுபட்டனர். இது பற்றிய விபரங்களைப் பின்னால் வரும் அத்தியாயம் ஒன்றில் கற்போம். பாலையும் பஞ்ச திரவியங்களையும் பெற்றுக்கொள்வதற்காகவும் விவசாயத்துக்குத் தேவையான எருவைப் பெற்றுக் கொள்வதற்காகவும் கால்நடைகளை வளர்த்தனர். கால்நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட பொதுவான புல் நிலம் காணப்பட்டது. பாணி, கருப்பட்டி போன்றவை கிராமத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டன. அன்றைய மக்கள் கூட்டாக இக்கருமங்களில் ஈடுபட்டனர். புல் நிலங்கள், குளங்கள், கால்வாய்கள் என்பன பொதுச் சொத்தாகக் கருதப்பட்டன. அவற்றைப் பேணுவது, பழுது பார்ப்பது போன்ற நடவடிக்கைகளும் கூட்டு முயற்சியாகவே மேற்கொள்ளப்பட்டன. விவசாய நடவடிக்கைகள், வீடு கட்டுதல், வேய்தல் போன்ற நடவடிக்கைகளில் கைகொடுத்து ஒருவருக்கொருவர் உதவும் முறை பின்பற்றப்பட்டது. இது, கிராம வாழ்க்கையின் ஒரு பிரதான இலட்சணமாக அமைந்தது. பிற்காலத்தில் இது அன்றாடத் தேவையாக அமையாது போயினும் சம்பிரதாய நிகழ்ச்சியாக இடம் பெற்றது.

அக்காலத்தில், சில நகரங்களே காணப்பட்டன. அவை எல்லைச் சுவர்களால் பாதுகாக்கப்பட்டு, நான்கு திக்குகளிலும் நான்கு வாயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வகையில் அமைக்கப்பட்டிருந்த நகரங்கள். அவசியமான எல்லா அம்சங்களையும் கொண்டு திகழ்ந்தன. பெரும்பாலும், தலை நகரம் மட்டுமே நகர அமைப்பைக் கொண்டிருந்தது. அரசனும் அரசாங்க அதிகாரிகளும் அங்கு வாழ்ந்தனர். இராசகாரிய முறையின்படி அவர்களுடைய 'நிந்தகம்'களிலிருந்து அவர்களுக்கு அவசியமான பொருள்கள் கிடைத்தன.

இவ்விதமாக, உணவு, பல்வேறு பொருள்கள், சேவைகள் என்பனவற்றை வழங்கும் பகுதியினரைக் கொண்டதாகப் புராதன சமுதாயம் திகழ்ந்தது. எல்லோரும் ஒருங்கு கூடியபோது சமூகத்தின் எளிய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யக்கூடியதாய் இருந்தது. ஆகவே, அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்பட்டவற்றை வெளியிலிருந்து கொண்டுவர வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருக்கவில்லை. பிரதேசத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியாத உப்பு, கருவாடு போன்ற ஒரு சிலவற்றையே வெளியிலிருந்து தருவித்தனர்.

வாசனைத் திரவியங்கள், மாணிக்கக் கற்கள், யானைத் தந்தம், முத்து ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகவே பிறநாட்டு வியாபாரிகள், பண்டைய காலத்தில் இலங்கைக்கு வந்தனர். இவற்றை விற்கும் உரிமை, அசரனுக்கே இருந்தது. பட்டாடைகள், சுகந்தப் பொருள் போன்றனவே வெளி நாடுகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவிக்கப்பட்டன. இத்தகைய பொருள்களை அரச குடும்பத்தினரும் பிரதானிகளும் பயன்படுத்தினர். வெளி நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பொருள்கள் மிக அபூர்வமாகவே வர்த்தகத்துக்காகப் பயன்படுத்தப்பட்டன. மக்களின் சகல தேவைகளும் உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. இது, தன்னிறைவுப் பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைந்தது.

இன்று நிலவும் பொருளாதார அமைப்பு இறக்குமதி, ஏற்றுமதி என்பனவற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாகும். இது, அன்று நிலவிய தன்னிறைவுப் பொருளாதாரப் பாங்கினின்றும் பெரிதும் வேறுபட்டது. இவ்வேறுபாடு எப்படி ஏற்பட்டது?

(i) பண்டைக் காலத்தில், காலத்துக்குக்காலம் இந்திய அரசுகளின் ஆக்கிரமிப்பு ஏற்பட்டது. எனினும் 16 ஆம் நூற்றாண்டு வரை, குறுகிய காலங்களுக்கு மட்டுமே நாடு அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. நமது நாட்டு மக்களின் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தும் அளவுக்கு, அக் குறுகிய கால அந்நியர் ஆட்சியின் செல்வாக்கு ஏற்படவில்லை.

(ii) 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் வருகையுடன் தான், இலங்கை முதல் தடவையாக மேல் நாட்டுச் செல்வாக்கிற்குட்பட்டது. 17 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதி வரையும் அவர்களது ஆட்சிக்குட்பட்ட இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள், ஒல்லாந்தரினால் கைப்பற்றப்பட்டன. 18 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை ஒல்லாந்தரின் ஆட்சிக்குட்பட்டிருந்த அப்பிரதேசங்கள், 1976 ஆம் ஆண்டில் ஆங்கிலேயரினால் கைப்பற்றப்பட்டன. இக் கால கட்டம் வரையில் பொருளாதார அமைப்பில் விசேட வேறுபாடுகள் எதுவும் ஏற்படவில்லை.

(iii) இதுவரை காலமும் சுதந்திர இராச்சியமாக நிலவி வந்த இலங்கையின் கண்டி இராச்சியம், 1815 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கையின் மூலம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. இதன் பின்னர், 1948 ஆம் ஆண்டில் அரசியல் சுதந்திரம் பெறும் வரையில், இலங்கை பிரித்தானியரின் குடியேற்ற நாடாகவே இருந்து வந்தது. இக்காலப் பகுதியில், இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. குடியேற்றவாதக் கொள்கைக்கமைய ஏகாதிபத்தியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நமது நாட்டின் பொருளாதாரப் பாங்கு மாற்றி அமைக்கப்பட்டது. கோப்பி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற வியாபாரப் பயிர்களை விளைவிப்பதற்காகப் பெரும் நிலப்பரப்புகள் பயன்படுத்தப்பட்டன. அத்துடன், தமது நாடு, அவர்களின் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான ஒரு சந்தையாகக் கருதப்படலாயிற்று. இலங்கையின் பொருளாதார முறையில் விசேட மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இக்கொள்கை காரணமாயிற்று.

(iv) நாம் சுதந்திரம் பெற்ற பின்னரும் கூட நமது பொருளாதார அமைப்பை, முன்பு நிலவிய தன்னிறைவுப் பாங்கை நோக்கியதாக அமைத்தல் கடினமாயிற்று. இன்று நமது நாடு பெறும் வருமான வழிகளுள், வியாபாரத்தின் பொருட்டு உற்பத்தி செய்யப்படும் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்களின் ஏற்றுமதி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அன்று, உணவு உற்பத்திக்குக் கொடுக்கப்பட்ட முதல் இடத்தை இன்று, வர்த்தகப் பயிர்களே பெறுகின்றன என்பது உங்களுக்கு இப்பொழுது தெளிவாகியிருக்கும். எனவே, அவசியமான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும், நமக்கு அவசியமான உணவுப் பொருள்களை நமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்குமான திட்டங்களைச் செயற்படுத்த வேண்டியதாயிற்று.

இன்று நமது நாட்டில் நிலவி வரும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறையின் இலட்சணங்கள் என்ன?

(i) ஏற்றுமதிகளே நமது பிரதான வருமான வழிகளாக அமைந்துள்ளன. பிற நாடுகளுக்கு அனுப்பப்படும் பொருள்களுக்கு அதிக விலை கிடைக்குமேயாயின், நமக்குக் கூடிய வருமானமும் கிடைக்கும். எனினும், உலகச் சந்தையின் விலைகளுக்கு அமையவே நமது பொருள்களுக்கான விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

(ii) அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றை நாம் இறக்குமதி செய்யவேண்டி உள்ளது. உணவுப் பொருள்கள் கைத்தொழிற் பொருள்கள், கனிய எண்ணெய், இயந்திர உபகரணங்கள் ஆதியன இவற்றுள் இடம் பெறுகின்றன. அப்பொருள்கள் யாவற்றுக்கும் அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது.

(iii) ஏற்றுமதிகளின் மூலம் நாம் சம்பாதிக்கும் வருமானத்திற்கும் மேலாக, இறக்குமதிகளுக்காக நாம் செலவிட வேண்டியுள்ளது. எனவே, அபிவிருத்தியின் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து கடன் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நிலவுகின்ற பொருளாதாரப் பாங்கு காரணமாக நாம் எதிர் நோக்க வேண்டியுள்ள பிரச்சினைகள் மிகப் பலவாகும்:

(i) தன்னிறைவுப் பொருளாதார முறை தகர்ந்து போன மையினால் வெளி நாடுகளுக்குக் கடமைப்படும் நிலை ஏற் பட்டுள்ளமை.

(ii) நமது நாட்டில் வேலை அற்றோர் பெருந்தொகையிற் காணப்படுகின்றமை; நமது நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை தாழ்ந்துள்ளமை.

(iii) வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமை.

(iv) உலகச் சந்தையில், நமது உற்பத்திப் பொருள்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நமது இறக்குமதிப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இவை காரண மாக இடையூறுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளமை.

தேசிய உற்பத்தியை அதிகரிப்பதன் பயனாக நாட்டை அபி விருத்தி செய்வதன் மூலமும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலமுமே, இன்று நிலவுகின்ற பொருளாதார நிலைமையின் கீழ் நமது மக்கள் வாழ்க்கையை உயர் நிலைக்குக் கொண்டுவர முடியும். விவசாயத் துறையைப் போன்று, கைத்தொழிற் துறையிலும் விசேட கவனம் செலுத்தி இவற்றின் மூலம் செய்யப்படும் உற்பத்தி களை அதிகரிப்பதனால் நமது நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய முடியும் என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இதைச் செய்வது எப்படி?

(i) இறக்குமதிச் செலவைக் குறைப்பதன் மூலம் இதைச் செய்யலாம். அன்றிருந்தது போன்று தன்னிறைவு பெற முடியாத போதிலும், நமது நாட்டிலே உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களை நமது நாட்டிலேயே உற்பத்தி செய்ய முயலுதல் அவசியம். இவற்றுள் உணவுப் பொருள்கள் முதலிடம் பெறுகின்றன. இன்று பல் நோக்குத் திட் டங்களின் கீழ், நெற்பயிர்ச் செய்கை உட்பட உண வுப் பயிர்ச் செய்கைகளில் விசேட கவனம் செலுத் தப்படுவதை நீங்கள் அறிவீர்கள். அரிசியைப் பொறுத் தளவில், நாம் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையை அண்மித்துள்ளமைக்கு இதுவே காரண மாகும். அன்றேல். அதிகரித்துவரும் சனத்தொகையுடன் இறக்குமதித் தேவைகளும் அதிகரித்தலைத் தடுக்க முடி யாது.

(ii) நமக்குத் தேவையான கைத்தொழிற் பொருள்களுள், நமது நாட்டில் உற்பத்தி செய்துகொள்ளக்கூடியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமே உற்பத்தி செய்வதன் மூலம் இறக்குமதிச் செலவு களைக் குறைத்துக்கொள்வது மட்டுமன்றி வேலை வாய்ப் புக்களையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(iii) ஏற்றுமதிகளின் மூலம் பெறக்கூடிய வருமானத்தை அதி கரிப்பதற்கு முயலுதல் வேண்டும். சம்பிரதாய ஏற்று மதிப் பொருள்களுடன் மட்டும் நின்று விடாமல், வேறும் ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்வதிலும் கவ னம் செலுத்துதல் வேண்டும். தற்பொழுது, மாணிக்கக் கற்கள், பீங்கான் பொருள்கள், தைத்துப் பூர்த்தி செய் யப்பட்ட ஆடைகள் போன்றவை முக்கியத்துவம் பெறு கின்றன.


(iv) பல்வேறு துறைகளிலும் வேலை வாய்ப்புகள் ஏற்படுவ தனால், உற்பத்தி பெருகுவதுடன் மட்டுமல்லாது வரு மானமும் அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்குமிடத்து, மக்களின் வாழ்க்கை நிலை உயரும். இத்தருணத்தில் நாடு முழுவதினதும் தேவைகளையும் மொத்தமாகக் கவனத்திற் கொள்ள வேண்டும். இதை மனத்திற்கொண்டே, இன்று, அபிவிருத்தியின் நிமித்தம், பெரிய பல்நோக்கு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கல் ஓயா, உட வளவை, மகாவலி போன்ற அபிவிருத்தித் திட்டங் கள் இதற்கு உதாரணங்களாகும்.

இன்றும் கூட, மக்களுட் பெரும்பாலானோர் கிராமங்களில் வாழ் கின்ற போதிலும், அன்று போல இன்று கிராமங்களில் தன்னிறை வுத் தன்மையைக் காண முடியாது என்பது இப்பொழுது உங்களுக்கு விளங்கும். அன்று, கிராமத்துக்கும் கிராமத்தின் தன்னிறைவுத் தன்மைக்கும் மக்கள் முதலிடம் கொடுத்தனர். எனினும், இன்று நிலவுகின்ற பொருளாதார முறையின்படி. இலங்கை முழுவதை யும் கவனத்திற் கொண்டு, எதிர் காலத்தில் அதிகரிக்கவிருக்கும் சனத்தொகைக்கு இணங்க உணவையும் ஏனைய தேவைகளையும் உற்பத்தி செய்ய வேண்டிய அவசியமும் வழங்க வேண்டிய அவ சியமும் ஏற்பட்டுள்ளது. அன்று போல இன்றும், கிராம மக்களின் சீவனோபாயம் விவசாயமே. அதே போன்று, பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் கீழ், வர்த்தகப் பயிர்ச் செய்கையும் விவசாயத் துறையின் முக்கியமான ஓர் அம்சமாக அமைந்துள்ளமையை நீங்கள் அறிவீர்கள். எனவே, இன்றும், நமது நாட்டின் விவசாயத் திற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருப்பதை ஆறும் படத்தை (வரைபை)ப் பார்த்து அறிந்துகொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் கிராம, நகர சனத்தொகை




மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்.

படம் 6 (வரைபு)

இன்று, ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரதான நகரம் ஒன்றோ அல்லது பலவோ இருக்கக் காணலாம். பிரதான நகரம், பெரும் பாலும், போக்குவரத்து அமைப்பில் சந்தியாக அமைகின்றது. அது, நிர்வாக மத்திய நிலையமாகவும் வர்த்தக மத்திய நிலைய மாகவும் திகழ்கின்றது. பெரும்பாலான கிராமப் புறங்களில் வாழும் மக்கள், இன்று, குறுகிய நேரத்தில் பிரதான நகரை அடையக்கூடிய வகையில் போக்குவரத்து அமைப்பும் விருத்தி யடைந்துள்ளது. எனவே, அன்றைவிட இன்று, நகர வாழ்க்கை சிக்கார்ந்ததாக உள்ளது. கிராமவாசிகள் பலர், தொழில் தேடி நகரங்களுக்கு வருகின்றனர். நகர சமூகத்தில், தொழில்களை நம்பி வாழ்க்கை நடத்துவோர் பெருமளவிற் காணப்படுவது போன்று, தொழில் அற்றிருப்போரின் தொகையும் அதிகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயன்முறைகள்:**

(1) தற்போது, நாம் இறக்குமதி செய்யும் உணவுப் பொருள்களில் பத்தைக் குறிப்பிட்டு, இவை எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதையும் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

(2) நாம் இறக்குமதி செய்யும் பூர்த்திப் பொருள்கள் பத்தைக் குறிப்பிட்டு, இவை எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதையும் கேட்டறிந்துகொள்ளுங்கள்.

(3) தற்பொழுது நாம் இறக்குமதி செய்கின்ற, ஆனாலும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய பத்துப் பொருள்களைக் குறிப்பிடுங்கள்.

(4) பாரம்பரிய ஏற்றுமதிப் பொருள்கள், பாரம்பரியமற்ற ஏற்றுமதிப் பொருள்கள் என்பவற்றுக்கு உதாரணங்கள் சிலவற்றைக் குறிப்பிடுங்கள்.

# 4. மக்களின் தேவைகள்: உணவு

உலகிலுள்ள வேறு நாடுகளைப் போன்று நமது நாட்டிலும், புராதன காலத்தில், மக்கள், சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய வேட்டையாடிய மிருகங்களின் இறைச்சி, கிழங்கு வகைகள், பழ வகைகள் போன்றவற்றை உணவாகக் கொண்டனர். காலஞ் செல்லச் செல்ல விலங்குகளை வளர்க்கவும், அதன் பயனாக இறைச்சி, பால் போன்றவற்றைப பயன்படுத்தவும் பழகிக் கொண்டனர். எனினும், விவசாயம் செய்யப பழகிக்கொணட பின்னர், பயிர்ச் செய்கையின் மூலம் விளைவிக்கப்பட்ட உணவு வகைகள் முதலிடம் பெறலாயின.

தானியமே அன்றைய சமூகத்தின் பிரதான உணவாக அமைந்தது. குரக்கன், பயறு, தினை, சோளம் போன்ற தானிய வகைகள் உபயோகிக்கப்பட்ட போதிலும், நெல்லரிசிச் சோறு பிரதான இடத்தைப் பெற்றது. ஆகவே, புராதன மக்கள் சமூகத்தில், குளத்தை அண்டிய நெற் பயிர்ச செய்கைக்கு முதலிடம் கிட்டியது. கிழங்கு வகைகள் பெருமளவில் பயன்படுத்தப்பட்ட போதிலும், போசாக்கு மிக்க கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள் என்பனவும் அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ளப்பட்டமையை நாம் மறக்கலாகாது.

உலர் காலநிலைக்குப் பொருத்தமான புடோல், பீர்க்கு, வெள்ளரி, பயற்றை, போஞ்சி, வெண்டி போன்ற மரக்கறி வகைகள் சேனைப் பயிர்ச் செய்கையின் மூலம் விளைவிக்கப்பட்டன. உலர் வலயத்தில் விளையும் குரக்கன், தினை ஆகியன சேனைப் பயிர்ச் செய்கையில் முக்கிய இடம் வகித்தன. அன்று நிலவிய எளிய கிராம வாழ்க்கைக்கு அவசியமான போசாக்குச் செறிந்த உணவுப் பயிர்களை விளைவிப்பது அத்தன்னிறைவு விவசாய முறையின் விசேட தன்மையாக விளங்கியது.

தேவையான பழ மரங்களை வீட்டுத் தோட்டங்களில் வளர்ப்பது வழக்கமாக இருந்தது. எனவே, மா, பலா, வாழை, பப்பாளி, போன்ற பழ வகைகள் சுலபமாகக் கிடைத்தன.

கிராமத்தை அண்டியிருந்த காடுகளிலிருந்து முயல், மான், மரை, எருமை போன்ற பிராணிகளைக் கொன்று இறைச்சியைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. எனினும், இவை, அன்றாட உணவின் அத்தியாவசிய அம்சமாக அமையவில்லை. போசாக்குச் சத்து மிக்க 'பஞ்ச திரவிய'த்தைப் பெற்றுக்கொள்வதற்குப் பசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவகுத்தது. அக்கால மக்கள் மாட்டிறைச்சியை உணவாகக் கொள்வதற்கு விரும்பவில்லையெனினும், 'பஞ்ச திரவிய'த்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டும் விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தும் பொருட்டும், பசளையைப் பெறும் நிமித்தமும் கால் நடைகளை வளர்த்தனர்.

அன்று, உணவுக்காக மீனைப் பெற்றுக்கொள்வது சுலபமாக இருக்கவில்லை. எனினும், ஆறுகளிலிருந்தும் குளங்களிலிருந்தும் மீன் பிடித்தனர் என்றும் கருவாட்டைப் பயன்படுத்தினர் என்றும் தெரியவருகின்றது.

அன்று, போசணைச் சத்துப் பேணப்படும் விதத்தில் உணவு தயாரிக்கப்பட்ட முறைகள் பல இருந்தன என்பது தெரியவரு கின்றது. பல்வேறு கீரை வகைகள், பல்வேறு முறைகளில் தயா ரிக்கப்பட்டமையை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இலைக் கஞ்சி முக்கிய இடம் வகித்தது. அக்காலத்தில் மாமிசம் பெருமள வில் பயன்படுத்தப்படாவிடினும் போசாக்குச் சத்து மிக்க அவரை யங்கள், காய்கறிகள், பழ வகைகள் என்பனவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தமை விசேட தன்மைகளில் ஒன்றாகும். இன்று உள்ளது போன்று பெரிய சனத்தொகை அன்று இருக்க வில்லை என்ற காரணத்தினாலும் உணவு உற்பத்திக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டமையினாலும் அவசியமான உணவை வழங் குதல் பிரச்சினையாக அமையவில்லை.

இன்று, நமது பிரதான உணவு நெல் அரிசிச் சோறாக அமை வதுடன் மரக்கறிகளும் பழ வகைகளும் பெருமளவில் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றை விட, சோள மாவிலிருந்தும் அரிசி மாவி லிருந்தும் தயாரிக்கப்பட்ட பல்வேறு உணவு வகைகளும் மீன், இறைச்சி, முட்டை போன்ற உணவுகளும் அருந்தப்படுகின்றன. உணவு தயாரிக்கும் முறைகளும் மாற்றத்துக்குள்ளாகியிருக்கின் றன. எனினும், பெரும்பாலான மக்களின் உணவுப் பழக்கங்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேறுபடவில்லை.

அன்று, அரிசி உட்படத் தமது உணவுத் தேவைகளைக் கிராமத்தி லிருந்து அல்லது வீட்டுத் தோட்டங்களிலிருந்து மக்கள் பெற்றுக் கொண்டனர். இன்று, அத்தகைய மக்களிடம் இருக்கும் நிலபுலங் களும் வரையறைக்குட்பட்டதாயிருக்கின்றது. அன்றிருந்ததைவிட அதிக அளவு சனத்தொகையினருக்கு இன்று உணவு உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சனத்தொகை அதிகரித்தபோதிலும் நிலத்தின் அளவு அதி கரிப்பதில்லை என்பது பற்றி நாம் இரண்டாம் அத்தியாயத்திற் கற்றோம். ஆகவே, பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிலத்தின் அளவு வரம்புக்குட்பட்டது. பயிர்ச் செய்கைக்குட்படுத்தக்கூடிய நிலப்பரப்பின் ஒரு பகுதி வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்ற கட்டிடங்களைக் கட்டுதல் உட்பட வேறும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, அதிகரித்துவரும் சனத்தொகையுடன், பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தக்கூடிய நிலத்தின் அளவு குறைந்து கொண்டே செல்லும் பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்படும் நிலத்தின் அளவு வரம்புக்குட்பட, பயிரிடப்படும் நிலத்திலிருந்து பெறும் சாகுபடியை உச்ச மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம், உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

அதிகரிக்கும் சனத்தொகை காரணமாகவும் வேறு காரணங்களினாலும், இன்று, உணவுப் பொருள்களுக்காக வேறு பிரதேசங்களிலும் வேறு நாடுகளிலும் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அண்மை வரலாற்று நிகழ்ச்சிகள் காரணமாக (மூன்றும் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டபடி) உணவுப் பயிர் உற்பத்தியில் செலுத்தப்பட்ட கவனம் குறைந்தமை நீங்கள் அறிந்ததே. அதே போன்று, போக்குவரத்து முறைகளில் ஏற்பட்ட அபிவிருத்தியுடன் அக்கம்பக்கங்களிலுள்ள பிரதேசங்களிலிருந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் வசதியும் கிட்டிற்று. குடியேற்ற ஆட்சிக் காலத்தில் பின்பற்றப்பட்ட கொள்கைகள் காரணமாக நமது நாட்டில் உணவு உற்பத்தி குறைந்ததுடன் வெளி நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட உணவுகளை உண்ணப் பழகிக் கொண்டோம். எனவே, அரிசி, சீனி, மா, மிளகாய், பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கூடப் பிற நாடுகளிலிருந்து தருவிக்க வேண்டியதாயிற்று.

மேலே குறிப்பிட்ட தாவர உணவுகளுடன், அன்றை விட இன்று, அதிக அளவில் விலங்குணவுகளையும் நாம் உண்கிறோம். எனவே, ஆடு, மாடு போன்ற வீட்டு விலங்குகளின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் புல் வகைகளையும் வேறு தாவர வகைகளையும் வளர்ப்பதற்குப் பயிர் நிலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விலங்குகளின் பாலையும் இறைச்சியையும் நாம் அருந்துகிறோம். மீனும், முட்டையும் நமது உணவில் இடம்பெறுகின்றன. எனினும், இத்தகைய மாமிச உணவுகளையும் கூட போதிய அளவில் நமது நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ள முடியாமையினால் பிற்காலத்தில் தகரங்களில் அடைக்கப்பட்ட, உலர்த்தப்பட்ட, குளிரூட்டப்பட்ட இறைச்சி, மாமிசங்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் போதிய அளவில் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இன்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதிக அளவில் பணத்தைக் கொடுத்து வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைத் தருவிக்க வேண்டியுள்ளதால், குறைந்த விலையில் உணவுப் பொருள்களை வழங்குதல், உணவு முத்திரைகளை வழங்குதல் போன்ற நிவாரண முறைகளும் உணவுப் பங்கீட்டு முறையின் கீழ் அத்தியாவசியப் பொருளகளை விநியோகித்தலும் அத்தகைய நடவடிக்கைகளுட் சிலவாகும்.

தானியங்களையும் காய்கறிகளையும் பயிரிடுவதற்கு, பயிர்ச் செய்கைக்குகந்த நிலமும் நீரும் அவசியம். இன்று, பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் விவசாய வளர்ச்சியும் எதிர்பார்க்கப் படுகிறது. உணவுப் பிரச்சினைகருத் தீர்வு காணும் ஒரு வழியாகவே, அரிசியைப் பிரதானமாகக் கொண்டு உணவுப் பயிர் உற்பத்தியில் இன்று முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. மகாவலித் திட்டம் இதற்கு ஓர் உதாரணமாகும். உணவுப் பொருள்களை முடிந்த அளவில் நமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதன் மூலம், அதற்காகச் செலவிடப்படும் வெளி நாட்டு நாணய மாற்றை, நமது நாட்டின் அபிவிருத்திக்காகச் சேகரித்துக்கொள்ள முடியும். அதிகரித்து வரும் சனத்தொகைக்கு ஏற்ற வகையின் உணவை வழங்குவதற்காக உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியம், நமது நாடு போன்று வேறு நாடுகளும் எதிர் நோக்கும் ஒரு பிரச்சினையாகும். அபிவிருத்தியடைந்து வரும ஏனைய நாடுகளையும் இப் பிரச்சினை வெகுவாகப் பாதிக்கின்றது. எனவே, போசாக்கு மிக்க உணவைப் போதிய அளவில் பெற்றுக்கொள்வது பற்றி நாம் கவனிக்க வேண்டும்.

நமது சக்தியின் மூலம் தகுந்த பலனைப் பெற்று வாழ்வதற்காக நாம் உண:ப'ருந்துகிறோம். நோயற்ற, சக்தியுள்ள மக்களாலான சமுதாயம் ஆரோக்கியமான, சக்திமிக்க சமுதாயமாக அமையும். நாம் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய சேவையைச் சரியான முறையில் நிறைவேற்றுவதாயின் நாம் சக்தியுளளவர்களாயத் திகழ வேண்டும். அவசியமான அளவிலும் அவசியமான சத்துக்கொண்டதாயும் அமையும் உணவை அருந்துவதால் உள்ளமும் உடலும் ஒருங்கே வளர்ச்சியுறும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**செயன்முறைகள்:**

(1) நமது உணவில் கீரை வகைகள் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

(அ) இன்று நாம் உண்ணும் கீரை வகைகளைக் குறிப்பிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) கீரை வகைகளை உண்பதினால் நாம் பெறும் போசாக்குச் சத்துக்கள் எவை என்பதைக் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

(2) தற்பொழுது உணவைப் பெற்றுக்கொள்வது பிரச்சினையாக அமைவதற்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுங்கள்.

(3) நமது நாட்டில் பெற்றுகொள்ளக்கூடிய அவரையங்களைக் குறிப்பிடுங்கள்.

(4) பிற நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களைப் பின்வரும் பிரிவுகளின் கீழ் வகைப்படுத்துங்கள்

(i) அத்தியாவசிய உணவுப் பொருள்கள்.

(ii) உப உணவுப் பொருள்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பண்டைய சுவரோவியங்களில் காணப்படும்**
**ஆடை ஆபரணங்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. மக்கள் தேவைகள்: உடை

உலகின் வேறு நாடுகளில் காணப்பட்டது போன்று, இலங்கையிலும், ஆதி மனிதன், இலை குழைகளாலும் மரப்பட்டைகளினுலும் தனது உடைகளைத் தயாரித்துக் கொண்டான் என்று எண்ண இடமுண்டு. அதற்குப் பிற்பட்ட காலத்தில், தான் வேட்டையாடிய மிருகங்களின் தோல்களை உடைக்காகப் பயன்படுத்தினுன். நூல் நூற்று, புடவை நெசவு செய்தல், விருத்தியடைந்த நாகரிகங்களின் இலட்சணமாக இருந்தது போன்று, இலங்கையின் புடவைக் கைத்தொழிலும் நீண்ட வரலாற்றைக் கொண்டதென்பது புலனுகின்றது. இக்கைத்தொழில் விஜயனின் வருகைக்கு முற்பட்ட காலத்திலேயே பரவியிருந்தது. விஜயன் இலங்கையை வந்தடைந்தபோது, குவேனி நூல் நூற்றுக்கொண்டிருந்தமை வரலாற்றில் குறிப்பிடப்படுவதிலிருந்து இவ்வுண்மை தெளிவாகின்றது.

கையினுல் நூல் நூற்பதற்கும் புடவை நெசவு செய்வதற்கும் பெருமளவில் உழைப்பாளர்களும் நேரமும் அவசியப்பட்டது. ஆகவே, அக்காலத்தில், ஆடை வகைகள் பெறுமதி மிக்க பொருள்களாகக் கருதப்பட்டன. இதனுல் மக்கள் எளிய ஆடை அணிகளைப் பயன்படுத்தப் பழகிக்கொண்டனர். புராதன காலத்தில் ஆடை அணிகள், இன்றுள்ளதைப் போலன்றிப் பெரிதும் வேறுபட்டிருந்தமைக்கு இதுவே காரணமாகலாம். ஆண்கள் மேனியின் கீழ்ப் பகுதியை மறைக்கும் வண்ணம் ஆடை அணிந்தனர் என்பதையும் பெண்கள் மேற்புறத்தில் மேலாடையையும் கீழ்ப்பகுதியில் சேலையையும் அணிந்தனர் என்பதையும் பண்டைய சுவரோவியங்களின் மூலம் அறிந்துகொள்ளக்கூடியதாயுள்ளது. ஆண்கள், பெண்கள் ஆகிய இரு சாராரும் ஆபரணங்களை அணிந்தனர் என்பது சுவரோவியங்களின் மூலமும் புராதன நூல்களின் மூலமும் தெளிவாகின்றது. அன்று நிலவிய சிற்சில பழக்க வழக்கங்களில், உடைகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சிறப்பு பிரதிபலிக்கக் காணலாம். ஆடைகளை அன்பளிப்பாக வழங்கும் பழக்கம் அன்றைய சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றது. இவ்வழக்கம் இந்நாள் வரை தொடர்ந்து நிலவி வருவதை நாம் காண்கிறேம். வருடப் பிறப்புப் பண்டிகைக் காலத்தில் தாய் தந்தையருக்கும் வயதில் மூத்தோருக்கும். ஆடைகளை அன்பளிப்பாக வழங்குவது நீங்கள் அறிந்ததே.

அரசர்களுக்கென வெளிநாடுகளிலிருந்து பெறுமதி மிக்க புடவை வகைகள் தருவிக்கப்பட்டமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டும், காசிப் பீதாம்பரமும் இவற்றுள் அடங்கும். எனவே புராதன காலத்தில், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நம் நாட்டிலேயே புடவை உற்பத்தி செய்யப்பட்ட தென்றும் பெறுமதி மிக்க ஆடைகளைப் பெறும் நிமித்தம் அந்நிய நாடுகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டதென்றும் எண்ண இடமுண்டு.

அக்காலத்தில் புடவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட வர்ணங்கள் வரையறைக்குட்பட்டிருந்தன. நீலம், கடும் நீலம், கடும் ஊதா போன்ற நிறங்கள் அரச உடைகளுக்குப் பயன்படுத்தப் பட்டமை தெரிய வருகிறது. இவற்றைத் தயாரிப்பதற்குக் கூடிய முயற்சி தேவைப்படுவதனல் இவை பெறுமதி வாய்ந்த உடைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டன என்று எண்ண இடமுண்டு. பண்டமாற்று இடம்பெற்ற காலப்பகுதியிலும், அந்நிய வியாபாரிகள் இங்குகொண்டு வந்த பொருள்களுள் புடவை வகைகள் விசேட இடத்தை வகித்தன என்று தெரிகின்றது.

புராதன சமூகத்தின் வரையறைக்குட்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கைகளினுல் இயக்கப்பட்ட பொறிகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட புடவை வகைகள் போதியதாக அமைந்தன. எனினும் நாகரிகம் வளர்ச்சியுற, ஆடை ஆபரணங்களுக்கான கேள்வி அதிகரித்தது. இன்று, ஆடை அணிகள் அடிப்படைத் தேவை மட்டுமல்ல; அலங்காரங்களை வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாகவும் திகழ்கின்றது. எனவே புடவைக்கான கேள்வி இரு மடங்காக அதிகரித்துள்ளது. அதிக சனத்தொகை காரணமாக அதிகரித்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டியுள்ள அதே வேளையில் பற்பல விதமான, பல்வேறு வகைப்பட்ட வர்ணங்களால் அமைந்த புடவைகளையும் வழங்க வேண்டியுள்ளது.


மேற்கு நாடுகளைச் சேர்ந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சிக் காலத்தில், இலங்கை மக்களின் ஆடை அலங்காரங்கள் பெரும் மாற்றத்திற்குள்ளாயின. இன்று, நகர்ப் புறங்களில் வாழும் மக்கள் அணியும் பல்வேறு வகையான உடைகள் இதற்கு உதாரணமாகும். மேலும், தொழில்களிலும் வாழ்க்கைக் கோலங்களிலும் ஏற்படும் மாற்றங்களும் உடைகளில் மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாயின. இதன் விளைவாக நமக்கு அவசியமான ஆடைகள், புடவைகள் என்பவற்றின் அளவு அதிகரிக்கின்றது. ஆத்துடன், சனத்தொகை அதிகரிப்பினுலும் புடவை வகைகளின் தேவை அதிகரிக்கின்றது. இன்று, பல்வேறு மோஸ்தர்களில் அமைந்த உடைகளைக் குறிப்பாக, நகர மக்கள் அணிய முற்படுவதால், மிக விரைவாக மாற்றமடையும் கேள்விக் கமையப் புடவை வகைகளை வழங்க வேண்டி ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய உற்பத்தி, அதிகரித்துவரும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதியதாக அமையாமையினுலும், நவீன பாங்கான புடவைகளையும் மோஸ்தர்களையும் மக்கள் விரும்புவதனுலும் வெளிநாடுகளிலிருந்து புடவை வகைகளை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இதற்காகக் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டு நாணயமாற்று செலவாகின்றது. 7 ஆம் படத்தைப் பாருங்கள்.

## வெளி நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் புடவைகளினதும் தயாரிக்கப்பட்ட ஆடைகளினதும் பெறுமதி




படம் 7

மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கை, 1982.

இலங்கையின் சனத்தொகையில் பெரும் பகுதியினர் இளைஞர்களாக இருப்பதனுல் புதுப்புது விதமான ஆடையணிகளுக்கான கேள்வி ஏற்படுவதற்கு இவர்கள் காரணமாகிருர்கள் என்று எண்ண இடமுண்டு. 1981 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி முழுச் சனத்தொகையில் 35.3 வீதத்தினர் 15 வயதுக்குட்பட்டவர்களாகவும் 47.5 சதவீதத்தினர் 15 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும் இருப்பதிலிருந்து இது தெளிவாகின்றது. கைத்தறியினுல் ஆடை நெசவு செய்யும் பண்டைய முறை வேறு நாடுகளில் உள்ளது போன்று இலங்கையிலும் பயன்படுத்தப் படுகின்றது எனினும் விஞ்ஞான வளர்ச்சி, தொழினுட்ப வளர்ச்சி காரணமாகப் புடவை உற்பத்தி முறைகள் இன்று பெரிதும் மாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைந்துள்ளன. மின்சாரத்தினுல் இயங்கும் நெசவாலைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் புடவை உற்பத்தி இன்று, முதலிடம் வகிக்கின்றது. இயந்திர உபகரணங்களினூடாக, இலகுவாகவும் விரைவாகவும் புடவைகளை உற்பத்தி செய்ய முடிகின்றது.

18 ஆம் நூற்றுண்டில் கண்டுபிடிக்கப்பட்ட அடிப்படை இயந்திரங்கள் காரணமாகப் புடவைக் கைத்தொழிலில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. ரிச்சர்ட் ஆக்ரைட், ஜேம்ஸ், என்போர் கண்டுபிடித்த நூல் நூற்கும் தறிகள் இரண்டைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். கைத்தொழிற் புரட்சிக்கு அடிப்படையாக அமைந்த இயந்திரங்களின் பயனுகப் புடவை உற்பத்தி அதிகரித்ததுடன் சர்வதேச வர்த்தகமும் அபிவிருத்தியடைந்தது. இயந்திரங்களை இயக்குவதற்கு மின்சாரம் பயன்படுத்தப்பட்ட பின்னர், பாரிய புடவை நெசவாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மின்சார நெசவாலைகள் என வழங்கப்படும் இப்பெரிய நெசவாலைகளில், சிறு தொகையினரான ஊழியர்கள் பெருமளவில் புடவை உற்பத்தி செய்ய முடியும். இத்தகைய நெசவாலைகள் பல இலங்கையில் உண்டு. இவை, அரசாங்கத்தினுலும் தனியார் துறையினராலும் நடத்தப்படுகின்றன. பெரிய அளவில் உற்பத்தி செய்யப்படும் புடவை வகைகளைக் குறைந்த விலையில் விற்கவும் முடிகின்றது.

மக்களின் தேவைகள் அதிகரித்து வருவதுடன் புடவை உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களும் பலவகைப்பட்டனவாக மாறியுள்ளன. 8ஆம் படத்தைப் பாருங்கள். ஆரம்ப கட்டங்களில் கம்பளி, பட்டு, பருத்தி என்பன பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. எனினும், 20 ஆம் நூற்றுண்டில் விஞ்ஞானத் துறையிலும் தொழினுட்பத் துறையிலும் ஏற்பட்ட அபிவிருத்தியின் விளைவாக, இன்று, மனிதன் விதவிதமான நார்களைப் பயன்படுத்த முடிந்துள்ளது.

அன்று போலன்றி, இன்று, பல்வேறு வர்ணங்களில் அமைந்த சாயங்கள் தயாரிக்கப்படுவதனுலும், புடவை உற்பத்தியில் நவீன விஞ்ஞான முறைகள் பயன்படுத்தப்படுவதனுலும், அலங்காரமான வர்ண ஜாலங்களைப் பயன்படுத்த முடிந்துள்ளது. விசித்திரமான வர்ணங்களை மட்டுமன்றி, புடவைகளின் தன்மைகளையும் தேவைக்கேற்ப மாற்றியமைக்கும வல்லமை, இன்று, புடவைக் கைத்தொழில் பெற்றுள்ள விசேட வெற்றியாகும்.

இன்று, புடவை நெசவுக்காகப் பயன்படுத்தப்படும் நார் வகைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:—

(i) விலங்குகளிலிருந்து பெறப்படும் நார் வகைகள்: விலங்கு உரோமம், பட்டுப் பூச்சியிலிருந்து பெறப்படும் பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் என்பன இவ்வகையிலடங்கும். மிகப் பண்டைய காலம் முதல் மனிதன், புடவை உற்பத்திக்கு உரோமத்தைப் பயன்படுத்தி வந்துள்ளான். பட்டுப் புடவைக்கும் நீண்ட வரலாறு ஒன்று உண்டு. அலங்காரமான வர்ணங்களை ஏற்றுவதற்குப் பட்டை இலகுவாகப் பயன்படுத்த முடிந்தது. உதாரணம்: செம்மறி ஆட்டு உரோமம் பட்டுப் பூச்சி.

(ii) பல்வேறு தாவரங்களிலிருந்து பெறப்படும் நார் வகைகள், மரப் பட்டைகள், இலை, காய் என்பவற்றிலிருந்து பெறப்படும் நார் வகைகள்: உதாரணம்: ஜூட் ஃபிலக்ஸ், பருத்தி. உலகில் புடவை உற்பத்திக்கெனப் பெரிதும் பயன்படுத்தப்படுவது பருத்தியாகும். லினன் எனப்படும் புடவைக்கு ஃப்ளக்ஸ் பயன்படுத்தப்படுகின்றது. சாக்கு தயாரிப்பதற்கும் வேறு சில புடவை வகைகளுக்கும் ஜூட் பயன்படுத்தப்படுகின்றது.

(iii) உலோகங்களிலிருந்தும் கனியங்களிலிருந்தும் பெறப்படும் நார் வகைகள்: வெள்ளி, பொன், அஸ்பெஸ்டஸ் என்பவற்றிலிருந்து பெறப்படும் நார் இவ்வகையில் அடங்கும். புராதன, பெறுமதி மிக்க புடவைகளுக்கு உலோக நார் வகைகள் பயன்படுத்தப்பட்டன. இன்றும் இவை குறைந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன.


(iv) இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் செயற்கை நார் வகைகள்: 20 ஆம் நூற்றாண்டில், விஞ்ஞான, தொழினுட்ப அபிவிருத்தி காரணமாக விறகு, கனிய எண்ணெய், நிலக்கரி என்பவற்றிலிருந்து பெறப்படும் உப உற்பத்திகள் செயற்கை நார் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இன்று பெருமளவில் பயன்படுத்தப்படும் பிரபல்யம் மிக்க செயற்கைப் புடவை வகைகளான நைலோன், டெற்றோன், டக்றோன், பொலியெஸ்டர், பிறைநைலோன் என்பவை இப்பிரிவில் அடங்கும். உற்பத்தி செய்ய விரும்பும் புடவை வகையின் தேவைக்கமையச் செயற்கை நார்களிலுள்ள சக்தி, மீள்தகவு, நிறம், வடிவம் என்பனவற்றை மாற்றியமைக்க முடியும்.

(v) அண்மைக் காலத்தில், செயற்கை நாரையும் பருத்தியையும் வெவ்வேறு அளவுகளில் கலந்து புடவை வகைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உதாரணம்: ''டெற்றோன் கொட்டன்'', ''பொலியெஸ்டர் கொட்டன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மக்களின் புடவைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் விதம்





பட்டைகள், இலை குழைகள் ஆதியன




தாவர நார்ப் புடவை




விலங்கு நார்ப் புடவை




செயற்கைப் புடவை

படம் 8

மக்களுக்கு அவசியமான புடவை வகைகளை வழங்குவதில் புடவை உற்பத்தி முக்கியத்துவம் பெறுவது போலப் பல்வேறு கோலங் களிலும் மோஸ்தர்களிலும் ஆடைகளைத் தயாரித்தலும் இன்று ஒரு கைத்தொழிலாக உருவெடுத்துள்ளது. பல்வேறு மாதிரிகளில் பல்வேறு மோஸ்தர்களில் தைத்துப் பூர்த்தி செய்யப்பட்ட ஆடை களை உற்பத்தி செய்தல், இன்று நமது நாட்டிலும் கூட வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நாணய மாற்றைச் சம்பாதித்துத் தரும் ஒரு கைத் தொழிலாக அமைந்துள்ளது. உதாரணம்: ஷேட், காற்சட்டை போன்ற ஆண்களுக்கான ஆடைகள், பெண்களுக்கான ஆடைகள், குழந்தைகளுக்கான ஆடைகள்,

**செயன்முறைகள்:**

(1) இலங்கையில், அரசாங்கத்தினுல் நடத்தப்படும் பெரிய அளவிலான புடவைத் தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்களை அறிந்துகொள்ளுங்கள்.

(2) பல்வேறு துணி வகைகளின் மாதிரிகளைச் சேர்த்து, உங்கள் வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டிப் பெயரிடுங்கள்.


(3) பல்வேறு வகையான துணி வகைகளை உற்பத்தி செய்வதில் பிரசித்தி பெற்ற நாடுகளின் பட்டியல் ஒன்றைத் தயாரியுங்கள்.

(4) இலங்கையில் தைத்துப் பூர்த்தி செய்யப்பட்ட ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படும் இரண்டு நாடுகளைக் குறிப்பிடுங்கள்.

(5) நாம் புடவைகளை இறக்குமதி செய்யும் இரண்டு நாடுகளைக் குறிப்பிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. மக்கள் தேவைகள்: உறையுள்

நாம் வாழ்வதற்கு ஓர் உறைவிடம் அவசியம். உறையுள், மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்ருகும். மக்களுக்கு இருப்பிடங்களை வழங்குவதும் வீடுகளைக் கட்டுவதற்கு வேண்டிய வசதிகளை வழங்குவதும் அவசியமாகும்.

வெயில், மழை, காற்று போன்ற இயற்கை உபாதைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே மனிதன், ஆதியில், உறையுளை நாடினுன். காட்டு மிருகங்களிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டும் உறையுளின் துணையை மனிதன் நாட வேண்டியதாயிற்று. காலக் கிரமத்தில் மனிதன் நிலையாக வாழப் பழகிக்கொண்டான். இக்காலப் பகுதி முதல் தனது தனிப்பட்ட தேவைகளைப் பேணிக்கொள்வதற்கும் உறைவிடம் அவனுக்குதவியது. மனிதன், அன்று முதல் இன்று வரை, விதவிதமாகவும் விசித்திரமாகவும் தனது உறைவிடத்தை அமைத்துக்கொள்வதற்கு முயற்சி செய்து வந்துள்ளான்.

ஆதி காலத்தில், மனிதன், உறைவிடங்களை அமைப்பதற்கு அவசியமான பொருள்களைத் தனது சுற்றுடலிலிருந்து பெற்றுக் கொண்டான். மிகப் புராதன காலத்தில், மரக் கிளைகளில், விலங்குகளின் தோல்களைப் பரப்பித் தற்காலிகமாக உறைவிடங்களை மனிதன் அமைத்துக்கொண்டமை பற்றி நாம் அறிவோம். அதே வேளை, கற்குகைகளும் உறைவிடங்களாகப் பயன்படுத்தப்பட்டன. சில வனவாசிகள் இன்றும் கற்குகைகளில் வாழ்ந்து வருகிருர்கள் என்பதை ஒரு சமயம் நீங்கள் அறியாதிருக்கலாம். மரக் கிளைகளை ஒருங்கு சேர்த்துக் கட்டி அதை மனிதன் உறைவிடமாக அமைத்துக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

ஆதியில், மனிதன், சூழலுக்கு அடிமைப்பட்டு, சுற்றுடலிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தித் தனது உறையுளை அல்லது வீட்டை அமைத்துக்கொண்டமை தெளிவு. கற்குகைகளும், எஸ்கிமோவர் பனிக்கட்டிகளினுல் அமைத்துக் கொண்ட 'இக்லு' வீடுகளும் இதற்கு உதாரணங்களாகும்.

புராதன காலத்தில் இலங்கையில் வாழ்ந்த வேடர்கள் கற்குகைகளில் வாழ்ந்தமைக்கு ஆதாரங்கள் உண்டு. பிற்காலத்தில், ஆரியரின் வருகையுடன் நிரந்தரமான வீடுகளை அமைத்துக்கொள்வது பற்றி அவன் கவனம் சென்றபோதும் சூழலிலிருந்து இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருள்களே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. கூரையை வேய்வதற்குப் பயன்படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடுகு, வைக்கோல், புல் வகைகள், ஓடு, போன்றனவும் சுவர்களை எழுப்புவதற்குப் பயன்படுத்தப்பட்ட களிமண், செங்கல், போன்றனவும் அவ்வப் பிரதேசங்களிலிருந்து பெற முடிந்த பொருள்களேயாகும்.

இலங்கையின் பண்டைய சமூகத்தினர் வாழ்ந்த நகரங்களின், கட்டிடங்களின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளபோதிலும், பண்டைய வீடுகளின் இடிபாடுகளைக் காண முடியவில்லை. சாதாரண வீடுகள், அத்தகைய சக்தி வாய்ந்த பொருள்களினுல் கட்டப்பட வில்லை என்பதை நாம் இதிலிருந்து விளங்கிக்கொள்ளலாம். நமது நாட்டில் காணப்பட்ட சாதாரண உறையுள்கள் களிமண்ணினுல் கட்டப்பட்டு வைக்கோலினுல் வேயப்பட்டிருந்ததென்பதைப் பண்டைய வரலாற்று நூல்களிலுள்ள குறிப்புக்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

அன்றைய அரசர்கள், அலங்காரமான மாளிகைகளில் வாழ்ந்தனர். அவர்களுக்கெனத் தோட்டங்களும் பூங்காக்களும் பேணப்பட்டன. பிரபுக்களின் வீடுகளுக்கும் சாதாரண மக்களின் வீடுகளுக்குமிடையில் அதிக வேறுபாடுகள் காணப்பட்டன. பிரபுக்களின் வாசஸ்தலங்கள் பல அறைகளைக் கொண்டிருந்தன. இக் கட்டிடங்கள் கல்லினுலும் செங்கல்லினுலும் கட்டப்பட்டு ஓட்டினுல் வேயப்பெற்றிருந்தமை ஒரு விசேட இலட்சணமாகும். உப்பரிகைகள், கதவுகள், ஐன்னல்கள் என்பவற்றைக்கொண்ட மாடி வீடுகள் பற்றியும் பழைய நூல்களில் குறிப்புக்களைக் காணலாம்.

அன்றைய சமுதாயத்தின் மக்கள் வாழ்ந்த வீடுகளில் வரையறைக்குட்பட்ட வீட்டுப் பாவனைப் பொருள்கள் உபயோகிக்கப்பட்டன. கட்டில்களுக்கும் கதிரைகளுக்கும் பதிலாகப் பாய்கள் பயன்படுத்தப்பட்டன. அரசர்கள், புத்த குருமார், பிரபுக்கள் போன்ருேருக்காகவே நாற்காலிகள் பயன்படுத்தப்பட்டன. அன்று வாழ்ந்த சாதாரண மக்கள், உட்காருவதற்கும் நித்திரை செய்வதற்குமென வீட்டின் ஒரு புறத்தில் நிலத்தைவிட உயர்ந்த மட்டத்தில் களி மண்ணினுலான குந்துகளைக் கட்டினர். விருந்தினர் வந்தபோது குந்தின் மீது பாயை விரித்து அதில் அமர வைத்தனர். இத்தகைய எளிய முறைகளைப் பின்பற்றும் மக்களை இன்றும் வன்னிப் பிரதேசத்திலும் மலை நாட்டிலுள்ள தூரக் கிராமங்களிலும் காண முடியும். அடுக்களைப் பொருள்களும் எளிய வாழ்க்கைக்கு உகந்தனவாகவே அமைந்தன. ஆகவே அக்காலத் தேவைகள் பெரிதும் வரையறைக்குட்பட்டிருந்தமையை நாம் அவதானிக்க முடியும்.

இன்றும் கூட, கிராமப் புறங்களில் களிமண் சுவர்கள், அல்லது செங்கல்லினுல் கட்டப்பட்டு சுண்ணும்பு பூசிய சுவர்கள் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளைக் காண முடியும். கிடுகு, வைக்கோல், அறுகம் புல் என்பன கூரையை வேய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. கிராமத்தில், முன்னேறிய குடும்பங்கள் தமது வீடுகளை ஓட்டினால் வேய்ந்து செங்கல்லினால் கட்டினர்.

உலகின் ஏனைய நாடுகளில் உள்ளது போன்று, இலங்கையிலும், இன்று, வீடுகளைக் கட்டுவதற்குப் பல்வேறு விதமான பொருள் களைப் பயன்படுத்துகின்றனர். அதிக பலம் வாய்ந்த வீடுகளைக் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்று, வீடுகள் மக்களின் பல்வேறு தேவைகளுக்குப் பொருத்த மான விதத்தில் அமைக்கப்படுகின்றன. அலங்காரம் மிக்க, சகல வசதிகளும் அமையும்படி திட்டமிடப்பட்ட வீடுகளைக் கட்டுவ தற்கே இன்று எல்லோரும் முயல்கிறார்கள். சீமேந்து, இரும்பு, கொங்கிறீட் போன்ற பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் பலம்மிக்க வீடுகள் கட்டப்படுகின்றன. இவற்றைக் கட்டுவதற்கு மனித உழைப்பும் இயந்திர உபகரணங்களும் பயன்படுத்தப்படு கின்றன. வீடு கட்டுவதற்கு வேண்டிய பொருள்கள் இன்று, சூழலில் இருந்து மட்டும் பெறப்படுவதில்லை. வேறு பிரதேசங் களிலிருந்தும் பெறப்படுகின்றன. அபிவிருத்தியடைந்த போக்கு வரத்து முறைகள் காரணமாகவும் சர்வதேசத் தொடர்புகள் காரணமாகவும் வேறு நாடுகளிலிருந்தும் கட்டிடப் பொருள்களும் அலங்கார உபகரணங்களும் தருவிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படு கின்றன.

பல்வேறு திட்டங்களுக்கமையக் கட்டப்படும் பல்லடுக்கு மாடி வீடுகளை நகரங்களிலும் நகர் சார்ந்த பிரதேசங்களிலும் இன்று அதிக அளவில் காணலாம். கொழும்பு நகரம் இதற்கோர் சிறந்த உதாரணமாகும். பெரிய வீடொன்று அலகுகளாகப் பிரிக்கப்பட் டிருப்பதையும் காண முடியும்.

அன்று போலன்றி, இன்று, மக்கள் நகரங்களை நோக்கிப் பெயர் வதை நாம் காண முடிகின்றது. தொழில் வாய்ப்புக்களை நாடியும் கூடிய வசதிகளை அனுபவிக்கும் நோக்கத்துடனும் மக்கள் நகர வாழ்க்கையை விரும்பி வருகிறார்கள். இப்படியாக, அதிக அளவில் ஏற்படும் பெயர்வு காரணமாக மட்டுமன்றி, அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாகவும் அவர்களுக்குத் தேவையான விதத் தில் வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், இன்று அரசாங் கம் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாகும்.

பெருமளவில் வீடுகளைக் கட்டும்போது, பயன்படுத்தப்படும் வளங்களின் அளவும் அதிகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரங்களில், கட்டிடங்களுக்காக ஒதுக்கக்கூடிய நிலத்தின் அளவு வரையறைக்குட்பட்டதாக இருப்பதனால், ஒன்றுக்கொன்று நெருக்கமாக அமைந்த வீடுகளும் பல்மாடி வீடுகளும் விரும்பப்படுகின்றன. மாநகர சபை, நகர சபை என்பவற்றின் எல்லைக்குள் கட்டப்படும் வீடுகள் தொடர்பான திட்டங்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அங்கீகாரத்தைப் பெறுவது அவசியம். அதிக சன நெருக்கமுள்ள நகர்ப் புறங்களில் வாழும் மக்களின் சுகாதாரத்தைப் பேணும் வகையில் வீடுகளைக் கட்டுதல் இதனால் உறுதிப்படுத்தப்படுகிறது.

பிரதான நகரங்களிலும் அவற்றைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும், செல்வம் படைத்தவர்கள் அலங்காரம் மிக்க மாட மாளிகைகளை அமைத்துள்ள போதிலும், சேரி வீடுகளில் வாழும் நிலமற்ற மிக வறிய மக்களும் இப்பிரதேசங்களில் காணப்படுகிறார்கள்.

அன்று போலன்றி, இன்று, பயன்படுத்தப்படும் வீட்டுப் பொருள்களைப் பொறுத்தமட்டில் பெரும் வேறுபாட்டைக் காண முடியும். காலத்துக்குப் பொருத்தமான நவீன வீட்டுப் பொருள்களைப் பணம் படைத்தவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

மகிழ்ச்சியான வாழ்வுக்கு அவசியமான பொருள்களில் மக்களின் கவனம் ஈர்க்கப்படுவதை நாம் அவதானிக்க முடியும். வீட்டுக்கான பொருள்களை நாம் தேர்ந்தெடுக்கும்போது, வசதியான வாழ்க்கையை அமைப்பதற்கு உதவக்கூடிய பொருள்களையே நாடிப் பெற்றுக்கொள்கிறோம். மின்சார வெளிச்சம், மின்சாரத்தினால் இயங்கும் உபகரணங்கள், குளிர் சாதனப் பெட்டி, மற்றும் சுகபோகப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கே எல்லோரும் முயல்கிறார்கள். உட்புறக் கிராமங்களிலும் கூட தையல் இயந்திரம், பெற்றோமக்ஸ் விளக்கு, வானொலி போன்றவற்றைக் காண முடியும். அடுக்களை உபகரணங்கள் கூட வித்தியாசமான விதத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். சமூகத்தில் முன்னேற்றம் ஏற்படும்பொழுதும் சனத்தொகை அதிகரிக்கும்பொழுதும் மக்கள் தேவைகளும் அதிகரிக்கின்றன என்பதையே நாம் இதிலிருந்து அறிந்துகொள்கிறோம். இயந்திர உபகரணங்களின் மூலம், கூடிய வசதியுள்ள வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை நாம் பெற்றுக்கொள்ளும் போது நாட்டின் வளங்களும் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

நவீன தொழினுட்ப விருத்தி காரணமாக நவீன வீட்டுப் பொருள்களை இலகுவாகப் பயன்படுத்த முடிகின்றது. மின்சாரத்தினால் இயக்கப்படும் அடுக்களை உபகரணங்கள் இதற்கு உதாரணமாகும். சமூக நிலையை அளவிடுவதற்கு, இன்று, பெருமளவில்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் வாழும் வீட்டை மட்டுமன்றி அவர் பயன்படுத்தும் பொருள்களையும் அளவு கோலாகக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. தத்தமது சமூக நிலையையும் வாழ்க்கை நிலையையும் உயர்த்திக் கொள்வதற்கே ஒவ்வொருவரும் முயல்கிறார்கள். எனவே, மிக அழகான வீடுகளைக் கட்டுவதற்கும் அவற்றின் அழகு குன்றாது பேணுவதற்குமே ஒவ்வொருவரும் முயலுகிறார்கள். கூடம் முதல் அடுக்களை வரையில் இவ்வேறுபாட்டை நாம் காண முடியும்.

## தேவைகளுக்கேற்ப விடுகளின் இயல்பு மாற்றமடைந்துள்ள விதம்




படம் 9

நகரங்களை அண்டியுள்ள சன நெருக்கம் மிக்க பிரதேசங்களிலேயே வீடுகளுக்கான நெருக்கடி அதிக அளவில் காணப்படுகின்றது. இத்தகைய பிரதேசங்களில் பெருந்தொகையினர் வாடகை வீடுகளில் வாழ்கிறார்கள். தமது வருமானத்துக்கமையக் காணித்துண்டொன்றை வாங்குவதற்கு முடியாது அல்லற்படுவோர் தொகை மிக அதிகமாகும்.

வீடமைப்புத் திட்டங்கள் மட்டுமன்றி, அவ்வீடுகளுக்கு அவசியமான நீர், மின்சாரம் போன்றவற்றை வழங்குதலும் நகரங்களை அண்டியுள்ள பிரதேசங்களிலிருந்து இலகுவாகப் போக்குவரத்துச் செய்யக்கூடிய வகையில் போக்குவரத்து வசதிகளை வழங்குதலும் தெருக்களையும் வீதிகளையும் அமைத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயன்முறைகள்:**

(1) நமது நாட்டில் அன்று முதல் இன்று வரையாகவுள்ள வீடுகளின் வெவ்வேறான வகைகளைக் காண்பிப்பதற்குப் படங்களை வரையுங்கள்; படங்களைச் சேகரியுங்கள்.

(2) பல்வேறுபட்ட சூழல்களுக்குப் பொருந்தும் வகையில் அவ் வப் பிரதேசங்களுக்கு உரித்தான பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்ட வீடுகளின் படங்களைச் சேகரியுங்கள். உதாரணம்: 'இக்லு', பலகை வீடுகள், கற்குகைகள், கூடாரங்கள்.

(3) வீடுகளைக் கட்டுவதற்கு அன்றும் இன்றும் பயன்படுத்தப் படும் பல்வேறு பொருள்களின் நிரல் ஒன்றைத் தயாரியுங் கள். அதற்குக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்துங்கள்.

வீடு கட்டுவதற்குப் பயன்படும் பொருள்கள்


| அன்று | இன்று |
|---|---|
| கூரை | |
| சுவர் | |
| நிலம் (தரை) | |
| ஏனைய | |

(4) கிராமப்புற வீடொன்றையும் நகர்ப்புற வீடொன்றை யும் வரையுங்கள். இத்தகைய படங்களைச் சேகரியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. மக்கள் தேவைகள்:
## சுகாதாரமும் உடனலம் பேணலும்





தனிப்பட்ட ஒவ்வொருவரும் சுகதேகியாக இருத்தல், உடனல வளம்மிக்க மக்கள் சமுதாயத்தை உருவாக்குவதற்கு மிகவும் உதவியாக அமையும். ஒரு நாட்டின் அபிவிருத்தி, அந்நாட்டு மக்களின் செயலார்வம் மிக்க சுறுசுறுப்புத் தன்மையிலேயே தங்கியிருக்கும். சுறுசுறுப்புக்குக் காரணமாக அமையும் அடிப்படை விடயங்களுள் உடனல வளம் பெற்றிருத்தல் முக்கியமானதொன்றாகும். எனவே, நாம் சிறந்த ஒரு சுகாதார சேவையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையில், சுகாதாரம், உடனலம் பேணும் நடவடிக்கைகள் பற்றிக் கவனித்துப் பார்க்கும்போது, 1981 ஆம் ஆண்டின் மரண வீதம், சனத்தொகையில் 1000 இற்கு 6.9 ஆக இருந்தமை புலப்படுகின்றது. இதன்படி, இலங்கையின் இறப்பு வீதம், சில அபிவிருத்தியடைந்த நாடுகளின் இறப்பு வீதத்தை விடக் குறைவாக இருக்கக் காணலாம். இக்கால கட்டத்தில், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சுகாதார சேவை நடைமுறையில் இருப்பதே இறப்பு வீதம் இவ்வண்ணம் குறைவதற்குக் காரணமாகும். தனிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ஒவ்வொருவரினதும் கல்வி மட்டம் உயரும்போது, சுக தேகி நிலையைப் பேணுவதற்கும் உடற் சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கும் விடயங்களைத் தவிர்ப்பதற்கும் அவர்கள் முயலுவார்கள்.

வரலாற்று உண்மைகளின்படி பார்க்கும்போது, அன்றைய சமூகத்தில், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முறையான சுகாதார சேவை இருந்ததென்று நம்ப இடமுண்டு. சுதேச வைத்திய முறை, அறுவைச் சிகிச்சை முறை, விலங்கு வைத்திய முறை என்பன மிக வளர்ச்சியுற்றிருந்தன. அரசர்கள் கூட, வைத்தியக் கலையைக் கற்றறிலிருந்து, வைத்தியக் கலையை மிக முக்கிய விடமாக மக்கள் கருதியதுடன் கௌரவமான சேவையாகவும் கணித்தனர் என்பதும் தெரியவருகிறது. புத்ததாஸ மன்னன் (கி.பி. 340–368) சிறந்த ஒரு வைத்தியனாக வரலாற்றில் இடம் பெற்றுள்ளான். அவன் விலங்குகளுக்குக் கூட சிகிச்சை அளிக்க முன்வந்த சந்தர்ப்பங்கள் வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றன.

மேலும், ஆடு மாடு நாய் போன்ற விலங்குகளைப் பீடிக்கும் நோய்களுக்குப் பரிகாரம் தேடும் முறைகளும் காணப்பட்டன. இன்றும் கூட சிங்கள வைத்திய முறையில் இத்தகைய சிகிச்சை முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வைத்தியரேனும் இருந்தார். இவ்வைத்தியர்கள் ஆயுள்வேத வைத்தியத்தில் மட்டுமன்றி, விலங்கு வைத்தியம், இயந்திர மந்திரங்களை உள்ளடக்கிய செய்வினை சூனியம் போன்ற கலைகளிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர். அன்று வைத்தியசாலைகளும் காணப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. மிகிந்தலையிலிருந்த புராதன வைத்தியசாலை ஒன்றின் இடிபாடுகளை இன்றும் காணலாம். அங்கு வைத்தியத்துக்குப் பயன்படுத்தப்பட்ட 'மருந்து ஓடம்' ஒன்றைக் காணலாம்.

மிக விருத்தியடைந்த தேசிய வைத்திய முறை ஒன்று பண்டைக் காலத்திற் காணப்பட்டது. 'ஆயுள் வேத வைத்திய முறை' என்று வழங்கப்படும் அதை மீண்டும் உயர் நிலைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிங்கள அரசர்களின் காலம் முதலாக நிலவிவரும் தேசிய வைத்திய பரம்பரைகள் பற்றிய தகவல்களையும் விசேட வைத்திய முறைகள் பற்றிய செய்திகளையும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அப்பரம்பரைகளுக்குரிய சில நூல்கள் ஓலைகளிலும் ஏடுகளிலும் எழுதப்பட்டவை – பல்வேறு வைத்திய முறைகள் பற்றிய விலைமதிப்பு மிக்க தகவல்களைக் கொண்டுள்ளன. பொது மக்களின் பேச்சு வழக்கில் 'சிங்கள வைத்தியம்' என்று குறிப்பிடப்படும் ஆயுள்வேத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய முறை, சிங்களவர்களுக்கு மட்டும் வரையறுக்கப் பட்ட ஒரு வைத்திய முறை என்று நீங்கள் எண்ணலாம். எனினும், இந்நாட்டில் வாழும் பல்வேறு இனத்தவர்களுக்கும் உரித்தான தேசிய வைத்திய பரம்பரைகளும் உண்டு. கண்டிச் சிங்கள மன்னர் காலத்தில், அம்மன்னர்களுக்குச் சிகிச்சை அளித்த முஸ்லிம் வைத்திய பரம்பரைகளைச் சேர்ந்த வைத்தியர்கள் இன் றும் மத்திய மலை நாட்டில் காணப்படுகிறார்கள். வைத்தியரத்ன முதியன்ஸேலாகே என்பன போன்ற சிங்களச் சிறப்புப் பெயர் களினால் வழங்கி வரும் முஸ்லிம் வைத்தியர்கள் இன்றும் உளர். குறிப்பிட்ட ஒவ்வொரு குடும்பங்களிலுமுள்ள ஒவ்வொருவரும் குறிப்பிட்டதொரு வகையில் கொண்டையை முடிய வேண்டும் என்று அக்கால சிங்கள மன்னர்கள் ஆணையிட்டபடி கொண்டையை முடியும் வழக்கம் இன்று கூட அவர்களால் பின்பற்றப்படுகின்றது.

சனத்தொகை அதிகரிக்கும் போதும் சனச் செறிவு அதிகரிக்கும் போதும், பரவும் நோய்கள் பரம்பலுக்கான சந்தர்ப்பம் அதிகரிக் கும். பண்டைய காலத்தில், வட இந்தியாவில் 'விஷாலா' என்ற நகரில் பரவும் நோய் பரம்பியமை பற்றி 'புதுகுணலங்காரய' என்ற நூலில் குறிப்பிடப்படுகின்றது. சிரிசங்கபோ மன்னன் காலத் தில் பஞ்சத்துடன் இலங்கையில் பரவும் நோய் பரம்பியமை பற்றி வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது.

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில், இலங்கையில் சனத்தொகை செறிந்த பிரதேசங்களில் பரவிய அம்மை நோய்கள் பற்றியும் வைசூரி போன்ற நோய்கள் பற்றியும் நீங்கள் கேள்விப்பட்டிருப் பீர்கள். 1930 ஆம் ஆண்டைத் தொடர்ந்து வந்த தசாப்தத்தில் மலேரியா நோய் ஆயிரக் கணக்கான உயிர்களைப் பலிகொண்ட பரவும் நோயாகத் திகழ்ந்தது. சிகிச்சையினாலும் நோய் தடுப்பு இயக்கத்தினாலும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கும் வைசூரி போன்ற நோய்களை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கும் முடிந் துள்ளது. எனினும், சனத்தொகை அதிகரிப்பு, சனத்தொகைச் செறிவு என்பவற்றுடன், பல்வேறு வகையான பரவும் நோய்கள் ஒன்றுடனொன்று கைகோர்த்துச் செல்வதால், அவை பரம்புவதற் கான சந்தர்ப்பங்கள் மிக அதிகம். எனவே, சனத்தொகை அதி கரிக்க அதிகரிக்க, நோய்களைத் தடுப்பதற்காக அரசாங்கம் அதிகம் அதிகமாகப் பணத்தைச் செலவு செய்ய நேரிடும். உற்பத்தி நட வடிக்கைகளை விருத்தி செய்தல், தொழில் வாய்ப்புக்களை அதி கரித்தல் போன்ற அபிவிருத்தி தொடர்பான கருமங்களுக்குப் பயன்படுவதற்குள்ள வரையறைக்குட்பட்ட வளங்களையே பெரும் பாலும் நோய்த் தடுப்புத் தொடர்பாகச் செலவிட வேண்டி ஏற் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது இலங்கையிலுள்ள வைத்திய வசதிகளை, அபி விருத்தியடைந்துவரும் ஏனைய நாடுகளிலுள்ள வைத்திய வசதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, நமது நாடு உயர் நிலையிலுள்ளது என்று கூற முடியும். எனினும், இன்று, வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவோரின் தொகை அதிகரித்து வருகின்றமையைப் புள்ளி விபரங்களிலிருந்து கண்டுகொள்ள முடிகின்றது. இலங்கையில் வைத்திய வசதிகள் இலவசமாக வழங்கப்படுகின்றமையினால், சனத்தொகை அதிகரிக்குமிடத்து, வைத்திய வசதிகளும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கப்படல் வேண்டும் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இத்தகைய நலன்புரி வசதிகளை வழங்குவதற்காக மேலதிகப் பணத்தைச் செலவு செய்ய நேரும்.

அதிகரித்துவரும் சனத்தொகையினருக்கு சுகாதார சேவைகள் போன்ற நலன்புரிச் சேவைகளை வழங்கும் பொழுது, அரசாங்கம் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். இன்று, சனத தொகை அதிகரித்துவரும் வேகத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது, இன்றுள்ள அளவைவிட, வருடாந்தம்,

* நாள் ஒன்றுக்கு 1424 பேருக்கு வைத்தியசாலைச் சேவையை வழங்க வேண்டி ஏற்படும்.
* 297 வைத்தியசாலைக் கட்டில்களை வழங்க வேண்டி ஏற்படும்.
* இத்தொகையினருக்கு வேண்டிய வைத்தியர்கள், தாதிமார்கள், உபகரணங்கள், மருந்து வகைகள், துணைச் சேவைகள் போன்றவற்றை வழங்கும் அவசியம் ஏற்படும்.

ஒவ்வொரு 1000 பேரில் 6 பேர் சிகிச்சைக்காக நாள்தோறும் வைத்தியசாலைக்குச் செல்கின்றனர்.

சனத்தொகை அதிகரிக்கும் பொழுது, போசாக்கு மிக்க உணவை வழங்கும் திறன் குன்றும். இதனால் மக்கள் நோய்க்குள்ளாகும் தன்மை அதிகரிக்கும். மக்கள் நோய்க்குள்ளாகும் தன்மை அதிகரிக்க, நாட்டின் உற்பத்தியில் பங்கு பற்றும் ஆற்றலும் குறையும். உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுவதும் வழங்கக்கூடிய சுகாதார வசதிகள் வரையறுக்கப்படுவதும் இதனால் ஏற்படும் ஏனைய விளைவுகளாகும். எனவே, இன்று, குடும்ப சுகாதாரச் சேவைப் பிரிவு, பெருமளவிற் பணத்தைச் செலவிட்டு அறிவுறுத்தல்களையும் குடும்பத்திட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிவையும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இன்று, வைத்தியசாலைகளில் மிக முன்னேறிய முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஒவ்வொரு நகரத்திலும் ஒவ்வொரு வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையும் தூரக் கிராமங்களில் கிராம வைத்தியசாலைகளும் அமைக் கப்படுவதன் மூலம் அவசியமான சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலதிகப் பணம் செலுத்தித் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்குத் தனியார் வைத்தியசாலைகளும் உண்டு.

கண் வியாதிகள், புற்று நோய், தொழு நோய், சிறுவர் நோய் கள் போன்றவற்றிற்கு விசேட வைத்திய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு, இன்று இவற்றுக்கென நிறுவப்பட்ட தனி வைத்தியசாலைகள் உண்டு. எனினும், இவ்வைத்தியசாலை களில் சிகிச்சை பெறுவோரின் தொகையும் அதிகரித்துள்ளது. சுகாதார வசதிகள், விருத்தியடைந்துள்ள போதிலும், வைத்திய சாலைகளில் இட நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களும் உள.

மலேரியா ஒழிப்பு இயக்கம், பயிலேரியா ஒழிப்பு இயக்கம் போன்ற சேவைகளின் மூலம் மக்களின் உடனலத்தைப் பேணு வதற்கு அரசாங்கம் வழிவகைகளை மேற்கொள்கின்றது

இன்று, இலங்கையில் மேற்கு நாட்டு வைத்திய முறையையும் தேசிய வைத்திய முறையையும் விருத்தி செய்வதற்கு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன. வைத்திய கலாசாலைகள் அமைக் கப்பட்டு அவை விரிவாக்கப்படுகின்றன. இவற்றின் மூலம், அதி கரித்துவரும் மக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு வருடா வருடம் குறிப்பிடத்தக்களவு தொகையில் வைத்தியர்கள் பயிற்றப் படுகிறுர்கள்

பொதுச் சுகாதார சேவைகளை நடத்திச் செல்வதற்காக அர சாங்கம் பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது: எனவே, அதிகரித்துவரும் மக்களுக்கு ஈடு செய்யும் முறையில் இச்சேவை களை விஸ்தரித்தல் இலகுவான காரியமல்ல. தம்முடைய நன்மை கருதியும் நாட்டின் அபிவிருத்தி கருதியும் சுகதேகியாக வாழ வேண்டியது நமது கடமையாகும்.

**செயன்முறைகள்:**

(1) உங்களுடைய இளைய சகோதரன் அல்லது சகோதரிக்கு நீங்கள் அறிமுகப்படுத்தக்கூடிய, நாளாந்தச் சுகாதாரப் பழக்கங்களைப் குறிப்பிடுங்கள். அது தொடர்பான படம் ஒன்றை வரையுங்கள்.

(2) உடனல வளம் மிக்க மக்களை உருவாக்குவதற்காக, நமது நாட்டில் வழங்கப்படும் சுகாதார சேவைகள் பற்றிக் கேட்டறிந்து கொள்ளுங்கள். கீழே தரப்பட்டுள்ள தலைப்பு களுக்கமைய அவற்றை வகைப்படுத்துங்கள்.

நோய் சிகிச்சைச் சேவைகள், நோய்த் தடுப்புச் சேவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. மக்கள் தேவைகள்: கல்வி

கல்வி, மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்ருகும். கற்ற ஒருவருக்கும் கல்லாத ஒருவருக்கும் இடையில் பெரியதோர் இடை வெளி உண்டு. கல்வி கற்ற ஒருவர் தனக்குத் தானே பயன்படுவது போல நாட்டுக்கும் பயன்படுவார். மேலும், கல்வியின் மூலம் வளரும் திறமைகளினூடாகவே நாம் வாழும் சூழலிலிருந்து ஆகக் கூடிய அளவு பயனைப் பெற முடியும். கல்வியே கவருவதற்கரிய தனம் என்று நமது முன்னோர்கள் அனறு கூறியமைக்கும் இதுவே காரணமாகும். அன்று முதல் இன்றுவரை, நமது நாட்டு மக்கள், பல்வேறு வழிகளினூடாகக் கல்வியைப் பெறுவதற்கு நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளனர்.


அன்று, நமது நாட்டில் கல்வித் துறை ஏறத்தாழ முற்ருக பௌத்த பிக்குகளினுல் நடாத்தப்பட்டுவந்தது. பௌத்த மத போதனைகள், 'பிரித்' ஓதுதல், மத விழாக்களில் கலந்துகொள்ளு தல், நந்நெறிகளுக்குச் செவி சாய்த்தல் என்பன போன்றவற்றின் மூலம் மக்கள் தம்மை அறியாமலேயே ஓரளவு கல்வியைப் பெற் றனர். மேலும், அன்று, விசேடமாக, சமயத் தலங்களை மைய மாகக் கொண்டு வழங்கப்பட்ட கல்வி, சமயச் சார்புடையதாகவே இருந்தது. அத்தருணத்தில் 'பிரிவேனைக் கல்வி' முக்கிய இடம் வகித்தது. பிரிவேனைகளில் கல்வி கற்ற பலர் பௌத்த பிக்குக ளாவர். சாதாரணமாக, கிராமப் பிரதானிகளின் பிள்ளைகளும் பிரிவேனைகளில் கல்வி பயின்றனர். சாதாரண மக்களின் பிள்ளை களுக்கு இத்தகைய கல்வி கற்கும் வசதி மிகவும் அபூர்வமாகவே கிட்டியது; கல்வி கற்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்க வில்லை எனலாம்.

தேசிய வைத்தியக் கல்வி புகட்டல், பிரிவேனைக் கல்வியின் ஓர் அம்சமாக விளங்கியது. எனவே, அக்காலத்தில் வைத்தியக் கல்வி பயின்ற ஒருவர், பில்லி சூனியம் தொடர்பான சாத்திரம், ஜோதிட சாத்திரம் போன்ற வைத்தியத்துடன் தொடர்புற்ற வேறு பிர தான கலைகளையும் கற்கும் சந்தர்ப்பம் பெற்ருர்.

அன்று, கல்வி, பௌத்தத்தைப் பின்னணியாகக்கொண்டு வளர்ச் சியுற்றது. பிற்காலத்தில் எழுதப்பட்ட சகல தூதுக் காவியங் களும் காவியசேகர போன்ற ஏனைய காவியங்களும் இதற்கு உதாரணங்களாகும். இவ்வண்ணம் எழுதப்பட்ட கவிதை நூல் களும் உரை நடை நூல்களும் இன்றும் படித்துச் சுவைக்கக்கூடிய வகையில் எழுதப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்களும் கூட, பழைய சமயத் தலங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். துட்ட கைமுனு போன்ற அரசர்கள் பௌத்த பிக்குகளின் உபதேசங் களுக்கும் ஆலோசனைகளுக்குமேற்ப ஆட்சி நடத்தியுள்ளனர். யுத் தக் கலையிலும் கைத்தொழில்களிலும் பொது மக்கள் பயிற்சி பெற்றனர். கலைகள் தொடர்பான கல்வி, தொழினுட்பத் துறை, அழகியல் அம்சங்கள் தொடர்பான அறிவும் திறமைகளும் பரம் பரை உரிமை பெற்றனவாக அமைந்தன.

செவிசாய்த்துக் கேட்டலும் மனனம் செய்தலும் அன்றையக் கல்வி முறையின் விசேட அம்சமாக அமைந்ததுடன் மிக முக்கிய இடத்தையும் வகித்தன. எல்லாவற்றையும் மனப்பாடம் செய்த பின்னர் அதை ஆசிரியரின் முன்னிலையில் ஒப்புவித்தல் வேண்டும். இன்றுள்ளது போன்று அச்சிடப்பட்ட நூல்கள் இல்லாத அக் காலத்தில் எழுத்தாணியினால் எழுதப்பட்ட ஏட்டு நூல்கள் காணப் பட்டன. நூல்களை எழுதுவதிலுள்ள கஷ்டங்கள் காரணமாக ஏட்டில் எழுதப்பட்ட நூல்களும் இலகுவில் கிடைக்கவில்லை. எழு தப்பட்ட நூல்கள் அரிதாகவே கிடைத்தமையினால், மனனம் செய் வது அவசியமாயிற்று.


அன்றைய சமுதாயத்தில் இருந்ததைவிட வேறுபட்ட தன்மை களை இன்றையச் சமுதாயத்தில் காணலாம். மக்களுக்குக் கல்வி வழங்கும் முழுப் பொறுப்பும் அரசாங்கத்தின் கையில் உள்ளது. எனவே, ஆண்டுதோறும் அதிகரித்துவரும் மக்களுக்குக் கல்வி வசதிகள் பலவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளது. கல்வி அமைச்சின் மூலம் இச்சேவைகள் வழங்கப்படுகின்றன. இலங்கை பூராவும் பரந்துள்ள 10,000 பாடசாலைகள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

1983 ஆம் ஆண்டில் பாடசாலைகளின் தொகை 9576 ஆக இருந்தது. இவ்வண்ணம் முறைமைசார் கல்வியை வழங்கும் நிறு வனங்களின் தொகை, பாடசாலைக்குச் செல்லும் வயதை அடைந்த பிள்ளைகள் பாடசாலைகளுக்குப் பிரவேசிக்கும் எண்ணிக்கைக்கிணங்க அதிகரித்துள்ள வீதத்தை மறு பக்கத்திலுள்ள அட்டவணையைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

நமது நாட்டின் சனத்தொகையில் 35 சதவீதமானோர் 14 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பதனாலும், 5 வயது முதல் 14 வயது வரையான பிள்ளைகள் கட்டாயமாகப் பாடசாலைக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளமையினாலும், அரசாங்கம், அனைவருக் கும் பொருந்தும் விதத்தில் கல்வி முறையை ஒழுங்கு செய்யவேண்டி யுள்ளது. இது, அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாக அமைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடசாலைகளிலுள்ள மாணவர் தொகை | | |
|---|---|---|
| வருடம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
| 1953 | 6581 | 1,569,360 |
| 1972 | 8551 | 2,492,754 |
| 1983 | 9576 | 3,458,645 |

மூலம்: பாடசாலைக் கணக்கீடு

துடன் கடினமான காரியமாகவும் அமைகின்றது. பாடசாலை செல்லும் வயதுடைய பிள்ளைகளின் தொகை வருடாந்தம் துரிதமாக அதிகரிக்கின்றது.

பாடசாலை செல்லும் பிள்ளைகளின் தொகை அதிகரிக்கும் அளவிற்குப் பாடசாலைகள், கட்டிடங்கள், உபகரணங்கள், ஆசிரியர்கள், நூல்கள் என்பனவும் கல்வியுடன் தொடர்புடைய ஏனைய சேவைகளும் வழங்கப்பட வேண்டும்.

| கல்வி அளிப்பதற்காக வழங்கப்பட வேண்டிய வசதிகள் | | |
|---|---|---|
| நூல்கள் | பாடசாலைக் கட்டிடங்கள், உபகரணங்கள் | ஆசிரியர்கள் |
| | | உயர் கல்வி நிறுவனங்கள், |
| ஆசிரியர் பயிற்சி | கற்பித்தற் கருவிகள் | கைத்தொழிற் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் |

அவசியப்படும் இத்தகைய வசதிகளை வழங்குவதானல், நமது தேசிய நிதியிலிருந்து பெருந் தொகையான பணத்தைச் செலவிட வேண்டி ஏற்படும். பாடசாலைகளின் மூலம் வழங்கப்படும் கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கும் பெருமளவு பணத்தைச் செலவிட நேரிடும். நவீன உபகரணங்களையும் நவீன கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்த வேண்டி ஏற்படும்.

கற்றவர்களுட் பலர் நகர்ப்புறங்களில் வாழ்வதாலும் தொழில் தேடி வருபவர்கள் நகரங்களில் வாழ்வதாலும் நகர சனத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவாக அதிகரிக்கின்றது. இவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைப் புகட்டும் நோக்கத்துடன் அவர்களைச் சிறந்த பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு முயற்சி செய்வார்கள். ஆகையால், அத்தகைய பாடசாலைகளுக்குச் செல்வதற்கு அனுமதிகோருவோரின் தொகையும் வருடா வருடம் அதிகரிக்கின்றது.

எப்படியிருப்பினும், அன்றைய சமூகத்தை விட இன்றைய சமூகம், கல்வியைப் பொறுத்தளவில் முன்னேற்றமான நிலையை அடைந்துள்ளது. இன்று, நமது சனத்தொகையில் 86.5 சதவீதத்தினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாவர். இன வேற்றுமை, சாதி வித்தியாசம், சமய வேறுபாடு என்ற எதுவுமின்றித் தத்தமது திறமைக்கேற்பக் கல்வியைப் பெறும் வாய்ப்பு இன்று கிட்டியுள்ளது. மேலும், பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை, அரசாங்கம், இலவசக் கல்வி வழங்குவதால், உயர் கல்வி பெறுவோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

நம் நாட்டிலுள்ள கல்வி வசதிகள் போதியதாக அமையாத சந்தர்ப்பங்களில், பயிற்சி பெறுவதற்காக, ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

புலமைப் பரிசில் வழங்கும் முறை நடைமுறையிலிருப்பதால், குறைந்த வருமானம் உள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கு விசேட வசதிகள் அளிக்கப்படுகின்றன. பிள்ளைகளின் வல்லமைகளைக் கணிக்கும் வகையில் புலமைப் பரிசில்கள் வழங்குவதன் மூலம் கல்வியில் அவர்கள் கொள்ளும் ஆர்வத்தை அதிகரிக்கலாம். ஐந்தாந் தரப் புலமைப் பரிசிலும் உயர் கல்விக்காக வழங்கப்படும் 'மஹபொல' புலமைப் பரிசிலும் முக்கியமானவை.

இன்றைய பாடசாலை முறை, தொழினுட்பக் கல்லூரிகள் போன்ற உயர் கல்வி நிலையங்கள் மூலமும் பல்கலைக் கழகங்கள் மூலமும் வழங்கப்படும் கல்வி வாய்ப்புக்களை, அதிகரிக்கும் கேள்விக்கமையும் வண்ணம் வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடுகின்றது என்று கொள்ள முடியாது. இன்று, விஞ்ஞான, தொழினுட்ப விருத்தியுடன், கல்வியின் மூலம் வழங்கப்பட வேண்டிய அறிவும் திறமைகளும் விதவிதமானவை.

நீங்கள் கணனியின் உபயோகம் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நீங்கள் மேல் வகுப்புகளை அடையும்போது, கணனியியலையும் கற்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். இது தொடர்பான வேலைத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு அவசியமான ஆசிரியர்கள் ஏற்கனவே பயிற்றப்பட்டு வருகின்றனர். கற்பித்தலுக்கு உதவும் நிமித்தம் தொலைக்காட்சியை ஓர் ஊடகமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துவதற்குத் தற்பொழுது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும்.

நூல் நிலையங்களினுல் வழங்கப்படும் சேவையின் அவசியத்தையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அவசியமான புதிய அறிவை ஊட்டும் ஓர் ஊடகமாக நூல் நிலையங்களின் பணியை அபிவிருத்தி செய்தல் முக்கியமாகும். இதைக் கிராம மட்டத்திலிருந்து விருத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படுமேயாயின், முறைசார் கல்வியைப் போன்று முறைசாராக் கல்விக்கும் இது ஓர் உந்துதலாக அமைய முடியும்.

இப்படியாக, கால வேறுபாடுகளுக்கு உகந்த வகையில் கல்வி வசதிகளை அமைத்தல், இன்று, அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய கருமங்களுள் ஒன்ருகும்.

**செயன்முறைகள்:**

(1) உங்கள் ஆசிரியரின்/ ஆசிரியையின் உதவியுடன், வருடம் ஒன்றுக்குக் கல்விக்காக அரசாங்கம் எவ்வளவு பணத்தைச் செலவு செய்கின்றதென்பதை அறிந்துகொள்ளுங்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கான கல்விச் செலவை அட்டவணைப்படுத்தி, கல்விக்கான செலவு அதிகரித்துள்ள விதத்தைக் கவனியுங்கள்.

(2) உங்களுடைய குடும்பத்தில், உங்களைப் போன்று பாடசாலைக்குச் செல்வோர் அல்லது உயர் கல்வி கற்போர் எத்தனை பேர் இருக்கிருர்கள்? உங்கள் ஒவ்வொருவருக்கும் உங்கள் பெற்ருேர் வருடம் ஒன்றுக்கு ஏறத்தாழ எவ்வளவு பணத்தைச் செலவு செய்கின்றனர் என்பதைக் கேட்டறிந்துகொள்ளுங்கள். உங்களுக்குத் தேவையான உணவு உண்டி, ஆடை ஆபரணங்கள், புத்தகங்கள், நூல்கள், பாடசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகள் என்பவற்றைத் தாங்கிக்கொண்டு, உங்களுக்குச் சிறந்த கல்வியை வழங்குவதற்காக அவர்கள் எவ்வளவு தூரம் வருந்தி உழைக்கின்ருர்கள் என்பது இப்பொழுது உங்களுக்கு விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. மக்கள் தேவைகள்: தொழில்

தனி நபர் ஒருவர் வாழ்வதேயானால் அவர் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட வேண்டும். பண்டைய சமுதாய அமைப்பின் கீழ், பிறப்பிலேயே தொழில் நிர்ணயிக்கப்பட்டது. மேலும், தொழில் வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கவில்லை. எனினும், இன்று, தொழில் வழங்குவது, அரசாங்கத்தினால் தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சனத்தொகை அதிகரிக்கும் அளவிற்கேற்ப, வழங்க வேண்டிய தொழில் வாய்ப்புக்களின் அளவும் அதிகரிக்கின்றது.

அன்றைய சமுதாயம் சாதி வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆகவே, தனிப்பட்ட ஒருவரின் சாதிக்கமைய அவருடைய தொழில் நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தமது முன்னோர்கள் செய்த தொழிலைப் பழகிக்கொண்டனர். தாய்,தந்தையரின் பின்னர் அத்தொழிலில் பிள்ளைகள் ஈடுபட்டனர். சொந்தப் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டு வேறொரு தொழிலை மேற்கொள்வதற்கோ அன்றி அது தொடர்பான பயிற்சியைப் பெறுவதற்கோ எவருக்கேனும் உரிமை இருக்கவில்லை. நிலமானிய முறை எனப்பட்ட இம்முறை, பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் ஆரம்பம் தொட்டுப் படிப்படியாகச் சிதறத் தொடங்கியது எனவே, இன்றுள்ள சமூக முறை நிலமானிய முறையினின்றும் பெருமளவில் வேறுபட்டதொன்றாகும்.

தான் விரும்பும் ஒரு தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒருவருக்கு இருக்கும் சுதந்திரம் இன்று, அடிப்படை மனித உரிமைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. சாதி, சமய, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு விரும்பிய எவரும் கல்வி கற்கும் உரிமையும் வாய்ப்பும் நம் நாட்டு மக்களுக்கு உண்டு. கல்வி மட்டத்திற்கும் ஆற்றலுக்கும் அமைய ஒரு தொழிலைப் பெற்றுக் கொள்வதற்குள்ள சுதந்திரமும் வாய்ப்பும் இதனால் உறுதிப்படுகின்றது.

கல்வி கற்றிருக்கும் அனைவருக்கும் அவரவர்களின் கல்வித் தரத்திற்கமையத் தொழில் வழங்குவது கடினமாகும். இதனால், பலர், தமது கல்வித் தகைமைக்கும் பெரிதும் குறைந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலைமையை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணலாம். இன்று, வெளி நாடுகளில் தொழில் செய்வதற்குப் பெருந் தொகையானோர் தூண்டப்படுவதற்கும் இதுவே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று, விவசாயம் பிரதான தொழிலாக இருந்ததுடன் ஏற்றுக கொள்ளப்பட்ட தொழிலாகவும் இருந்தது. நீர்ப்பாசனத் திட்ட வியலாளர், வைத்தியர், சோதிடர், போர் வீரர், வர்த்தகர், நெச வாளர், பொற்கொல்லர், தச்சர், குயவர் போன்று வேறு தொழில் களில் ஈடுபட்டிருந்தவர்களும் காணப்பட்டனர். முன்னர் குறிப் பிட்டது போன்று, அன்று, எளிய வாழ்க்கைப் பாங்கு காணப் பட்டது. அவ்வகையில் வளர்ச்சியுற்ற சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இத்தகைய தொழில்கள் அவசியப்பட்டன.

இன்றைய நிலைமை மிகவும் வித்தியாசமானதொன்றாகும். இன் றும் நமது நாட்டில் பெரும்பாலானோருடைய தொழில் விவசாய மாகும். எனினும், இன்றைய வாழ்க்கைப் பாங்கில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதனாலும் மக்களின் தேவைகள் அதிகரிப்பதனாலும் பல்வேறுபட்ட தொழில்கள் இருக்கக் காணலாம். விவசாயம் தவிர, ஏனைய பல்வேறு தேவைகளை நிறைவு செய்ய வேண்டியிருப்ப தனால் ஏற்படும் தொழில் வாயப்புக்கள் பல வகைப்படும்.

* உற்பத்திக் கைத்தொழிற் துறையிலுள்ள தொழில்கள்:

அரசாங்கத்தின் பாரிய கைத்தொழிற்சாலைகளிலும் தனியார் துறைக்குரித்தான சிறிய கைத்தொழில் நிறு வனங்களிலும் குடிசைக் கைத்தொழில்களிலும் (கிராம மட்ட நிறுவனங்கள்), பணியாற்றும் பொறியியலாளர் கள், பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத தொழிலாளர்கள் போன்றோர் இப்பிரிவில் அடங்குவர்.

* சேவைத் துறையிலுள்ள தொழில்கள்:

வர்த்தகம், போக்குவரத்தும் ஏற்றி இறக்கலும், சுகா தாரக் கல்வி போன்ற சேவைகளில் பல்வேறு தரங்களி லும் தொழில் வாய்ப்புகள் தோன்றியுள்ளன. வைத்தியர் கள், தாதிமார், ஆசிரியர்கள் போன்றோர் இப்பிரிவில் அடங்குவர். இது தவிர, நிருவாகச் சேவையின் பல் வேறு பகுதிகளிலுமுள்ள எழுது வினைஞர் சேவை, அலு வலக சேவைகள் தொடர்பான தொழில்களும் இப்பிரி வில் அடங்கும். வியாபாரம், வர்த்தகம் என்பவற்றைச் சார்ந்து தோன்றியுள்ள தொழில்களும் பலவாகும். கட் டிடத் துறையில் கட்டிடக் கலைஞர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

* பாதுகாப்புச் சேவையிலுள்ள தொழில்கள்:

பொலீஸ் சேவையிலும் முபபடைச் சேவையிலும் குறிப் பிடத்தக்க அளவு வேலை வாய்ப்புகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பல்வேறு வகையான சுய தொழில்களில் ஈடுபட்டிருப்போர் இன்று குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றனர்.

* அண்மையில், சுதந்திர வர்த்தக வலயத்தில் வெளி நாட்டு நிறுவனங்களின் முதலீட்டின் கீழ் நிறுவப்பட்ட கைத்தொழில் நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க அளவு வேலை வாய்ப்புகள் தோன்றியுள்ளன.

இவ்விதமாக, இன்று, நவீன சமூகத் தேவைகளுக்கிணங்க, புதிய சமூகப் பொருளாதாரப் பாங்கினுள் வேலை வாய்ப்புகள் தோன்றியுள்ளன. அன்று, நிலமானிய முறையின் கீழ் இத்தகைய தொழில்கள் காணப்படவில்லை. ஆகவே இத்தொழில்களைச் சார்ந்து நிர்ணயிக்கப்பட்ட சாதிகள் இல்லை. எனவே, தற்கால சமூகப் பாங்கிற்கு ஒத்த விதத்தில் பல்வேறு வகையான தொழில்கள் அவசியப்படுகின்றன.


எப்படியிருப்பினும், 1981 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சனத்தொகை மதிப்பீட்டின் பிரகாரம் தொழிற் சேனையில் ஏறத்தாழ 19.9 சதவீதத்தினர் தொழில் அற்றவர்களாக இருக்கின்றனர். தொழில் வங்கியில் பதிவு செய்து கொள்வோரின் தொகை வருடா வருடம் அதிகரித்துச் செல்கின்றது. ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் பேர், ஏற்கனவே வேலையை எதிர் பார்த்திருக்கும் தொகையினருடன் சேர்ந்துகொள்கின்றனர். பட்டதாரிகள், பயிற்றப்பட்ட தொழிலாளர், இடைநிலைக் கல்வியை முடித்துக்கொண்டு பாடசாலைகளிலிருந்து வெளியேறுவோரும் இத்தொகுதியில் அடங்குவர். எனவே, அதிகரித்துவரும் சனத்தொகைக் கமையத் தொழில் வழங்குதல், அரசாங்கத்தின் பெரும் பொறுப்புகளில் ஒன்ருக அமைகின்றது. பத்தாம் படத்தைப் பார்த்து இதை விளங்கிக்கொள்ளுங்கள்.

அரசாங்கத் துறையிலும் தனியார்த் துறையிலும் காணப்படும் சேமிக்கும் ஆற்றல், தொழில் வாய்ப்புக்களை வழங்குவது சம்பந்தமாக முக்கியத்துவம் பெறும் ஒரு விடயமாகும். சேமிப்பினுல் பெறப்படும் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் தொழிற் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றதென்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். சனத்தொகை வளர்ச்சி குறையும்போது தொழில் வாய்ப்பு அதிகரிக்கும். மேன்மேலும் சேமிப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் தேசிய அபிவிருத்திக் கருமங்களுக்கு உந்துதல் அளிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடா வருடம் பிறக்கும் குழந்தைகள்




படம் 10

*மூலம்: அரசாங்கச் செய்தித் திணைக்களத்தின் வெளியீடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயன்முறைகள்:**

(1) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி, சிக்கல் வாய்ந்த மக்கள் சமூகத்தின் தேவைகளுக்கமையக் காணப்படும் தொழில்களை முடிந்தளவில் குறிப்பிடுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| விவசாயத் துறை | உற்பத்திக் கைத்தொழிற் துறை | நிர்வாகச் சேவையும் முகாமைச் சேவையும் | பாதுகாப்புச் சேவை |
| | | | |
| வர்த்தகச் சேவையும் வியாபாரச் சேவையும் | சுகாதாரச் சேவை | கல்விச் சேவை | போக்குவரத்து, ஏற்றி இறக்கல், அஞ்சல், செய்தித் தொடர்புச் சேவைகள் |
| | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. சனத்தொகைப் பாங்கு: போக்குவரத்துத் தொகுதி

சமூகம் விருத்தியடைய, போக்குவரத்து முறைகளும் அபிவிருத்தியடைதல் வேண்டும். இதன் பிரகாரம் இன்றையப் போக்குவரத்து முறை மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. நாம் வாழும் உலகிற்கு வெளியில், வேறு கோள்களை நாடிச் செல்வதில் இன்றைய மனிதன் உற்சாகம் காட்டுகிறான். சுகமாக, விரைவாக, பாதுகாப்பாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதற்கு நவீன முறைகளைக் கண்டு பிடிப்பதிலும் சாதனங்களை உற்பத்தி செய்வதிலும் இன்று மனிதன் கவனம் செலுத்துகின்றான். சில்லைக் கண்டுபிடித்தது முதல், விண்வெளிக் கப்பலை அமைத்து வரை மனிதன் அடைந்துள்ள முன்னேற்றம் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது.


அவ்வக் காலப் பகுதிகளில் வாழும் மக்களின் சமூகத் தேவைகளிலும் பொருளாதாரத் தேவைகளிலுமே போக்குவரத்து முறைகளின் வளர்ச்சி தங்கியிருக்கின்றது. தமது வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தத்தமது கிராமங்களிலேயே உற்பத்தி செய்து கொண்ட அக்காலத்தில், அவ்வக் கிராமங்களிலிருந்து வெளியே செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் மிகச் சொற்ப அளவிலேயே தேவைப்பட்டன. வரி இறுத்தல், நிர்வாகத்தை நடத்திச் செல்லுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக, நிர்வாகிகள், நாட்டின் பல்வேறு கிராமியப் பிரதேசங்களுக்கும் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் அவசியப்பட்டன. யுத்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் போக்குவரத்து வசதிகள் வளர்ச்சியுற்றமைக்கு மற்றுமொரு காரணமாகும். வாசனைத் திரவியங்கள், முத்து, மாணிக்கக் கல் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் இடத்துக்கிடம் செல்வதற்கும் வியாபரப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கும் சிற்சில வசதிகள் அவசியப்பட்டன.

அன்றைய சமூகத்தில், அரசர்களும் மந்திரி பிரதானிகளும் தமது போக்குவரத்திற்காகப் பல்லக்குகளைப் பயன்படுத்தினர். அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த மக்களே இதற்காகப் பயன்படுத்தப் பட்டனர். அக்காலத்தில் நிலவிய சம்பிரதாயத்தின்படி, அது, இராசகாரிய சேவை எனக் கொள்ளப்பட்டது. சனத்தொகை அதிகரித்துப் போக்குவரத்து முறைகள் விருத்தியடைய, இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

பின்னர் வந்த சமூகத்தில் வாழ்ந்தவர்கள், பொருள்களை விலங்குகளின் மீது ஏற்றிச் சென்றனர். இதற்காக எருதுகள் பயன்படுத்தப் பட்டன. இன்றும் மிகப் பின்தங்கிய கிராமங்களில் இம்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றப்படுகிறது. போக்குவரத்துக்காக அன்று, யானைகளும் குதிரைகளும் பயன்படுத்தப்பட்டபோதிலும் இன்று போக்குவரத்திற்காக இவை பயன்படுத்தப்படுவதில்லை.

மேலும், நாம்பன் மாடுகளால் அல்லது குதிரைகளால் இழுக்கப்பட்ட வண்டிகள் மிகவும் விரும்பப்பட்ட போக்குவரத்துச் சாதனமாக அமைந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்திலும் மாட்டு வண்டிகளும் குதிரை வண்டிகளும் உபயோகிக்கப்பட்டன. பொருள்களை ஏற்றிச் செல்வதற்குக் கிராமப் புறங்களில் மாட்டு வண்டிகள் பயன்படுத்தப்படுவதை இன்றுங் காணலாம். மாட்டு வண்டிகளில் போக்குவரத்துச் செய்தல், இன்று பெருமளவிற்குக் குறைந்துவிட்டது.

சொந்தக் கிராமத்திலிருந்தே தத்தமது தேவைகளைப் பெற்றுக்கொண்டு எளிய வாழ்க்கை நடத்திய அக்கால மக்களைப் போலன்றி, தற்காலச் சமூகத்தில் வாழும் மக்கள், பல்வேறு காரணங்கள் கருதி, இடைவிடாது, அங்குமிங்கும் பயணஞ் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இத்தகைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இன்று, துவிச்சக்கரவண்டி, மோட்டார் கார், பஸ், புகையிரதம் போன்ற வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. போக்குவரத்துக்கு உதவும் பொருட்டுப் பெருந் தெருக்களும் புகையிரத வீதிகளும் அமைக்கப்பட்டு பஸ் சேவை, புகையிரதச் சேவை என்பன மூலம் நாட்டின் பல்வேறு பிரதேசங்களும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இன்று உள்ளதுபோல், எல்லா நகரங்களையும் கிராமங்களையும் தொடர்புபடுத்தும் தெருக்கள் அன்று இருக்கவில்லை. எனினும், நாட்டின் மிக முக்கியமான தலை நகரங்களைத் தொடர்புபடுத்தும் தெருக்கள் காணப்பட்டன. உதாரணமாக, தெற்கில் மாகமத்திலிருந்து, அநுராதபுரத்தினூடாக வடக்கே தம்பகொள பட்டணம் வரை பிரதான வீதி ஒன்று காணப்பட்டது. மேலும், தீகவாபி, மஹியங்கனை, கதிர்காமம், புத்தளை, கசாகொடை, பொலன்னறுவை போன்ற பிரதான, சனச்செறிவு மிக்க பிரதேசங்கள் பௌத்த புண்ணியத் தலங்களுடன் தெருக்களால் இணைக்கப்பட்டிருந்தன. உருவெல, மகாதித்த (மாந்தோட்டம்) போன்ற பிரதேசங்களையும் தொடர்புபடுத்தும் பெருந் தெருக்கள் காணப்பட்டன.


அக்காலத்தில், கடலோரப் பிரதேசங்களில் காணப்பட்ட தங்கு துறைகளுடன் பிரதான புண்ணியத் தலங்களைத் தொடர்புபடுத்தும் பெருந் தெருத் தொகுதி ஒன்றும் காணப்பட்டது.

தெருக்களை அமைப்பதற்காக, விசேடமாக ஆற்று வடிநிலங்களும் குளக் கட்டுகளும் பயன்படுத்தப்பட்டன. தெருக்களை அமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பிரதான பெருந் தெருக்கள் - அன்று




தேசப் படம் 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில், இது, இலகுவானதும் பொருத்தமான முறையுமாகும் என இன்றும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஆறுகள், கால்வாய்கள் என்பன போக்குவரத்திற்கும் பொருள் களை ஏற்றி இறக்குவதற்கும் முன்னர் பயன்படுத்தப்பட்டபோதி லும், இன்று இவற்றின் பாவனை குறைந்துள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் போக்குவரத்திற்கும் பொருள்களை ஏற்றி இறக்குவதற் குமாகக் கரையோரப் பிரதேசங்களில் கால்வாய்கள் வெட்டப் பட்டன. வள்ளங்கள், ஓடங்கள் போன்றவற்றைப் பயன் படுத்தி இவற்றினூடாக மக்கள் பிரயாணஞ் செய்ததுடன் பொருள்களும் ஏற்றிச் செல்லப்பட்டன. பிரதான நதிகளை அண்டிய துறைகளில் இக்கரையிலிருந்து அக்கரைக்குப் படகு களின் மூலம் மக்கள் செல்வதை இன்றுங் காணலாம். உதாரணம்: களனி விஹாரைக்கருகிலுள்ள கடுவெல.

போக்குவரத்து வசதி காரணமாகத் தரிப்பு நிலையங்கள், சந்தி கள், பாலத் துறைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே மக்கட் குடியிருப்புகள் ஆரம்பத்தில் தோன்றின.

இன்று நமது நாட்டில் காணப்படும் வகையிலமைந்த போக்கு வரத்து வசதிகள், 1815 ஆம் ஆண்டின் பின்னர், பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே தோன்றலாயின. பிரதானமாக இரண்டு காரணங்கள் கருதி ஆங்கில ஆட்சியாளர்களுக்குத் தெருக்கள் அவசியப்பட்டன.

* நாடு முழுவதிலும் தமது ஆணையை நிலைநாட்டுவதற்கும் அதன் மூலம் நாடு முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்குமாக ஆங்கில ஆட்சியாளர்களுக்குப் பெருந் தெருக்கள் தேவைப்பட்டன.
* மத்திய மலைப் பிரதேசங்களில் கோப்பி, தேயிலை, இறப்பர் பயிர்ச் செய்கை அரம்பிக்கப்பட்டபோது, அவ்வுற்பத்திப் பொருள்களைத் தலைநகருக்குக் கொண்டு வருவதற்கு வீதி வசதிகள் அவசியப்பட்டன.

சிக்கனமாகவும், இலகுவாகவும், விரைவாகவும் தமது உற்பத்தி களை ஏற்றிச் செல்வதற்காக பிரித்தானியர் காலத்தில் தெருக்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. 1860 ஆம் ஆண்டைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இங்கிலாந்தில் புகையிரதப் போக்கு வரத்து முறை பரவியதுடன் இலங்கையிலும் புகையிரதப் பாதை கள் அமைப்பது ஆரம்பிக்கப்பட்டது. புகயைிரதம், மக்கள் போக்கு வரத்துக்கும் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கும் பயன்படுத்தப் பட்டது. இவ்வண்ணம், பாதுகாப்புத் தேவைகள் கருதியும் நிர் வாகத் தேவைகள் கருதியும் பொருளாதாரத் தேவைகள் கருதியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டில் பெருந் தெருக்கள் பரவலாக அமைக்கப்பட்டமையை நீங்கள் இப்பொழுது உணரலாம். ஆரம்பத்தில் நமது நாட்டில் நிலவிய தன்னிறைவுப் பொருளாதாரப் பாங்கில் அமைந்தது போலன்றிப் பிற்காலத்தில் தோன்றிய பரஸ்பரம் ஒன்றில் மற்றையது தங்கியிருக்கும் நிலைக்குப் பொருந்தும் வகையில் போக்குவரத்து முறை அமைக்கப்பட்ட விதம் இப்பொழுது உங்களுக்குத் தெளிவாகியிருக்கும்.


இன்று நடைமுறையிலுள்ள போக்குவரத்து முறையைப் பார்க்கும் பொழுது, இலங்கையில் சகல பெரிய, சிறிய நகரங்களை மட்டுமன்றி கிராமப் பிரதேசங்களையும் தொடர்புபடுத்தும் வகையில் பெருந் தெருக்கள் அமைக்கப்பட்டுள்ளமையை நாம் காண முடிகின்றது. (இரண்டாம் தேசப்படத்தைப் பாருங்கள்). மக்களையும் பொருள்களையும் ஏற்றி இறக்கும் வாகனங்கள் அனைத்துப் பிரதேசங்களிலும் பரந்து காணப்படுகின்றன. பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு லொறி போன்ற பெரிய வாகனங்களும் மக்களின் போக்குவரத்திற்கு சொகுசான பஸ்களும் இன்று பெருமளவில் பயன்படுவதை நாம் காண முடிகின்றது. இந்த இரண்டு தேவைகளுக்காகவும், இலங்கையில் எல்லாத் திக்குகளையும் உள்ளடக்கிய புகையிரதச் சேவையும் உண்டு. புகையிரதச் சேவையினூடாகப் பிரதான நகரங்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. புகையிரதத்தின் மூலம் பொருள்களை ஏற்றி இறக்குதல் இலகுவான முறையாகும். ஒரு புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்படும் பொருள்களைத் தாம் விரும்பிய எந்தவொரு புகையிரத நிலையத்திற்கேனும் அனுப்பக்கூடிய வசதி உண்டு. இதைப் புகையிரதச் சேவையிலுள்ள மிக முக்கியமான சிறப்பெனக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல. ஆகாய விமானப் போக்குவரத்தின் மூலம், இன்று, நாம் உலகின் ஏனைய நாடுகளுடன் தொடர்பு கொள்கின்றோம். உள்நாட்டு ஆகாய விமானச் சேவையின் மூலம், உள்ளூர்ப் போக்குவரத்தை, அவசிய மேற்படும் சந்தர்ப்பங்களில் மேலும் விரைவாகப் பூர்த்தி செய்து கொள்ளும் வசதி உண்டு. (இரண்டாம் தேசப்படத்தைப் பாருங்கள்).

சனத்தொகை அதிகரிப்புடன் ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்வதே போக்குவரத்தும் ஏற்றி இறக்கும் பாங்கும் இவ்வண்ணம் விருத்தியடைவதற்குக் காரணமாக அமைந்தது. பொதுப் போக்குவரத்து, அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டியுள்ளது. இன்று காலி வீதி ஊடாகக் கொழும்பு நகரை நோக்கி வரும் வாகனங்கள், கொழும்பிலிருந்து வெளியேறும் வாகனங்கள் என்பவற்றின் தொகையும் அவற்றினால் ஏற்படும் நெரிசலும் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பிரதான பெருந் தெருக்கள் — இன்று




தேசப் படம் 2

மூலம்: குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரத் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துவரும் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், போக்குவரத்திற்காகச் செலவு செய்யக்கூடிய பணம் வரையறைக்குட்பட்டது என்பதை நாம் உணர வேண்டும்.

அதிகரித்துவரும் சனத்தொகை காரணமாகப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட வேண்டிய பிள்ளைகள் நாள்தோறும் அதிகரிக்கின்றனர். வேலைத் தளங்களை வேளைக்குச் சென்றடையும் நோக்கத்துடன் செல்லும் ஆட்கள் நாள்தோறும் அதிகரிக்கின்றனர்.

போக்குவரத்து வசதிகள் இருக்குமிடத்து, வேலை நிலையங்களை இலகுவில் அடைந்துவிடலாம். அதன் பின்னர், உற்சாகத்துடன் தத்தமது பணிகளில் ஈடுபடவும் முடியும். இது, நாட்டின் அபிவிருத்திக்கு ஓர் உந்துதலாகவும் அமையும்.

போக்குவரத்து வசதிகளை வழங்குதல் அரசாங்கத்தின் பாரிய பொறுப்பாகும். 1973 ஆம் ஆண்டில், வேலை நாள் ஒன்றில் சுமார் 4.8 மில்லியன் பஸ் பயணச் சீட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன. இத்தொகை ஆண்டு தோறும் அதிகரித்துச் செல்கிறது.

சனத்தொகை அதிகரிக்கும்போது, இன்றுள்ளதை விட அதிக அளவில் போக்குவரத்து வசதிகளை வழங்க வேண்டி ஏற்படும். இவ்வாறு, அதிக அளவில் வாகனங்கள் பயன்படுத்தப்படும்போது, வெளியேறும் புகை, தூசு என்பனவற்றால் சுற்றாடல் மாசடைவதைத் தடுக்க இயலாது. இந்நிலை, சமூகத்திற்கு நன்மை பயப்பதொன்றல்ல. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிமித்தம் அதிக அளவில் வாகனங்கள் பயன்படுத்தப்படும்போது, நகரச் சுற்றாடல் விரைவாக மாசடைவுக்குள்ளாகின்றது. கைத்தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் வஸ்துக்களும் இம்மாசுப் பொருள்களுடன் சேர்ந்துகொள்கின்றன. அண்மையில், கொழும்பு நகரின் சுற்றாடல் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி வளியில் அடங்கியுள்ள ஈயத்தின் அளவு அதிகமாகியுள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதே போன்று தூசின் அளவும் புகையின் அளவும் அதிகமாகியுள்ளது. மக்களின் சுகாதாரத்திற்குப் பாதகமான நிலைமை இதன் மூலம் ஏற்படும். வளி மாசடைதல் போன்று, வாகனங்களின் தொகை அதிகமாயிருத்தல் காரணமாக ஓசை மாசடைவும் நிகழ்கின்றது. நகராக்கத்தின் விளைவாகச் சூழற் சுற்றாடல் மாசடைதலைத் தடுத்தல் ஒரு பிரச்சினையாகியுள்ளது. இது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. இது பற்றி மக்களும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இன்றைய உலகம், விஞ்ஞான அபிவிருத்தியிலும் தொழினுட்ப விருத்தியிலும் பெரும் முன்னேற்றம் கண்டிருப்பதால், பல்வேறு வாகனப் போக்குவரத்து முறைகள் காணப்படுகின்றன. உலகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு பகுதியிலிருந்தும் விரும்பிய மற்றொரு பகுதிக்கு மிகக் குறுகிய நேரத்தில் செல்லக்கூடிய வசதியும் உண்டு. அன்று, உயிரைப் பணயம் வைத்துக் கடல் மார்க்கங்களினூடாக மக்கள் பயணம் செய்தபோதிலும், இன்று ஆகாய மார்க்கமாக மிக விரைவாகக் குறுகிய நேரத்தில் பயணத்தை மேற்கொள்ள முடியும். இது, இன்றையப் போக்குவரத்து முறையில் அதி முக்கியமான இலட்சணங்களில் ஒன்றாகும்.

நாட்டினுள் போக்குவரத்து வசதிகள் வளர்ச்சியடைதல், சனத்தொகை அதிகரிப்பிலும், மக்களின் தேவைகள் விரிவடைவதிலும் தங்கியிருக்கும். இக்காரணங்களினால், நாட்டினுள் போக்குவரத்து மட்டுமன்றி, நாடுகளுக்கிடையேயான போக்குவரத்தும் அதிக வளர்ச்சி கண்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு அவசியமான பொருள்களைக் கொண்டு வருவதற்கும் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பிற நாடுகளுக்கு அனுப்புவதற்கும் கப்பற் சேவைகள் அவசியமாகும். கப்பல்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கும் பொருள்களை விரைவாகவும் பாதுகாப்பாகவும் ஏற்றி இறக்குவதற்கும் உகந்த அதிக அதிகமான வசதிகளைக் கொண்ட துறைமுகங்களை அமைப்பதும் அவசியமாகும்.

முற்காலத்தில் மக்கள் தாம் வாழ்ந்த கிராமத்தினுள்ளும் பிரதேசத்தினுள்ளும் மட்டுமே போக்குவரத்துச் செய்தனர். ஆனால், தற்பொழுது, பல்வேறு காரணங்கள் கருதி நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று வருவது மட்டுமன்றி வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய அவசியமும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. தொழிலுக்காகவும் கல்விக்காகவும் வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் மேலும் பலவகையான தேவைகளுக்காகவும், இன்று, ஆயிரக் கணக்கான மக்கள் வெளி நாடுகளுக்குச் செல்கின்றனர். அதே சமயம், நமது நாட்டின் அழகைக் கண்டு களிப்பதற்கு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஆயிரக் கணக்கில் இங்கு வருகின்றார்கள். இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், படகுகளிலும் கப்பல்களிலும் பயணம் செய்த மக்கள், இன்று, ஆகாய விமானங்களிற் பயணஞ் செய்கிறார்கள். ஆகவே, விமான நிலையங்களை அமைப்பதும் அவற்றைப் பேணுவதும் அவசியமாகியுள்ளது.

உள்ளூர்ப் போக்குவரத்திற்காகவும் ஆகாய விமானங்கள் பயன்படுத்தப்படுவதால், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விமான நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. விமான நிலையங்கள் இன்றியே, ஆகாய மார்க்கமாகப் பயணஞ் செய்யும் பொருட்டுத் தற்பொழுது ஹெலிகொப்டர்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

ஒரு நாட்டின் அல்லது ஒரு கிராமத்தின் மக்கள் முன்னேற வேண்டுமேயெனின் மிகச் சிறந்த போக்குவரத்து முறை ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துதல் அவசியம். இது சங்கிலித் தொடர் போல ஒன்றுடனொன்று தொடர்புபட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், அன்று நிலவிய போக்குவரத்து முறையை விடப் பெரிதும் முன்னேறிய போக்குவரத்துத் தொகுதி ஒன்று இன்று இருப்பதை நாம் காணலாம்.

செயன்முறைகள்:

(1) கீழே தரப்பட்டுள்ள விதத்திற்கமையப் பண்டையப் போக்குவரத்து முறைகள் சிலவற்றையும் நவீன போக்குவரத்து முறைகள் சிலவற்றையும் அட்டவணைப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பல்லக்கு | மிருகங்கள் | மாட்டு வண்டி | படகுப் பாதை |
| துவிச்சக்கர வண்டி | மோட்டார் வண்டி | புகையிரத வண்டி | ஆகாய விமானம், ஹெலி கொப்டர் |

(2) இலங்கையின் போக்குவரத்து முறைகளை எடுத்துக்காட்டும் பல முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைத் தேடிப் பெற முயலுங்கள்.

(3) மேலே முதலாவது செயன்முறையில் குறிப்பிடப்படாத வேறு போக்குவரத்து முறைகளையும் விசாரித்து அறிந்து கொள்ளுங்கள். அவற்றின் படங்களைச் சேகரியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. செய்திப் பரிமாற்ற முறைகள்

பண்டைய காலத்தில், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செய்திகளைத் தூதுவர்களின் மூலம் அனுப்பினர். எனினும், செய்திகளைத் தூதுவர்கள் மூலம் அனுப்புதல் அனைவரும் செய்யக்கூடிய காரியமாக அமையவில்லை. அரசர்கள், பிரதானிகள் போன்றோர் தூதுவர்களின் மூலமாகச் செய்திகளைப் பரிமாறிக்கொண்டனர். பிற்காலத்தில், பொது மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்கள், பறை அறைவோரின் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. பறவைகளின் மூலமாகச் செய்தி அனுப்பப்பட்டமையை வரலாற்றிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் அறிந்துகொள்கிறோம்.

இன்றைய சமூகத்தில், செய்திப் பரிமாற்றத்திற்கான அவசியம் பெரிதும் அதிகரித்துள்ளது. எனவே, விரைவாகவும், குறைந்த செலவிலும், இலகுவாகவும் செய்திகளைப் பரிமாறிக்கொள்வதற்காகப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் அஞ்சல் முறை பெரிதும் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும். சிறியதொரு தொகையைச் செலுத்தி ஒருவர் தாம் விரும்பிய மற்றொருவருக்குக் கடிதம் எழுதித் தொடர்பு கொள்ளும் வசதி உண்டு. இன்று நடைமுறையிலிருக்கும் அஞ்சற் சேவை, பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதொன்றாகும். நமது நாட்டிலுள்ள பல்வேறு பிரதேசங்களுக்குமிடையேயான அஞ்சற் சேவை ஆரம்பிக்கப்பட்டு நூறு வருடங்களுக்கு மேலாகின்றது. இச்சேவை படிப்படியாக வளர்நது, இன்று, நாடு முழுவதிலும் காணப்படும் அஞ்சல் அலுவலகங்கள் மூலமும் உப அஞ்சல் அலுவலகங்கள் மூலமும் வழங்கப்படுகின்றது.

அவசரச் செய்திகளை அனுப்புவதற்கு,இன்று தந்திச் சேவை பயன்படுத்தப்படுகின்றது. தொலைபேசியின் மூலம் நாட்டின் பல்வேறு மாகாணங்களையும் கணப்பொழுதில் ஒன்றுடனொன்று தொடர்புபடுத்த முடிந்துள்ளது.

தந்தி மூலம் செய்திப் பரிமாற்றம் செய்யும் முறைகளும் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இதன் மூலம் நாட்டின் ஓரிடத்திலிருந்து மற்றுமோர் இடத்திற்குச் செய்திகளை அனுப்புதல் மிக இலகுவாகவும் குறைந்த செலவிலும் மேற்கொள்ளப்படுகின்றது. சனத்தொகை அதிகரிப்பதனாலும் மக்களின் தேவைகள் விரிவடைவதனாலும் செய்திப் பரிமாற்ற முறைகளின் அபிவிருத்தி அத்தியாவசியச் சேவையாகக் கொள்ளப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திப் பரிமாற்றத்தைப் போன்று, செய்திகள், தகவல்கள் என்பவற்றின் பிரசுரிப்பும் இன்று, சமூகத்தின் முக்கிய தேவையாக அமைந்துள்ளது. பண்டைய காலத்தில் அரசனின் கட்டளைகளை யும் பிரதானிகளின் கட்டளைகளையும் பறைசாற்றி அறிவித்தல் போதுமானதாக அமைந்தபோதிலும், இன்றும், செய்தித் தாள் கள், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் மூலம் நாள் தோறும், இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புரா தன காலத்தில், மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியிருந்த விட யங்கள் வரம்புக்குட்பட்டவையாக இருந்த காரணத்தினால், அவ்வப் போது முரசறைவோரின் மூலம் மக்கள் அறிந்துகொண்ட விட யங்கள் போதியதாக அமைந்தன. இன்று, தான் வாழும் பிர தேசத்தில் நிகழும் விடயங்களை மட்டுமன்றித் தான் வாழும் உலகின் நிகழ்ச்சிகளையும் அறிந்து கொள்ளுதல் மனிதனுக்கு அவ சியமாகியுள்ளது. தனது வர்த்தக நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றித் தனது அறிவை விருத்தி செய்துகொள்வதற்கும் வெகுசனத் தொடர்பு ஊடகத்தைப் பயன்படுத்த மனிதன் பழகியுள்ளான். சனத்தொகை அதிகரிப்பும் மனித வாழ்வு நின்றுநிலைப்பதும் கிரா மத்துடனும் நாட்டுடனும் மட்டும் பிணைக்கப்பட்டிருக்கவில்லை; உலகம் முழுவதிலும் வாழும் மக்களின் வாழ்வுடன் பிணைக்கப்பட் டிருப்பதனால் விருத்தி எய்திய வெகுசனத் தொடர்பு முறைகள் இன்றைய உலகின் நிலைப்பிற்கும் அபிவிருத்திக்கும் பெரிதும் அவ சியப்படுகின்றன.

செயற்கைக் கோள்களின் மூலம் செய்திப் பரிமாற்றம் செய்தல் பற்றி, இன்று, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கவனஞ் செலுத்தி வருகின்றன. ஆகவே, செயற்கைக் கோள்கள், தந்திச் சேவை போன்றனவும் வெறும் செய்திப் பரிமாற்ற முறைகளும் மிகப் பயனுள்ளவையாகும். இன்றையச் சமூகத்தின் சிக்கார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, இத்தகைய நவீன விஞ்ஞான, தொழினுட்பக் கண்டுபிடிப்புகள் பெரிதும் உதவியாக அமைகின் றன. அதிகரித்துவரும் சனத்தொகையின் அதிகரித்த தேவைகளுக் குப் பொருந்தும் வகையில் புதிய வெகுசனத் தொடர்பு மார்க்கங் களை, செயற்கைக் கோள் ஆராய்ச்சிகளில் இன்று ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் எதிர்காலத்தில் கண்டுபிடிப்பதற்கு இடமுண்டு.

**செயன்முறைகள்:**

(1) இலங்கையிலிருந்து கொண்டு, தொலைபேசியின் மூலம் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய நாடுகள் எவை என்பதை விசாரித்து அறிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இன்று நடைமுறையிலிருக்கும் வானொலிச் செய்திச் சேவையை நடத்த முடியாததொரு நிலைமை உருவாகியுள்ளதென்று எண்ணிக்கொள்ளுங்கள். அது, இன்று, நமது மக்களின் வாழ்க்கையில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சிந்தித்துப் பாருங்கள்; விசாரித்து அறிந்துகொள்ளுங்கள்.

(3) அன்று முதல் இன்று வரையில் உள்ள செய்திப் பரிமாற்ற முறைகளைக் காட்டும் அட்டவணை ஒன்றை வரையுங்கள். நவீன செய்திப் பரிமாற்ற முறைகள் பற்றிய படங்களைச் சேகரியுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. விவசாயமும் நீர் வழங்கலும்


பண்டைய காலம் தொட்டு இலங்கை ஒரு விவசாய நாடாகவே இருந்துவருகின்றது. இலங்கையை ஆண்ட மன்னர்கள் அனைவரும் விவசாயத்தை மேலோம்பச் செய்வதற்குப் பெரும் முயற்சி செய்தனர். தேவநம்பியதீஸன், வஸபன், மகாசேனன், பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் இத்துறையில் பிரதான இடம் வகிக்கின்றனர். இவர்கள் பெருங் குளங்களைக் கட்டுவதன் மூலமும் நதிகளுக்குக் குறுக்கே அணைகளைக் கட்டுவதன் மூலமும் நீர்ப்பாசன முறைகளைத் திட்டமிட்டு நிர்மாணித்தனர். இன்று நிபுணத்துவம் பெற்ற உலகப் பொறியியலாளர்கள் கண்டு வியக்கும் அபிவிருத்தியை இத்துறையில், அன்று, இலங்கை பெற்றிருந்தமை தெரிய வந்துள்ளது. இதே போன்று, கைத்தொழில் அபிவிருத்தியில் காட்டப்பட்டுள்ள உற்சாகமும் நன்கு தெளிவாகின்றது. தன்னிறைவை அடையும் குறிக்கோளைக் கொண்டு, பின்வாங்காத உற்சாகத்துடன் முன்னேற்றப் பாதையில் செல்லுதலை நாம் இடைநிறுத்தாது மேற்கொள்ள வேண்டும். விரைவாக அதிகரித்து வரும் சனத்தொகைக்குப் போதுமான அளவு உணவை நாட்டிலேயே உற்பத்தி செய்தல் மிக முக்கியமாகும். இது, அன்று நிலவிய விவசாய நடவடிக்கைகளில் முக்கிய அம்சமாக அமைந்தது. உற்பத்திக்காகவே வழங்கல் முறை பெரிதும் பயன்படுத்தப்பட்டது.

குடியேற்ற ஆட்சிக் காலத்தில், வியாபாரப் பயிர்களின் மூலம் அதிக இலாபம் கிடைத்தமையினால் உணவுற்பத்தி இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டமை உங்களுக்குத் தெரிந்த விடயமேயாகும். நெற்பயிர்ச் செய்கை ஓரளவு முன்னேற்றமடைந்து காணப்பட்டபோதிலும், அண்மைக் காலத்திலேயே அது பற்றிக் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அதிகரித்துவரும் சனத்தொகைக்கேற்ப உணவு உற்பத்தியும் அதிகரிக்கப்பட வேண்டும். அன்றேல், பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைத் தருவிக்க வேண்டி ஏற்படும்.

நம் நாட்டு மக்களுக்குத் தேவையான அளவு உணவை இங்கு உற்பத்தி செய்ய முடியாதிருப்பதனால் உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து பெருமளவில் இறக்குமதி செய்கின்றோம் எனினும், பயிர் செய்யக்கூடிய நிலங்களுக்கு நீர்ப்பாசன முறைகளினால் நீர் வழங்குவதன் மூலம் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மக்களில் பெருந் தொகையினர் ஈர வலயத்தில் வாழ்கின்றனர். இப்பிரதேசங்களில், பயிர் செய்வதற்குகந்த பெரிய நிலப்பரப்பு மக்கள் குடியிருப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் சனத்தொகை செறிந்து காணப்படுகின்கின்றது.

அன்று, மகா பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதென்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. பெருந் தொகையான மக்களும் வாழ்ந்தனர். உலர் வலயம் ஏறத்தாழ முற்றாக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தமையினால் அத்தகையதொரு நிலைமையை ஏற்படுத்துவதற்கு அம் மன்னனால் முடிந்தது. இன்று, அக்குளங்களும் அணைக்கட்டுகளும் சிதைவுற்று வயல் நிலங்கள் கைவிடப்பட்டு அப்பிரதேசம் பெரும் காடு மண்டிக் காணப்படுகின்றது. ஆகவே, சனச் செறிவு மிக்க ஈர வலயத்தில் வாழும் மக்களை உலர் வலயத்திற் குடியேற்றி நீர்ப்பாசன முறையைப் புனருத்தாரணஞ் செய்து விவசாயம் செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் வேண்டும். இதன் மூலம் விவசாயத் துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கலாம்.

ஒழுங்கான ஒரு திட்டத்திற்கமைய உருவாக்கப்பட்ட நீர்ப்பாசன முறையிலேயே, அன்று, விவசாயத்தின் அபிவிருத்தி தங்கியிருந்தது. இன்று உள்ளது போன்று அன்றும் பாரிய குளங்கள் கட்டப்பட்டன. அத்தகைய குளங்களுட் சில, இன்றும் எவ்விதச் சேதத்திற்கும் உள்ளாகாது காணப்படுகின்றன. சில சிறிய குளங்கள் காலகதியில் அழிவுற்றுவிட்டன. அந்நிய ஆக்கிரமிப்புக்கள் காரணமாகவும் போர்கள் காரணமாகவும் மக்கள் உலர் வலயத்திலிருந்து வேறு பிரதேசங்களுக்குப் பெயர்ந்தமையினால் அப்பிரதேசங்களில் புதர்கள் மண்டி விவசாய நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. நாம் ஓர் உதாரணத்தை எடுத்துப் பார்ப்போம். ஆங்கிலேயர் நமது நாட்டைக் கைப்பற்றிய காலத்தில், மலை நாட்டின் வெல்லஸ்ஸ பிரதேசம் சனத்தொகை செறிந்த ஒரு பிரதேசமாகக் காணப்பட்டது. வெல்லஸ்ஸ என்ற பெயர் ''இலட்சம் வயல் வெளிகள்'' என்பதன் திரிபாகும். ஊவா கலகத்தை அடக்குவதற்கு ஏகாதிபத்தியவாதிகள் பின்பற்றிய குரூரமான முறைகள் பற்றி நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் காணப்பட்ட இளைஞர்களும் சிறுவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். கால் நடைகள் முற்றாக அழிக்கப்பட்டன. குளங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், தோட்டந் துறவுகள் யாவும் நாசமாக்கப்பட்டன. இதன் விளைவாக இன்றும் கூட மொனராகலைப் பிரதேசமும் ஊவாவின் தென் பிரதேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகை குறைந்த பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. மேலும், கிழக்குப் பிரதேசம், மத்திய மலைப் பிரதேசத்திலிருந்து வேறுபட்ட ஒரு பிரதேசமாகியது.

ஐரோப்பிய சாதியினர் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்தியதும், அவர்களின் ஆதிக்கம் நிலவிய காலத்தில் விவசாய நடவடிக்கைகள் சீர்குலைந்ததும் காரணமாக இன்று நாம் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

அன்று குளங்களையும் அணைக்கட்டுகளையும் அமைத்து நீரைப் பகிர்ந்தளிப்பதற்காக நீர்ப்பாசன முறைகளைத் திட்டமிட்டு முறையாகவும் நுணுக்கமாகவும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கலா வாவி, மின்னேரியா குளம், பராக்கிரம சமுக்கிரம், கந்தளாய்க் குளம் போன்ற குளங்கள், சமுத்திரங்களைப் போல் காட்சி அளிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இத்தகைய குளங்கள், எத்தகைய இயந்திரோபகரணங்களையேனும் பயன்படுத்தாது கட்டப்பட்டுள்ளன. அவற்றின் நீரைக் கட்டுப்படுத்துவதற்கு மடை கட்டுப்படுத்தும் பலகை அமைக்கப்பட்டிருந்தது. மாதுறு ஓயா சிதைவுகளின் மூலம் இவற்றை இன்றும் காண முடிகின்றது. இதனல் குளத்திலுள்ள நீரின் பாதுகாப்பும் குளக்கட்டின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பெருமளவு நீரைப் பேணி வைப்பது சாத்தியமாயிற்று. இவை, இன்றைய விஞ்ஞானிகளின் ஆச்சரியத்தைத் தூண்டியுள்ளன. இவ்வண்ணம் சேகரிக்கப்பட்ட நீரின் உதவியுடன் உலர் வலயத்தில் பெரும் போக, சிறு போக வேளாண்மை செய்வது சாத்தியமாயிற்று.

அன்று, கிராமமொன்றில் வாழ்ந்த மக்கள், மற்றைய கிராமத்துடன் அவ்வளவு கிட்டிய தொடர்பு கொண்டிருக்கவில்லை. இவர்கள் தத்தமது கிராமத்தினுள்ளேயே வாழ்ந்து வந்தனர். எனவே, நாடு முழுவதையும் உள்ளடக்கும் எண்ணக்கரு இவர்களிடம் காணப்படவில்லை. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்று விளங்கியமையினல் நாடு முழுவதும் தன்னிறைவு பெற்றிருந்த தென்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். அன்று, உணவைப் பெற்றுக்கொள்வதே பிரதான பிரச்சினையாக அமைந்ததேயன்றி, இன்றுபோல், விதவிதமான நவீன பொருள்கள் அவசியப்படவில்லை: நவீன பொருள்கள் காணப்படவுமில்லை. உலக மக்களிடையே நாம் கொண்டிருந்த தொடர்பு மிக அற்பமானதாகவே இருந்தது. ஆகவே, அன்றைய இலங்கையர், இன்றுள்ளதைப் போன்று சிக்கார்ந்த பிரச்சினைகளை எதிர் நோக்கவில்லை. இதன் விளைவாக, அவர்கள் தன்னிறைவுப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகை நோக்கும்பொழுது, மனித குலம் ஒன்ருகப் பிணைந்து பரஸ்பர ஒத்துழைப்பின் மூலம் இயங்க வேண்டிய கால கட்டத்தை அடைந்துள்ளமையை நாம் அவதானிக்கலாம். இன்று எந்தவொரு நாடும் உலகில் தனித்து வாழ இயலாது. இவ்வுண்மை உலகம் முழுவதற்கும் பொருந்துவது போல இலங்கைக்கும் பொருந்தும்.

இன்று, இலங்கைக்கான பொருளாதார அபிவிருத்தித் திட்டம் ஒன்றை முன்வைக்கும்பொழுது ஒரு கிராமத்தையோ அல்லது தொகுதியையோ பற்றி மட்டும் சிந்திக்க முடியாது. நாடு முழுவதிலுமுள்ள மக்கள் அனைவரையும் கவனத்திற்கொண்டு திட்டங்களை வகுக்க வேண்டும். இன்றுள்ள சனத்தொகை எதிர்காலத்தில் அதிகரித்துச் செல்லும் விதத்தையும் அளவையும் கவனத்திற் கொள்ள வேண்டும். அபிவிருத்தித் திட்டங்கள் வரையப்படும் பொழுது, அவை மக்களின் எதிர்பார்ப்புகளுக்குப் பொருந்தும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

இவை பற்றிய பூர்வாங்க ஆய்வு ஒன்றை நடத்திய பின்னர், அபிவிருத்தித் திட்டங்கள் தீட்டப்படும். அன்று போலன்றி, இன்று, பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் முதலிடம் வகிக்கின்றன. உடவளவைத் திட்டம், மகாவலி கங்கைத் திட்டம் என்பன பல் நோக்குத் திட்டங்களுக்கு உதாரணங்களாகும். ஈர வலயத்தில் ஊற்றெடுக்கும் இந்நதிகள் வருடம் முழுவதும் நீர் வற்ருது காணப்படுகின்றன. இந்நதிகளுக்குக் குறுக்கே பெரிய அணைக் கட்டுகள் கட்டப்பட்டு, நீர்த் தேக்கங்கள் உருவாக்கப்படுவதன் மூலம் உலர் வலயங்களுக்கு நீர் வழங்கப்படுகிறது. துரித மகாவலித் திட்டம் இத்தகைய ஐந்து பெரிய நீர்த் தேக்கங்களின் உதவியுடன் செயற்படுத்தப்படுகின்றது. நீர்ப்பாசனத்துடன், நீர் மின்சார உற்பத்தி, நன்னீர் மீன் வளர்ப்பு, பல்வேறு உணவுப் பயிர்ச் செய்கை, விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சிறு கைத்தொழில்களை அமைத்தல், வெள்ளப் பெருக்குகளைத் தடுத்தல், வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பனவும் இப்பல் நோக்குத் திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. அன்று, நெற் பயிர்ச் செய்கையின் பொருட்டு நீர்ப்பாசனமே அடிப்படைக் குறிக்கோளாக அமைந்தது.

இத்தகைய திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் அரசாங்கம் மக்கள் அனைவரினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முனைகின்றது. இத்திட்டங்களின் மூலம், உலர் வலயப் பிரதேசங்களில் மக்களைக் குடியமர்த்தி, விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்து, மீண்டும் இலங்கையைச் செழிப்புறச் செய்வதே நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று, இத்தகைய திட்டங்கள் உருவாக்கப்பட்ட போதிலும், சனத்தொகை அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. ஆகவே, இன்று நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் ஏனைய சேமநல நடவடிக்கைகளுக்குமெனப் பெருந் தொகையான பணம் செலவிடப்படுகிறது. எனின், அபிவிருத்திக்காகப் பயன்படுத்தக்கூடிய பணம் வரையறைக்குள்ளாகின்றது. இவற்றின் விளைவாகப் பிற நாடுகளிலிருந்து உதவி பெற வேண்டியுள்ளது.

**செயன்முறைகள்:**

1. இலங்கையின் புராதன நீப்பாசனத் திட்டங்களுடன் தொடர்புற்ற, பிரசித்தி பெற்ற மன்னர்களைக் குறிப்பிடுங்கள். அம்மன்னர்களினால் கட்டப்பட்ட குளங்கள் அல்லது நீர்ப்பாசனத் திட்டங்களை மன்னர்களின் பெயர்களுக்கெதிரே எழுதுங்கள்.

2. அண்மைக் காலத்தில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களையும் பல்நோக்குத் திட்டங்களையும் குறிப்பிடுங்கள். இத்திட்டங்கள் பற்றிய விபரங்களைச் சேகரியுங்கள்.

3. துரித மகாவலித் திட்டத்தில் இடம்பெறும் நீர்த் தேக்கங்களைக் குறிப்பிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. தேசிய ஒற்றுமையின் அவசியம்

முன்னர் குறிப்பிட்டது போன்று, மிகப் பண்டைய காலம் முதல், காலத்திற்குக் காலம் இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வந்து இலங்கையைத் தமது தாய் நாடாக்கிக் கொண்ட மக்களினுல் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சியுற்றது. மகாவம்சத்தின்படி, இவ்வாறு முதன் முதலில் வந்தவர்கள் விஜயனும் அவனது 700 தோழர்களுமாவர். இவர்கள் இந்தியாவிலுள்ள 'லாட்ட' பிரதேசத்திலிருந்து (இது வங்காளம் அல்லது குஜராத்தாக இருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது) வந்தார்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது. இவர்கள் வந்த தருணத்தில், இலங்கையிலும் பூர்வீகக் குடிகள் வாழ்ந்து வந்தனர் என்பது நீங்கள் அறிந்த விடயமாகும். இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறிய பின்னர், விஜயனின் பட்டாபிஷேகம் குறித்து அவனுக்கென பட்டத்து அரசியும் அவனுடைய தோழர்களுக்கென மனைவியரும் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டனர்.

பாண்டுவாசுதேவனின் பட்டத்து மகிஷியான பத்ரகச்சாயனு என்ற அரசகுமாரி, நேபாளத்திற்குத் தெற்கே இருந்த பிரதேசம் ஒன்றிலிருந்து வருவிக்கப்பட்டாள் என்றும், அவளுடன் அவளுடைய சகோதரர் உட்படப் பெருந் தொகையினர் இலங்கைக்கு வந்தனர் என்றும் மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது. இவ்வண்ணம் வந்த இவளுடைய சகோதரர்களுள் அநுராத என்பவன் அநுராதகமத்தையும் அதை சூழ்ந்த பிரதேசத்தையும் உள்ளடக்கிய குடியேற்றம் ஒன்றையும் தீர்க என்பவன் திஸாமடுள்ளவையும் அதைச் சூழ்ந்த பிரதேசத்தையும் உள்ளடக்கிய குடியேற்றம் ஒன்றையும் ரோகண என்பவன் உறுகுணைக் குடியேற்றத்தையும் அமைத்தனர் என்று குறிப்பிடப்படுகின்றது.


கஜபாகு மன்னன் இந்தியா மீது படையெடுத்து, தனது தந்தையின் காலத்தில் இலங்கையிலிருந்து கைதிகளாக எடுத்துச் செல்லப்பட்ட 12,000 பேரை விடுவித்து இங்கு கொண்டு வந்ததுடன், இந்தியாவிலிருந்து 12,000 பேரை இங்கு அழைத்து வந்து நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் குடியமர்த்தினுன் என்று மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது.

இப்படியாக இலங்கை வரலாற்றின் ஆரம்ப காலத்தில், இந்தியாவின் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பல்வேறு காலப் பகுதிகளில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த பல்வேறு மொழிகளைப் பேசுகின்றவர்கள் இலங்கைக்கு வந்து பல்வேறு பிரதேசங்களிலும் குடியேறினர் என்பதும் குறியேற்றங்களை அமைத்துக்கொண்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் நிர்வாக மாவட்டங்களில் சனத்தொகைப் பரம்பல்




மூலம்: அரசாங்க அமைச்சு.

தேசப் படம் 3

என்பதும் தெரியவந்துள்ளது. இப்படியாக வந்தவர்கள் இலங்கையைத் தாய் நாடாகக் கொண்டனர். இவர்கள், பிற்காலத்தில் இலங்கையில் தென் இந்திய ஆக்கிரமிப்பு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில், தமது புதிய தாய் நாடாகிய இலங்கைக்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடினர்.

இவ்வண்ணம், இலங்கையிலிருந்த சிறு தொகையினரான பூர்வீகக் குடிகளுடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் குடி பெயர்ந்தவர்களேயும் உள்ளடக்கியதாக இலங்கையின் சனத்தொகை அமைந்துள்ளது என்பதை நீங்கள் விளங்கிக்கொண்டிருப்பீர்கள். இவர்களுட் பெரும்பாலானோர் சிங்கள மொழியைப் பேசியதால் சிங்களவர் எனப்பட்டு சிங்களப் பழக்க வழக்கங்களுக்கமைய வாழுகின்ற பிரிவினராகினர். சிங்களவரைத் தவிர, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு தமக்கே உரிய கலாசாரத்தையும் கொண்ட தமிழர்களும் இந்நாட்டைத் தாய் நாடாகக் கொண்டு வாழ்கின்றனர். இதே போன்று, வியாபாரத்தை நோக்கமாகக் கொண்டு இலங்கைக்கு வந்த அராபிய இனத்தவர்களின் சந்ததிகளாகிய சோனகர், இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்களாகவும் தமிழ், அல்லது சிங்கள மொழியைப் பேசுபவர்களாகவும் தமக்கேயுரித்தான பழக்க வழக்கங்களுக்கமைய வாழ்பவர்களாகவும் அமைந்து இலங்கையைத் தமது தாய் நாடாகக் கொண்டு வாழ்கின்றனர்.

கடந்த இரண்டு நூற்றாண்டுக் காலத்தில், பாதுகாப்புச் சேவைகளில் பணிபுரிவதற்காக இலங்கைக்கு வருவிக்கப்பட்ட மலாய இனத்தவர் இலங்கைச் சனத்தொகையில் அடங்கும் மற்றுமொரு சிறுபான்மையினராவர். பிரித்தானியர் காலத்தில் மத்திய மலேநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட பெருந் தோட்டங்களில் வேலே செய்வதற்காகத் தென் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தொழிலாளர்களின் சந்ததியினர் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களாக அக் கலாசாரத்தைப் பேணி இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு, பல்வேறு இனங்களேயும் சேர்ந்த மக்கள் நம் நாட்டில் வாழ்கின்றனர். இன்று போல அன்றும் சிங்கள மக்கள், பல்வேறு இனத்தவருடன் ஒன்றுபட்டு இணைந்து வாழ்ந்து வந்துள்ளமையை இவ்வரலாற்று உண்மைகள் எடுத்துக்காட்டுகின்றன.

இன்று, ஒரு கோடி ஐம்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கை மக்களின் அமைப்பை இன அடிப்படையிலும், அவர்கள் சகல மாவட்டங்களிலும் பரம்பியுள்ள விதத்தையும் மூன்றும் தேசப் படத்தைப் பார்த்து நீங்கள் அறிந்து கொள்ளலாம். பெருந் தொகையான மக்கள் சிங்களவராக (74 %) இருப்பதனுல் அவர்களேப்பெரும்பான்மையினர் என்று அழைக்கப் பழகிக்கொண்டுவிட்டோம். ஏனேய இனங்களேச் சேர்ந்தவர்களாகிய தமிழர் (12.6 %), சோன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர் (7.1%), இந்தியத் தமிழர் (5.6%), பறங்கியர், மலாயர் (0.7%) போன்ருேரைச் சிறுபான்மையினர் என்கிருேம். இவ் வாறு, மக்கள், பல்வேறு இனங்களைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும் இவர்கள் அனைவரும் இலங்கையின் நிரந்தரப் பிரசை களாவர் என்பதை நீங்கள் இப்பொழுது உணர்ந்திருப்பீர்கள்.

அன்று, ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து சுதந்திரம் பெறு வதற்குச் செய்த போராட்டத்தில் நம் நாட்டு மக்கள், எவ்வினத் தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்றுவதில் ஒன்றுபட்டு இயங்கினர் என்பதைச் சமூகக் கல்விப் பாடத்தில் நீங்கள் கற்றிருக்கிறீர்கள். அதே போன்று தேசிய இயக்கத்தை ஒழுங்கமைத்த பல்வேறு இனங் களையும் சேர்ந்த தேசிய வீரர்களைப் பற்றியும் அறிந்திருப்பீர்கள். திபெத் நாட்டைச் சேர்ந்த பிக்கு எஸ். மஹிந்த, பிரித்தானியா வைச் சேர்ந்த ஸீனியர் அவர்கள், அமெரிக்காவைச் சேர்ந்த கேர்னல் ஒல்கொட் போன்ருேர் அந்நியராக இருந்த போதிலும் நமது நாட்டிற்கு ஆற்றியுள்ள சேவை பற்றியும் நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்.


இதுவரை நாம் கவனத்திற்கெடுத்துக் கொண்ட விடயங்கள் இலங்கைக்கு மட்டும் பொருந்துவனவல்ல. உலகின் பல்வேறு நாடு களிலும் இந்நிலைமையைக் காணலாம். ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த மக்கள் பல்வேறு இனங்களையும் மதங்களையும் சார்ந்த வர்களாகக் காணப்படுகின்றனர். சோவியத் ஒன்றியத்தின் நிலை யும் இதுவே. அங்கு பல்வேறு மொழிகளைப் பேசும் பல இனத்தவர் வாழ்கின்றனர். இத்தகைய நாடுகள் பல உலகிலுண்டு. ஜேர் மனி, இத்தாலி, இந்தோநேஸியா போன்ற நாடுகள் பல அண்மை வரலாற்றுக் காலத்தில் உதித்தவையாகும். சூழ வுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் ஒன்று சேர்வதாலும் அலகுகளாக நாடுகள் அமைவதனுல் ஏற்படும் சிறப்புக்களினுலும் அம்மக்கள் உந்தப்பட்டிருக்கலாம்.

இப்படியாக அமைக்கப்பட்ட நாட்டைத் தமது தாய் நாடாகக் கொண்டு நிரந்தரமாகக் குடியேறிய பின்னர், அந்நாட்டு மக் களைப் பாதுகாத்தல் தமது கடமை என்று கொண்டு செயலாற்றிய முறை இலங்கையின் வரலாற்றில் உள்ளது போன்று உலக வர லாற்றிலும் காணப்படுகின்றது. அண்மை வரலாற்றில், இத்த கைய ஒரு நிகழ்வுக்கு ஐக்கிய அமெரிக்காவை ஓர் உதாரணமாகக் காட்ட முடியும். ஜெர்மனியிலிருந்து வந்து ஐக்கிய அமெரிக்காவில் குடியேறிய ஜெர்மனியக் குடும்பத்தில் பிறந்த படைத் தலைவர் ஐஸன்ஹோவர், இரண்டாம் உலகப் போரின்போது, ஜெர்மனி யைத் தோற்கடிக்க மேற்கொண்ட போருக்குத் தலைமை வகித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைச் சனத்தொகை — 1981
### (சமய அடிப்படையில்)




தேசப் படம் 4

தார். நேச நாடுகளின் படைகளுக்கு ஆணைகளை விடுக்கும் படைத் தலைவராக அவராற்றிய தொண்டு காரணமாக, அவர் அமெரிக்கர்களின் ஆதரவை மட்டுமன்றி, ஹிட்லரின் தோல்வியை வரவேற்ற அத்தனை பேரினதும் வாழ்த்தையும் பெற்றார்.

நமது சிறிய தீவில் வாழும் இலங்கையர் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பது போன்று, பல்வேறு மதங்களைப் பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுபவர்களாகவும் இருக்கின்றனர். உலகம் முழுவதிலும் பரவிக் காணப்படும் நான்கு பிரதான சமயங்களேயும் சேர்ந்தவர்கள் நமது நாட்டில் வாழ்கிறுர்கள். நான்காம் படத்தைப் பார்த்து இதை நீங்கள் விளங்கிக் கொள்ளலாம். இதன்படி, பெரும்பான்மையான மக்கள் பௌத்தர்களாக (69.3 %) அமைகின்றனர். இந்துக்கள் (15.5 %), இஸ்லாமியர் (7.6 %), கிறிஸ்தவர்கள் (7.5%) இலங்கையில் வாழ்கின்றனர்.

எனினும், பௌத்த சமயத்தைப் பின்பற்றுவோரிடையே சிங்களவரும் தமிழரும் உள்ளனர். அதே போன்று கிறிஸ்த சமயத்தைப் பின்பற்றுவோரிடையே சிங்களவர், தமிழர், பறங்கியர் போன்ருேர் இடம்பெறுகின்றனர். கிறிஸ்தவர்களுள் ரோமன் கத்தோலிக்கரும் புரொட்டஸ்தாந்து மதப் பிரிவினரும் காணப்படுகின்றனர். எனவே, சிங்கள, தமிழ் கத்தோலிக்கரும், இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்த சிங்கள தமிழ் கிறிஸ்தவர்களும் உளர்.

சிங்களவருள் மலே நாட்டுச் சிங்களவர், கரையோரச் சிங்களவர் என்பவர்களிடையேயும் கூட, பழக்க வழக்கங்களில் வேறுபாடுகளேக் காணலாம். யாழ்ப்பாணக் குடா நாட்டில் வாழும் தமிழருக்கும், பெருந் தோட்டப் பிரதேசங்களில் வாழும் தமிழருக்கும், கிழக்குப் பிரதேசத்தில் வாழும் தமிழருக்குமிடையே பழக்க வழக்கங்களிலும், பண்பாட்டு அம்சங்களிலும் ஓரளவு வேறுபாடுகளேக் காணலாம்.

இப்படியாகப் பார்க்கும் பொழுது, பொதுவாகச் சிங்களவர், தமிழர் என்று வழங்கப்படுவோரிடையே பொதுத் தன்மைகள் காணப்படுவது போன்று வேறுபாடுகளும் காணப்படுகின்றன என்பதை உணர்வீர்கள்.

இலங்கையைத் தாய் நாடாகக் கொண்ட சிங்களவர், தமிழர், சோனகர், மலாயர், பறங்கியர் போன்ற பல்வேறு இன மக்களும் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற பல்வேறு மதங்களேப் பின்பற்றும் மக்களும், தமிழ், சிங்களம் போன்ற வெவ்வேறு மொழிகளேப் பேசும் மக்களுமாக ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மக்கள், நமது சிறிய தீவின் வளங்களேப் பகிர்ந்து. அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வாழும் ஒரு நாட்டினமாக வாழ்கிறுர்கள். மேலே கூறப்பட்ட வேறுபாடுகளே, அழிவுக்கோ அல்லது பேதங்களுக்கோ காரணமாக்காமல் உலகிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையக்கூடிய உயர்ந்த வளமாகக் கொண்டு செயற்படுதல் முக்கியமாகும்.

இலங்கையராகிய நாம், ஒரே ஒரு வகைப் பூவினுலான பூங்கொத்தைப் போலன்றி, பல்வேறு நிறங்களினுலும் பல்வேறு வடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்களினுலும் பல்வேறு சுகந்தங்களினுலுமான ரம்மியமான ஒரு பூங்கொத்துப் போன்று முழு உலகிற்கும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும். எனவே, நம் ஒவ்வொருவருடைய இன, மத, கலாசாரப் பண்புகளை மதித்து நடப்பதற்குப் பழகுதலும், அவ் வேறுபாடுகளை, நமது நாடு விசேடமாகப் பெற்ற பரம்பரைச் சொத்தாகக் கருதிச் செயலாற்றுதலும் அவசியமாகும். அப்படி இன்றி, நமது பரம்பரைச் சொத்தாகிய இவ்வேறுபாடுகளை, பேதங்களை வளர்ப்பதற்கும் அழிவை ஏற்படுத்துவதற்கும் ஒருவருக்கும் மற்றெருவருக்குமிடையில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கும் பயன்படுத்தினுல், பல்வேறு இனத்தினருக்கும் பல்வேறு மதத்தினருக்கும் இடையே மட்டுமன்றி ஒவ்வொரு இனத்தினருள்ளும் ஒவ்வொரு மதத்தினருள்ளும் பேதங்களையும் அழிவைத் தூண்டும் போராட்டங்களையும் தோற்றுவிப்பதற்கு அவை வழிவகுப்பதைத் தடுப்பது சுலபமான காரியமாக அமையாது. பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நமது நாட்டில் தோன்றிய இன, மத பேதங்கள் போன்ற பிரச்சினைகள் காரணமாக உயிருக்கும் உடைமைகளுக்கும் பெருஞ் சேதம் விளைவிக்கப்பட்டமையை நாம் அறிவோம். இத்தகைய நிகழ்ச்சிகளினுல் தேசிய அபிவிருத்தி நடவடிக்கைகளின் வெற்றி தடைப்பட்டமையை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

அழிவைத் தூண்ட உதவும் தீய சக்தியாக அன்றி, சக்தி மிக்கதொரு நாட்டினத்திற்கு அடிப்படையாக அமையும் விசேடத் தன்மைகள் என்ற வகையில், நமது பரம்பரைச் சொத்தாகிய வேறுபாடுகளைப் பயன்படுத்துவது, இலங்கையினதும் இலங்கையரினதும் சுபீட்சத்திற்கு அவசியமாகும். எனவே, பல்வேறு இன மக்களிடையே பரஸ்பர நம்பிக்கை, ஒருவரையொருவர் பரஸ்பரம் மதித்து நடக்கும் தன்மை, தயை போன்ற பண்புகளைக் கட்டியெழுப்புதல் அவசியமாகும்.

பல்வேறு இனத்தவரினதும் பரம்பரை இலட்சணங்கள் விதவிதமானவை. பல்வேறு சமயங்களினதும் தன்மைகள் வேறுபடும் அதே வேளையில் அவற்றுள் விரும்பியதைப் பின்பற்றும் சுதந்திரம் நமக்குண்டு. எனவே, இலங்கையராகிய நாம், அவை பற்றி அறிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான், நாட்டின் முன்னேற்றத்தின் பொருட்டு மக்களிடையே ஒற்றுமையும் முயற்சியும் உறுதி பெறும். மற்றவர்களின் கருத்துக்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் மதிப்புக் கொடுத்து ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு நாம் முன்வர வேண்டும். ஒருவரது இனத்திற்கோ அன்றி சமயத்திற்கோ இதனுல் எதுவித கேடும் நேராது. நாம் பிறப்பின் காரணமாகக் குறிப்பிட்ட ஒரு இனத்திற்கு உரித்தாகிறேம்; குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசுகிறேம்; குறிப்பிட்ட ஒரு மதத்தைப் பின்பற்றுகிறேம். இவற்றின் நிமித்தம் விருப்புடன் செயலாற்றுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புக்குரிய ஒரு பண்பாகும். எனினும், தமது நாடு தொடர்பாக ஏற்பட வேண்டிய தேசியக் கருத்துக்களின் வளர்ச்சிக்கு இவ்வேறுபாடுகள் பாதகமாக அமையலாகாது. ஒருமைப்பாடு பற்றிய கருத்துக்கள் நமது நாட்டின் விருத்திக்கு அன்று போல் இன்றும் அவசியமே.

வருடாந்தம் அதிகரித்துவரும் சனத்தொகைக்குப் பொருந்தும் வகையில் நம் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படவில்லை. தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பெரிய அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் சிறந்த விளைவுகளைப் பெற வேண்டுமேயாயின், அவ்வபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அனைத்து மக்களினதும் முயற்சியுடன் கூடிய ஒத்துழைப்பு அவசியப்படும். நம் மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுப்பதைக் குறிக்கோளாகக் கொண்டே, மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொதுவாக, நம் எல்லோருடைய வாழ்க்கைத் தரத்தையும் முன்னேற்ற வேண்டுமெனின், இத்தகைய கருமங்களில் ஒன்றுபட்டுச் செயலாற்றுதல் மிக முக்கியமாகும்.

ஆகவே, நமது நாடு, பல்வேறு இனத்தினரையும் மதத்தினரையும் கொண்டு விளங்குகின்றதென்பதை நாம் நன்கு விளங்கிக் கொண்டு ஏற்றுக்கொள்வோம். பல்வேறு இனத்தவரிடையே பரஸ்பர நம்பிக்கையையும் ஒருவரையொருவர் மதித்து நடக்கும் பண்பையும் ஏற்படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் இணைந்து ஒத்துழைப்பதெனத் தீர்மானஞ் செய்வோம். அதற்கிணங்க முன்மாதிரியாக நடந்துகொள்வோம்.

உலக மக்களை நாம் முழுமையாக நோக்கும்போது, உலக சமூகம் பல்வேறு இனத்தவராலானது என்பது தெளிவாகும். நிற வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் விதவிதமான மொழிகள் பேசப்பட்ட போதிலும் மனித இனமானது ஒரு மூலாதாரத்திலிருந்து தோன்றியதொன்றாகும். இவ்வண்ணம், உலக மக்கள், ஒரு மனித குடும்பம் போன்று வாழ்வதெனத் திடசங்கற்பம் பூணுகின்றதோ அன்று, உலக சமாதானம் என்ற கனவு நனவாகும். ஒருவர் மீது ஒருவர் பரஸ்பரம் தங்கியிருத்தல் என்ற கருத்தின் மீது அமைக்கப்பட்ட பொருளாதார சக வாழ்வுக்கும் இது அவசியமான ஓர் அம்சமாகும்.

அன்று வாழ்ந்த மக்களின் வாழ்க்கையையும் இன்று வாழும் மக்களின் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுப்புக்கள், நாம் தீர்க்க வேண்டியுள்ள பிரச்சினைகள், அரசாங்கமும் மக்களும் எதிர்நோக்கும் கஷ்டங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் என்பன பற்றி நீங்கள் இந்நூலைப் படிப்பதன் மூலம் அறிந்து கொண்டிருப்பீர்கள என்பதில் சந்தேகமில்லை.

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கையராகிய நாம் அனைவரும் பேதங்களைக் கைவிட்டு ஒற்றுமையாக ஒரு மனதுடன் செயற்படுவோமாக. இலங்கை மக்களின் எதிர்காலம் உங்கள் கையிலே என்பதை மறந்து விடாதீர்கள்.



**செயன்முறைகள்:**

1. நமது நாட்டின் தேசிய வீரர்களின் நினைவாக வெளியிடப்படும் ஞாபகார்த்த முத்திரைகளைச் சேகரியுங்கள்.
2. இத்தேசிய வீரர்கள், இந்நாட்டு மக்களின் பொருட்டு நிறைவேற்றியுள்ள சேவைகளை தேடிப் பெற்றுக் குறிப்பு எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இவர்கள் எவ்வெவ்வினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கேட்டறிந்துகொள்ளுங்கள்.

4. திபெத் நாட்டைச் சேர்ந்த எஸ். மகிந்தரின் கவிதை ஒன்றை ஆசிரியரின் உதவியுடன் தேடிப் பெற்றுப் படியுங்கள்.


5. இலங்கை வாழ் மக்களுள் பல்வேறு இனத்தவருக்கும் உரிய ஆடை ஆபரணங்களைக் காட்டும் படங்களை அல்லது சித்திரங்களைச் சேகரியுங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org